விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி 18 புதன்கிழமை (02.01.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 014

## புத்தாண்டு தினத்தில் யாழில் பரபரப்பு

# 30 மோட்டார் சைக்கிளில் வந்த வாள்வெட்டு குழுவினர்

### ஊரவர்கள் ஒன்றுசேர்ந்து விரட்டியடிப்பு
### நால்வர் சிக்கினர், 7 மோட்டார் சைக்கிள்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டு தினத்தன்று வன்முறைகளில் ஈடுபடும் நோக்குடன் 30 மோட்டார் சைக்கிள்களில் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதிக்கு வருகை தந்த வாள்வெட்டுக்குழுவினர் ஊரவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்று மதியம் கொக்குவில் காந்திஜி சனசமூக நிலையம் முன்பாக நடைபெற்றது. (23ஆம் பக்கம் பார்க்க)





### இந்த ஆண்டின் முதலாவது
## அமைச்சரவைக் கூட்டம் இன்று

(கொழும்பு)

பிறந்திருக்கும் புது வருடத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் இன்று காலை அமைச் 23☛

## மீசாலை கிழக்கில் 26 வயது இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

மீசாலை கிழக்குப் பகுதியில் இளைஞன் ஒருவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் அதேயிடத்தைச் சேர்ந்த 23☛

### வறுமை ஒழிப்பை முதன்மையாக கொண்டு
## புதிய வருடத்துக்கான அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்க ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்பு

(கொழும்பு)

மக்களின் வறுமை நிலையை ஒழிப்பதனை முதன்மை நோக்காகக்கொண்டு புதிய வருடத்திற்கான அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

போதைப்பொருட்கள் போன்ற சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் சகல சக்திகளையும் இல்லாதொழித்தல் தொடர்பில் விசேட கவனத்துடன் செயற்படும் அதேவேளை, அதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விசேட வேலைத்திட்டத்தினை பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் ஜனாதிபதி வலியுறுத்தினார். 23☛

## புதுவருட பிறப்பில் 500 பேர் வைத்தியசாலையில்

(கொழும்பு)

புது வருட பிறப்பையடுத்து பல்வேறு சம்பவங்களால் காய மடைந்த சுமார் 500 பேர் வரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருப்பதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சமிந்தி சமரகோன் கூறினார்.

பட்டாசு ஒன்றை வாயில் வைத்து எரிய வைத்ததால் காயமடைந்த வெளிநாட்டுப் பிரஜை ஒரு 23☛

## நிதி மற்றும் ஊடகத்துறை ஒரே அமைச்சின் கீழ் சாத்தியமற்றது

### பந்துல குணவர்தன தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக நாடொன்றில் நிதி மற்றும் ஊடகத்துறை என்பன ஒரே அமைச்சின் கீழ் செயற்படுவது சாத்தியமற்றதாகும். நாட்டில் பொருளாதார ரீதியாக பாரிய 23☛



## ஒரு தமிழன் முன்னேறுவதை இன்னொரு தமிழன் விரும்ப மாட்டான்

### நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

ஒரு தமிழன் முன்னேறிச் செல்வதை இன்னொரு தமிழன் விரும்பமாட்டான் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 03☛



## வாள், கத்தியுடன் வவுனியாவில்
### மூன்று இளைஞர்கள் கைது

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டதுடன் முச்சக்கர வண்டியிலி 23☛

## யாழ்.நீதிமன்ற நீதவானாக
### போல் பதவியேற்பு



23☛

### வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்காக
## தெற்கிலிருந்து பயணித்த மனிதாபிமான புகையிரதம் கிளிநொச்சி வந்தடைந்தது

(கிளிநொச்சி)

சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட வடபுல மக்களுக்கான நிவாரணப் பொருட்களுடன் நேற்று முன்தினம் பிற்பகல் மாத்தறையிலிருந்து பயணத்தை ஆரம்பித்த "மனிதாபிமான புகையிரதம்" நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்தது. 23☛




### 24 மணி நேரத்தில்
## 470 சாரதிகள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் முற்பகல் 6.00 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணி வரையான 24 மணி நேரத்தில் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸாரின் சுற்றி வளைப்புக்களில் மது போதையில் 23☛

## யாழ் போதனாவில் திருடிய பெண் நல்லூரில் கைவரிசை காட்டியவர்

### மறியலுக்கு அனுப்பிய யாழ் நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் நோயாளியிடம் தங்க நகையைத் திருடிய குற்றசசாட்டில் கைது செய்யப்பட்ட பெண், நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் பெண் ஒருவரிடம் சங்கிலி அறுத்தவர் என்பது விசாரணைகளில் தெரியவந்தது.

அதனால் வைத்தியசாலையில் நோயாளியிடம் திருடிய 23☛

## அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரியில் நாளை முதல் குறைகளை **பதிகம்** என்ற வாசகர் பகுதி வெளிவருகிறது. நீங்களும் உங்கள் பிரதேசத்தில் உள்ள குறைபாடுகளை பதிக அமைப்பில் எழுதி புகைப்படத்துடன் அனுப்பி வைத்தால் அவை பிரசுரிக்கப்படும்.

(ஆ-ர்)

## 2019ஆம் ஆண்டு ஊழல் இல்லை
### ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டை ஊழல் இல்லாமல் சேவையாற்றும் வருடமாக பெயரிட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 23☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்வி நிறுவனத்தில் வணிகப்பிரிவில்
கல்வி கற்று மாவட்ட நிலையில் முதலாம்
நிலைபெற்ற **சூ.சஞ்ஜீவகிருஷ்ணா**



அவர்களையும் மேலும் மாவட்டநிலையில்
முன்னணி பெறுபேறுகளை பெற்றுத்தந்த

| | |
|---|---|
| ச.சஜனிகா 2A,B | க.கிருசாயினி A,B,C |
| ச.கஜனி A,2B | கு.விதுசா A,B,C |
| ர.கிசாளினி A,B,C | தனோஜினி A,B,C |
| க.அபியுத் A,B,C | ர.நிதர்சினி 3B |

மாணவர்களை பாராட்டி வாழ்துவதோடு அவர்கட்கு
கற்பித்த ஆசிரியர்களான

**திரு.சி.சத்தியசீலன் திரு.ச.சஜீவன் திரு.செ.திருச்செல்வகுமார்**

மற்றும் கருத்தரங்கு உதவிகளை வழங்கிய
திரு.தி.திவ்யரூபன் அவர்களையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம் (6875)

**A/L**

வணிகப்பிரிவிற்கான Day மற்றும் 2021ற் கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
05.01.2019 சனிக்கிழமை
நேரம் - 3.00 P.M

நிர்வாகி
திரு. வே.யோகப்பிரகாஸ்

**IBS தருமபுரம் T.P - 0779226811**


## 2018ஆம் ஆண்டில் போதைப்பொருள் சுற்றிவளைப்புக்களில் 95,797 பேர் கைது

கடந்த 2018ஆம் ஆண்டு முன்னெடுக்கப் பட்ட போதைப்பொருள் ஒழிப்பு சுற்றி வளைப்புக்களின் போது 95,797 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடக பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் 736 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட் கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் 40,860 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதுதவிர, 4585 கிலோ கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் அது தொடர்பில் 54,575 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களின் போது 19 கிலோ கிராம் கொக்கேய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்ட தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த சுற்றிவளைப்பு தொடர்பில் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதவிர, 13 கிலோ கிராம் ஹசீஸ் போதைப்பொருளும், 6 கிலோ கிராம் ஐஸ் ரக போதைப்பொருளும் மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

குறித்த போதைப்பொருள் வர்த்தகத் துடன் தொடர்புடைய 345 பேர் கைது செய் யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரி வித்துள்ளார். (ம-3)

## யாழ். இந்துக் கல்லூரியில் 23 மாணவர்களுக்கு 3ஏ

அண்மையில் வெளியாகிய க.பொ.த உ/த பரீட்சைப் பெறுபேற்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 23 மாணவர்கள் 3ஏ சித்தி பெற்றுள்ளனர்.

அந்த வகையில் கணிதப்பிரிவில் தமிழ் மொழி மூலம் 13 மாணவர்களும் ஆங்கில மொழி மூலம் 03 மாணவர்களும் 3ஏ சித்தி பெற்றுள்ள தோடு உயிரியல் பிரிவில் தமிழ் மொழி மூலம் 03 மாணவர்களும் ஆங்கில மொழி மூலம் 03 மாணவர்களும் 3ஏ சித்தி பெற்றுள்ளதோடு வர்த்தப்பிரிவில் தமிழ்மொழி மூலம் ஒரு மாணவனும் 3ஏ சித்தி பெற்றுள்ளதோடு மொத்தமாக 23 மாணவர்கள் 3ஏ சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த் துள்ளனர். (ம-3)

## 2019ஆம் ஆண்டு முதலாம் தவணை இன்று ஆரம்பம்

(யாழ்பபாணம்)

அரசாங்க மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் 2019ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை இன்று ஆரம்பமாகிறது.

இதேவேளை புதிய பாடசாலை தவணை ஆரம்பமாவதற்கு முன்னர் பாடசாலை வளாகத்தை சுத்தப்படுத்துமாறு சுகாதார ஊக்குவிப்பு பணியகம் உரிய தரப்புகளுக்கு அறிவித்திருந்தது. (ம-3)


**WESTERN UNION WU**
moving money for better (ச-9072)

உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு தரிசு, தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent
**SRI MURUGAN**
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## அறை வாடகைக்கு

திருநெல்வேலி விவசாய பண்ணை அருகில் பலாலி வீதியில் சகல வசதிகளுடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு (மகளிர் மட்டும்) (6881)

**T.P: 0786155929**



## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை ஜோசப்

(கோவிற்குடியிருப்பு, முல்லைத்தீவு)



பிறப்பு: 18.09.1948 இறப்பு: 31.12.2018

இரணைப்பாலையைப் பிறப்பிடமாகவும் கோவிற்குடியிருப்பு முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை ஜோசப் அவர்கள் நேற்றுமுன்தினம் 31.12.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி அந்தோனிப்பிள்ளையின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற திரு. திருமதி யோசேப்பின் மருமகனும் மேரி திரேசாவின் அன்புக் கணவரும் விக்ரர் யோய் (கிசோக் - லண்டன்), கில்மன் சாள்ஸ் (கில்மன் - சுவிஸ்), கிங்சிலிராஜ், சீதபொன்கலன் (கிருபா - பிரான்ஸ்), ஜெறாட் ஜெயகரன் (கிரி), அமரர் மேரி றொக்சி, கனிஸ்ரன் யோய் (டினோஜன் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி வசந்தினி விக்ரர் யோய் (லண்டன்), திருமதி வெற்றிசியா கில்மன் சாள்ஸ் (ஆசிரியை - உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம்), திருமதி டயனி சீத பொன்கலன் (பிரான்ஸ்), திருமதி மேரிஸ்ரெலா ஜெறாட் ஜெயகரன் (ஆசிரியை - யா/உடுத்துறை மகா வித்தியாலயம்), திருமதி வக்சலா கனிஸ்ரன்யோய் ஆகியோரின் அன்பு மாமனாரும் றொக்சன், றொனின்சன், றைசன் (லண்டன்), சியான், டெவினா (பிரான்ஸ்), ஜெலக்சினி, யன்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ் சென்ற செலஸ்ரின், மனுவேற்பிள்ளை, அல்பிறட், கில்பேட் மற்றும் இருதயநாயகி (லீலா - லண்டன்), அல்போன்ஸ் (ஜேர்மனி), அருட்தந்தை அகஸ்ரின் (பங்குத்தந்தை சில்லாலை) ஆகியோரின் சகோதரனும் காலஞ் சென்ற மிக்கேல்பிள்ளை மற்றும் அன்ன றோஸ், யேசுரட்ணம், இம்மானு வல், யசிந்தா, காணாமல் ஆக்கப்பட்ட எட்வேட் ஜெயராஜா, மரிய யூக்கறிஸ்ரா (யாழ்.போதனா வைத்தியசாலை), ஜெறோம் எமிலியா (மல்லிகா - இந்தியா), அன்ரன் ஜெயராணி (றஞ்சினி), கமிலஸ் (யூட் - டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கத் திருப்பலி முல்லைத்தீவு புனித யூதாததேயு ஆலயத்தில் நாளை (03.01.2019) வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு மாத்தளன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-4978)

கோவிற்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

தகவல்:- குடும்பத்தினர்
அருட்தந்தை அ.அகஸ்ரின்



## வைத்திய சேவை

உங்கள் வீடுகளில் வைத்து பராமரிக்க கஷ்டமான படுக்கை நோயாளர்கள் எமது வைத்திய நிலையத் தில் வைத்து பராமரிக்கப்படுவர். (6870)

**அழையுங்கள் 077 873 0129**

## வேலைவாய்ப்புக்கான அரிய சந்தர்ப்பம்

எமது நிறுவனத்தில் புதிய கிளைகளுக்கான முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் பணி யாளர்கள் புதிதாக இணைக்கப்படவுள்ளனர். O/L, A/L படித்தவர் களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஏனையவர்களுக்கு அடிப்படை பயிற்சிநெறியுடன் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும்.

**புதிய கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ள இடங்கள்:**
- வவுனியா மாவட்டம் (செட்டிக்குளம்)
- கிளிநொச்சி மாவட்டம் (பரந்தன்)
- மன்னார் மாவட்டம் (பேசாலை, மன்னார்)
- முல்லைத்தீவு மாவட்டம் (முல்லைத்தீவு, மாங்குளம்)
- திருகோணமலை
- அம்பாறை

கவர்ச்சிகரமான சம்பளத்துடன் EPF, ETF மற்றும் வெளிநாட்டு சுற்றுலா வசதிகள் பெற்று தரப்படும்

**தொடர்புகளுக்கு:0766564030,0770064030**

## ஓர் அரிய சந்தர்ப்பம்
## A/Lல் சித்தியடையவில்லையா?

உங்கள் எதிர்காலத்துக்கு உத்தரவாதம் அளிக்கின்றோம். எம்மு டன் இணைந்து உங்கள் வாழ்க்கையை வெற்றிகரமாக்குங்கள்.

**இன்றே அழையுங்கள். முன்பதிவுகளை ஏற்படுத்தும் 40 பேருக்கு முன்னுரிமை.**

**முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார்** போன்ற மாவட்டத்தினருக்கு உணவு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(6884) தொடர்புகளுக்கு: **வர்ஷிகா**
**076 676 7620, 021 567 9001**

## அதிபர் சேவை தரம் 3 வகுப்புக்கள்

**பிரிவு I**
பிரதி ஞாயிறு
9.00 → 3.00
மணிவரை

**பிரிவு II**
புதன் (இன்று)
வியாழன்
பி.ப 4.30 → 7.30
மணிவரை

*சகல போட்டிப் பரீட்சைகளுக்குமுரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
0766883394
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்)

## RAVEENS EMC
### KARAVEDDY

1AB தர பாடசாலை அதிபர்களுக்கு தாழ்மையான விண்ணப்பம்

தங்கள் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை ஆங்கில மொழி மூலம் (English Medium) கல்வி கற்கின்ற மாணவர்கள் இருப்பின்
தயவு செய்து அவர்களை க.பொ.த உயர்தரத்தில் ஆங்கில மொழி மூலம் பரீட்சைக்கு தோற்ற வாய்ப்பளிக்கவும் (C-4979)


இவ் வாய்ப்பை நீங்கள் ஏற்படுத்த தவறும் பட்சத்தில்:
- மிகுந்த சிரமத்தின் மத்தியில் தமிழ் மொழியில் கல்வி கற்றல்
- க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளில் வீழ்ச்சி
- பல்கலைக்கழக கல்வியில் மொழி சார் பிரச்சனையை எதிர் நோக்கல்

ஆகிய பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி நேரிடும்

P. Easwaranathan (B.Sc (Hons) Agric Dip in Edu)
Director
021 226 3321

# இன்னொரு தமிழன் மேலெழுவதை ஒரு தமிழன் விரும்பமாட்டான்

## நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு



எங்கள் தமிழ் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களுக்கு ஒரு குறைபாடு உண்டு. அவர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். இலங்கையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். வேறெந்த நாட்டைச் சேர்ந்தவராகக் கூட இருக்கலாம். தம்முடைய மக்கள் மத்தியில் "தான்" என்ற மமதை கொண்டவர்கள் அவர்கள். இன்னொரு தமிழன் மேலெழுவதை ஒருதமிழன் விரும்பமாட்டான் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். வாராந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஒரு வித்தியாசமான கேள்வி ஒன்று என் மீது தொடுக்கப்பட்டுள்ளது. அதனை இவ்வருட ஆரம்பத்தில் ஆராய்வோம்.

கேள்வி:- நீங்கள் வடகிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் நலன் பற்றி மட்டும் பேசிவருகின்றீர்கள். மலையகத் தமிழர்களும் எங்களைச் சேர்ந்தவர்களே என்று மேடைகளில் பேசுகின்றீர்கள். ஆனால் அவர்கள் நலம் பற்றி எதுவுமே கூறுவதில்லை. தோட்டத் தொழிலாளர்களுக்கு இதுவரையில் எந்த வித மேலதிகக் கொடுப்பனவும் கொடுக்கப்படவில்லை. அதுபற்றி உங்கள் கருத்தைத் தெரிவிப்பீர்களா?

பதில்: "எங்கள் தமிழ் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்களுக்கு ஒரு குறைபாடு உண்டு. அவர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். இலங்கையைச் சேர்ந்த வர்களாக இருக்கலாம். வேறெந்த நாட்டைச் சேர்ந்தவராகக் கூட இருக்கலாம். தம்முடைய மக்கள் மத்தி யில் "தான்" என்றமமதை கொண்டவர்கள் அவர்கள். இன்னொரு தமிழன் மேலெ முவதை ஒரு தமிழன் விரும்பமாட்டான். தனக்கில்லாததெது மற்றவனிடம் இருக்கின்றது என்றே சிந்திப்பான். தன்னிலும் பார்க்க மற்றவரிடம் சிறப்பம்சங்கள் இருந்தால் அவற்றை மட்டந்தட்டப் பார்ப்பான். ஏதாவது கூறி அடுத்தவன் மேலெழுவதைத் தடுக்கப் பார்ப்பான். தமிழர் வாழும் எந்த இடம் சென்றாலும் இவ்வாறான செயற்பாடுகளை நாம் காணலாம். மடகஸ்காருக்குப் பக்கத்தில் மீள் ஐக்கியத் தீவுகள் என்று ஒரு சிறுதீவு உண்டு. Reunion Island என்று அதை அழைப்பார்கள். அங்கு வாழும் தமிழர்கள் எந்தப் பேதமுமின்றி, எரிச்சல் புகைச்சல் இன்றி, பொறாமை இன்றி வாழ்வதாகக் கூறுகின்றார்கள். ஒரு வேளை அத்தீவுமட்டும் விதிவிலக்கோ நான் அறியேன்.

கேள்வி ஏதோ ஒன்றாக இருக்க நீங்கள் வேறு விடயங்களைப் பற்றிப் பேசுகின்றீர்களே என்று நீங்கள் எண்ணக்கூடும். என் இதுவரையான கூற்றில் உங்கள் கேள்விக்குச் சம்பந்தமிருக்கின்றது. அதாவது மலையக மக்களின் சகல கட்சிகளும் தொழிற்சங்கங்களும் அவற்றின் தலைமைத்துவங்களும் சேர்ந்து தம் மக்களின் ரூ.1000 கோரிக்கை பற்றி பொதுவான, ஐக்கியமான ஒரு கோரிக்கையை விடுத்துள்ளார்களா? தமக்குள் எந்தப் பேதமுமின்றி கோரியுள்ளார்களா? தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூபா 1000 நாட் கூலியாகக் கிடைக்க வேண்டும் என்பதிலும் பார்க்க யார் அதனைப் பெற்றுக் கொடுக்கப் போகின்றார்கள் என்பதிலேயே தோட்டத் தொழிலாளர்களின் தலைமைகள் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள் போல் எனக்குத் தெரிகின்றது.

இன்று யாழ்ப்பாணத்தில் ரூபா 1200/=நாட் கூலிக்குக் குறைவாக ஒருவரை எடுக்க முடியாது. அதுவும் அவர்கள் வேலை செய்வது காலை மற்றும் மதியதேநீர் நேரத்தையும் பகல் போசன வேளையையும் முன்னி லைப்படுத்தியே. நல்ல வேலை செய்தால்கூட குறைவான வேலையையே செய்வார்கள். இழுத்தடிப் பார்கள். ஆனால் ரூபா 1200/=க்குக் குறைய ஒருவரை எடுப்பது கடினம். தோட்டத் தொழிலாளர்கள் அதிகாலை எழுந்து, பனியில் நனைந்து, பலவித ஜந்துக்களால் தாக்கப்பட்டு, குறிப்பிட்ட அளவு கொழுந்துகளையேனும் பறிக்க வேண்டிய கடப்பாட்டுக்குக் கட்டுப் பட்டு அவற்றைப் பறிப்பதும் அவற்றைக் கொண்டுசென்று ஆலையில் சேர்ப்பதுமாக முழு நாளும் வேலையில் ஈடுபடுகின்றார்கள். மாதம் ஒரு குறிப்பிட்ட அளவுநாட்கள் வேலைசெய்தால் இவ்வளவு சம்பளம், இல்லையேல் குறைந்த சம்பளம் என்று இருக்கின்றது. முழுச் சம்பளம் தொழிலாளர்களுக்குக் கிடைக்காது இருப்பதற்கு தோட்ட நிர்வாகம் வேலை செய்ய வேண்டிய நாட்களைக் குறைத்து விடுவார்கள். இதையும் ஏற்று அவர்களுக்கு தற்போது கிடைக்கும் ஒருநாட் சம்பளத்தை வைத்து பலவற்றையும் சமாளிக்க வேண்டியுள்ளது. குழந்தைகளைப் பள்ளிக்கூடம் அனுப்புவது, நோயுற்ற குடும்பத்தவரைப் பராமரிப்பது, மேலெழும் வாழ்க்கைச் செலவுகளைச் சமாளித்து குடும்பத்தைப் பராமரிப்பது என்று பலவித செலவுகளுக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது.

அவர்கள் சம்பளத்தில் ஒரு தொகை தொழிற்சங்கங்களுக்கு சந்தாப் பணமாக கட்டப்படுகிறது. எனினும் தொழிலாளர்கள் கண்ட மிச்சம் அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தமது ஆணவப் போர்களில் ஈடுபட்டுக் கொண்டு வருகின்றார்கள். அரசியல் முரண்பாடுகளில் உழன்று கொண்டு இருக்கின்றார்கள். மலையகக் கட்சிகள் பலவற்றின் தலைவர்கள் என் அன்புக்குரியவர்கள். ஆனால் அவர்களின் ஒற்றுமையற்ற செயற்பாடுகள் என் மனதை வருத்துகின்றது.

சகலகட்சிகளின் தலைவர்களும் ஒன்று சேர்ந்து தமது மக்கள் நலத்தை முன்னிட்டு தோட்ட முதலாளிமார்களுடனும் அரசாங்கப் பிரதிநிதிகளுடனும் பேச வேண்டும். அல்லது எல்லோரும் சேர்ந்து ஒரு சிரேஷ்ட சட்டத்தரணியைப் பேசவிட வேண்டும். பேசுமுதல் கடந்த பத்து வருட தோட்டக் கணக்குகளை எம்மவர் மிக நுணுக்கமாகப் பரிசீலிக்க வேண்டும். உண்மையில் அவர்கள் ரூபா 1000/=நாள் சம்பளத்தைக் கொடுக்க முடியாத நிலையில் உள்ளார்களா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். எனக்குத் தெரிந்த வரையில் கணக்குகள் கரவாகத் தயாரிக்கப்படுகின்றன. செலவுகளைப் பெருப்பித்து தொழிலாளர்களுக்குக் கொடுக்கப் பணமில்லை என்று கூறப்படுகிறது என்றே நம்ப வேண்டியதாய் உள்ளது. மலையகத் தமிழர்களுக்கு உண்மையில் நாளாந்தம் ரூ 1200/= ஐயாவது கொடுக்க வேண்டும். உண்மையில் கொடுப்பனவு செய்ய முதலளிமாருக்குப் பணம் குறைவென்றால் அரசாங்கம் தலையிட்டு நிதியுதவி செய்ய வேண்டும். நாட்டின் மொத்த வருமானத்திற்குப் பங்களிப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்கள். அவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தி தோட்டங்களின் பராமரிப்பை விருத்திசெய்ய அரசாங்கம் முன்வர வேண்டும்.

எமதுதொழிற்சங்கத் தலைவர்கள்,கட்சித் தலை வர்கள் ஆகியோர் தமது தொழிற்சங்கங்களையும், கட்சிகளையும் முன்னேற்று வதை மட்டும் பார்க்காமல் தோட்டத் தொழிலாளர்களின் நலனில் உண்மையான அக்கறை எடுக்க முன்வர வேண்டும். இல்லையேல் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களுக்குச் சந்தாப்பணம் தாம் கட்ட வேண்டிய அவசியமில்லை என்று அந்தப் பணத்தைத் தமது மாதாந்தச் செலவுகளுக்குப் பாவிக்க நேரிடும். இவ்வாறான ஒரு கோரிக்கை தற்போது கட்சிகள், தொழிற்சங்கங்கள் முன்னிலையில் முன்வைக்கப் பட்டுள்ளது என்று அறிகின்றேன்.

மலையகத் தொழிற்சங்கங்கள்,கட்சிகள் ஆகியன தமது தொழிலாளர்கள் நாளாந்தம் படும்பாட்டை சித்திரித்துக் காட்டவேண்டும். குறும்படங்கள் போன்றவை தயாரித்து அரசாங்கத்தினருக்கும் எம்மிடம் தேயிலை வாங்கும் நாட்டுமக்களுக்கும் அந்த நாடுகளின் அரசாங்கத்தினருக்கும் போட்டுக் காட்ட வேண்டும். வெறும் தேயிலை விற்பனைப் பிரசாரமாக அமையாது அவை மக்களின் நாளாந்த அல்லல்களை எடுத்துக் காட்டுவதாய் அமைய வேண்டும். இவ்வாறான இன்னல்களில், இடர்களில் சிக்கிவாழும் எமது மக்களுக்கு நாளொன்றுக்கு ரூ1000/= போதுமா என்ற கேள்விக்குப் பதில் கோர வேண்டும்.

இப்பொழுது உங்கள் கேள்விக்கு வருகின்றேன். வட கிழக்கு மாகாண மக்களின் குறைகள் அடிப்படையில் அரசியல் சார்ந்தது; உரிமைகள் சார்ந்தது; உரித்துக்கள் சார்ந்தது; அதற்காகப் பொருளாதாரம் சார்ந்ததில்லை என்று கூறவரவில்லை. ஆனால் மலையகத் தமிழ் மக்களின் குறைகள் பெரும்பாலும் பொருளாதாரமே சார்ந்தது. வடகிழக்கு மாகாண மக்களின் உரிமைகள் கோரி பயணிப்பது ஒரு பாதை. மலையக மக்களின் பொருளாதார விருத்தி நோக்கிப பயணிப்பது பிறிதொருபாதை. ஆகவே மலையக மக்கள் மீது எமக்குக்கரிசனை இல்லை என்று கூறமுடியாது. தேவை ஏற்படும் போது எமது கருத்துக்களை இது போல் பகிர்ந்து கொள்வோம். மலையகத் தொழிலாளர்கள் சார்பில் குரல் கொடுக்க நாம் தயாராக உள்ளோம். ஆனால் குரல் கொடுத்தால் மலையகக் கட்சித் தலைவர்களும் தொழிற்சங்கத் தலைவர் களும் கூறுவார்கள் "உமக் கேன் இவ்வளவு கரிசனை?" என்று." விக்னேஸ்வரன் மலையகத் தமிழ் மக்களின் விடயங்களில் அநாவசியமாக உள்ளிடுகின்றார். அவர் மலையகத்தில் தமது கட்சியைப் பிரபல்யப்படுத்தப் பார்க்கின்றாரோ" என்றெல்லாம் கேள்விகள் எழுப்புவார்கள். இதனால் தான் நாங்கள் எங்கள் கருத்துக்களை வெளியிடாது அவர்கள் மீது அனுதாபத்துடன் பயணிக்கின்றோம்.

ஒரு சில விடயங்களை நான் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. வருங்காலத்தில் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள் தொடர்ந்து கொழுந்து பறிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது மடத்தனமானது என்று நான் கருதுகின்றேன். இளைய தலைமுறையினர் படித்துமுன்னேறத் தலைப்பட்டுள்ளார்கள். தோட்டத் தொழிலாளர்களின் தற்போதைய சம்பளம் மற்றவர்களை ஈர்க்காதது அவர்கள் வேறு தொழில்களை நாடிச் செல்ல ஒரு காரணம் எனலாம். சொகுசு வாழ்க்கையை எமது இளம் சந்ததியினர் நாடுவது மற்றொரு காரணம் எனலாம். தொடர்ந்து தோட்டத் தொழிலாளர்களை வறுமையின் விளிம்பில் வைத்திருந்து வருவது எத்தகைய எதிர்காலப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அத்துடன் தற்போது தோட்ட நிர்வாகத்தினர் நீண்ட காலத் திட்டங்களுக்கு அமைய நடக்காது கிடைத்ததைச் சுருட்டிக்கொள்ளத் தலைப்படுகின்றார்கள் என்று கேள்விப்படுகின்றோம்.

தேயிலைக்குப் பதில் வேறு பயிர்ச்செய்கைகளில் நாட்டம் காட்ட முன் வந்திருப்பதும் தெரியவருகின்றது. தோட்டத் தொழிலாளரின் கட்சிகளும் தொழிற் சங்கங்களும் நீண்டகால திட்டங்களைத் தீட்டி மக்கள் நலம் கருதி நடந்து கொள்வது அவசியம். எமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பளித்துள்ளீர்கள். உங்கள் கேள்விக்கு நன்றி என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# எதிர்க்கட்சித் தலைவர் பதவியை பொறுப்பேற்கப் போவதில்லை

## குமார வெல்கம நிராகரிப்பு



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவை எதிர்க்கட்சி தலைவராக நியமிக்குமாறு சபாநாயகருக்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால்தான்ஒருபோதும் எதிர்க்கட்சி தலைவர் பதவியை பொறுப்பேற்க போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சிக் தலைவர் பதவியை குமார வெல்கமவிற்கு வழங்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சபாநாயகருக்கு விடுத்துள்ள கோரிக்கை தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரா.சம்பந்தனைத் தவிர்த்து எதிர்க்கட்சி தலைவர் பதவியை பிறிதொருவருக்கு வழங்க சபாநாயகர் தீர்மானித்தால் அப்போது மகிந்த ராஜபக்ஷவிற்கு அப்பதவியை வழங்குங்கள் என்று நான் முன்மொழிவேன்.

ஏனெனில் மகிந்த ராஜபக்ஷ சிறந்த அரசியல் தலைவர்.

இவர் கடந்த காலங்களில் ஒரு சிலரின் அரசியல் சூழ்ச்சிக்கு இணங்கியமையே பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியது. எவ்வாறு இருப்பினும் ஒரு போதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டும், மகிந்த ராஜபக்ஷவை விட்டும் விலகமாட்டேன் என குமார வெல்கம தெரிவித்தார். (இ-7)


# B.Sc, BA, B.Com, BBA

## காமராசர் பல்கலைக்கழகம்,மதுரை(வெளிவாரி)

* மேற்குறிப்பிட்ட பாட நெறிகளுக்கு பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* A/L கணிதம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம், தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் முழுமைச்சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்க தகுதியுடைவர் ஆகும்
* A/L 2018இல் பரீட்சை முடிவு வெளியானவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
* B.A இல் வரலாறு, பொருளியல், தமிழ், ஆங்கிலம், பொதுநிர்வாகம், அரச அறிவியல், சமூக விஞ்ஞானம் ஆகிய பிரிவுகள் ஒன்றினை தெரிவு செய்யமுடியும்.
* இப்பட்டநெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய 'ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
* பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக செய்து தரப்படும். பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது நிறுவனமாகிய புதிய உயர்கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.
* பட்டநெறிகளுக்கான விரிவுரைகள் ஆரம்பம்:-05.01.2019 (காலை 8மணி)

குறிப்பு:-

1. M.A, M.Com, M.Sc, MBA, PGDIP இவற்றிற்கும் உரிய பதிவு நடைபெறுகின்றன.
2. விரிவுரைகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கான தங்குமிட வசதி இலவசம்

(சி-4969)

யாழ் இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம்
021 222 8148, 077 314 4762
077 846 9721

புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

# கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மற்றுமோர் சாதனைப் பயணம்.......!




2016/2017 தேசிய உற்பத்தி திறன் போட்டியில் தேசிய ரீதியில் **முதலாம் இடத்தை** பெற்ற கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தையும் மாவட்டச் செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் வடமாகாணத்திற்கும் இதன்மூலம் பெருமையை தேடி தந்துள்ளது.

உத்தியோகத்தர்கள்

கிளிநொச்சி மாவட்ட அரச திணைக்களங்கள்

# நான்கு தமிழ் பொலிஸாரை இலக்கு வைத்து தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் கடந்த இரண்டரை மாதத்துக்குள் நான்கு தமிழ் பொலிஸாரும் ஒரு தமிழ் பேசும் பொலிஸாரும் தாக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. குறித்த தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தமிழ் பொலிஸார் ஈடுபட்டு வரும் வேளையில் அவர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் அதிகரிக்கின்றமையால் மக்களிடையே பல்வேறுபட்ட சந்தேகங்களை ஏற்படுத்துவதாகத் தெரிவித்தனர்.

வதிரிச் சந்தி, உப்புவெளி மந்தான் வீதி மற்றும் துன்னாலைப் பகுதிகளில் இடம்பெற்ற வெவ்வேறு சம்பவங்களில் தமிழ் பொலிஸாரே தாக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

இதனால் நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் கடமையாற்றுவதற்கு தமிழ்ப் பொலிஸார் பின்னடிப்பதாகவும் அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்த சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-60)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் வல்லிபுரம் சோமசுந்தரம்

எமது பாடசாலை உப அதிபர் திருமதி யாழினி சத்தியசீலன் அவர்களின் பாசமிகு மாமனார்

அமரர் வல்லிபுரம் சோமசுந்தரம்

அவர்களின் மறைவினால் துயருற்றிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/ கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1980 09 24

இறப்பு 2016 01 02

(இ-4969)

அமரர் கெங்கேஸ்வரன் தீபா

ஒவ்வொரு வருடமும் பிறக்கும் போது எம் இதயம் வெடிக்கின்றது. தாங்கொணா துன்பத்தில் உமையிழந்து தவிக்கின்றோம் எம் செல்வமே எத்தனை வருடங்கள் ஆனாலும் உமை மறவோம் துயரில் துடிக்கும்

4 ஆம் வட்டாரம், முள்ளியவளை.

அம்மா, அப்பா, கணவர், மகள் உசாளினி, சகோதர, சகோதரிகள்.

## 31 ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



(இ-4968)

அமரர் கந்தையா பேரம்பலம் (இரும்பன் பேரம்பலம்)

மலர்வு:- 26.10.1946

உதிர்வு:- 03.12.2018

கடந்த 03.12.2018 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் கந்தையா பேரம்பலம்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் இருந்து முகநூல், தொலைபேசி, குறுந்தகவல்கள், மின்னஞ்சல், துண்டுப் பிரசுரம், பதாகை வாயிலாகவும் மலர்வளையம், மலர்மாலையிட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வழங்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இறுதி அஞ்சலியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு சிவபதப் பேறு குறித்த அந்தியேட்டி நிகழ்வுகள் (31.10.2018) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் யாவும் (02.01.2019) இன்று புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இல.64/1, சிவநகர்,உருத்திரபுரம். குடும்பத்தினர்.

## இராசி பலன்

**02.01.2019**

மார்கழி 18, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு

துவாதசி பின்னிரவு 4.37 மணிவரை

விசாகம் பிற்பகல் 12.37 மணிவரை

சுபநேரம் 5.00-6.30 மணிவரை

இராகுகாலம் 12.30-2.00 மணிவரை

சித்தாமிர்தம்

வளவன்

கிரகநிலை

சந்திராஷ்டமம்

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| | | | ராகு |
| கேது | | | |
| சூரி, புத, சனி | சுக், சந், குரு | | |

**மீனம்:** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**மேடம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், கொடுக்கல்-வாங்கல்களில் நிதானம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கஷ்டங்கள் தீரும், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்:** தொழில் நலன் கருதிய திட்டங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கடகம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் வெற்றி தரும் வகையில் அமையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு:** ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தொழில் நலன் கருதிய பயணமொன்று இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், போசன சுகமுண்டு, குரு வழிபாடு குதூகலம் தரும்.

**துலாம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர்.

# "சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வரங்கு" ஆய்வுக் கட்டுரைகள் அனுப்பக் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

"சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வரங்கு" என்னும் தொனிப்பொருளில் சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டில் இவ்வருடம் "சிறப்பான எதிர்காலத்தை நோக்கிய மனித மூலதனத்தை மாற்றியமைத்தல்" என்னும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்கான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக பிரதான மண்டபத்தில் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில்,

நோக்கம்

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் ஆய்வின் தூரநோக்கமானது முகாமைத்துவமற்றும் வணிகத் துறைகளில் சர்வதேச மதிப்புக்குரியதும் பிராந்திய தொடர்புடையதுமான ஆய்வுநடவடிக்கையை உருவாக்குதலாகும்.

சமகால முகாமைத்துவத்தின் மீதான சர்வதேச ஆய்வரங்கு 2019 ஆனது அறிவை மெரு கூட்டவும் கல்வியாளர்களுடனும் தொழில்சார் வல்லுநர்களுடனும் நட்புறவை ஏற்படுத்தவும் உதவி செய்கிறது.

சமகால முகாமைத்துவம் மீதான சர்வதேச ஆய்வரங்கு-2019 ஆனது பல நாடுகளில் அதிகரிக்கவும் உதவி செய்யும்.

சிறப்பான எதிர்காலத்தை நோக்கி மூலதனத்தை மாற்றியமைத்தல் **(Reshaping human capital towards a better future)** என்ற தொனிப் பொருளில் ICCM 2019 கால் பதிக்கிறது. சூழல் இசைவாக்கம் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளல் தற்கால உலகின் புதுமைகளூடாகச் சவால்களை எதிர்கெள்வதற்கான உறுதிப்பாட்டின் மூலம் மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்தும் மாற்றி அமைத்தும் தற்கால உலகின் போட்டித்தன்மைகளை அடைவதனை வலியுறுத்துகிறது. இவ்வாய்வரங்கிற்கான ஆய்வுக்கட்டுரைகள் பின்வரும் உப தலைப்புக்களின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படவுள் ளன.

கணக்கீடு, நிதி மற்றும் நிறுவன நல்லாளுகை, வங்கியியலும் காப்புறுதியும், வணிகமும் சட்டச் சூழலும், சமூகப் பொறுப்பும் வணிக ஒழுக்கமும், கலாசாரமும் நிலை பேண்தகைமையும், பொருளியலும் சமூகக் கொள்கையும், கல்வி, முயற்சியாண்மையும் சிறு வணிக ஒழுக்கமும், சுகாதாரமும் பொது துறை முகாமைத்துவமும், மனிதவள முகாமைத்துவம், மனிதப் பண்பியலும் சமூக விஞ்ஞானமும், கைத்தொழில் உறவுகள், சர்வதேச வர்த்தகம், அறிவு முகாமைத்துவம், நிறுவன நடத்தை, சந்தைப்படுத்தலும் விநியோகச் சங்கிலி முகாமைத்துவமும், செயற்பாட்டு முகாமைத்துவம், செயற்றிட்ட முகாமைத்துவம், பிராந்திய மற்றும் சமூகத்திட்டமிடல், தந்திரோபாய முகாமைத்துவம், தொழில்நுட்பவியலும் புத்தாக்க முகாமைத்துவமும், சுற்றுலா, விருந்தோம்பல், நிகழ்வு முகாமைத்துவம், நகர்புற முகாமைத்துவம்

ஆய்வரங்குக்கான கால வரையறை

ஆய்வுச்சுருக்கம் சமர்ப்பிப்பு: 05.01.2019

ஆய்வுச்சுருக்கம் ஏற்பறிவிப்பு: 15.01.2019

ஆய்வுக்கட்டுரை கையளிப்பு: 20.02.2019

ஆய்வரங்கு: 04&05.06.2019.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

பீடாதிபதி:- பேராசிரியர் தி.வேல்நம்பி, +9477744 8352 ஆய்வரங்கு ஒழுங்கமைப்பாளர்: திருமதி தே.சிவாஸ்கரன் +94 77 722 2500, மின்னஞ்சல் முகவரி: iccm@univ.jfn.ac.lk, +94 21 222 3610 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## வெள்ளிக்கிழமைகளில் சீருடையில் கடமைக்கு வருமாறு அறிவிப்பு

(யாழ்ப்பணம்)

யாழ்.நெல்லியடி கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் வெள்ளிக்கிழமைகளில் சீருடை அணிந்து கடமைக்கு வரவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கான சீருடைகளை நேற்று முன்தினம் சங்கத்தின் தலைவர் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)

## 'கிராம சக்தி' திட்ட அங்குரார்ப்பணம்



(கரணவாய்)

பருத்தித்துறை புனித நகர் பகுதியில் "கிராமசக்தி" நிகழ்ச்சித்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் வழிகாட்டலில் இடம்பெற்றது.

இதில் திட்டமிடல் உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்,பொது சுகாதார பரிசோதகர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள்,பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (இ-60)

# க.பொ.த.உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள்-2018

**யாழ். மல்லாகம் மகா வித்தியாலயம்**

வர்த்தகப்பிரிவு

ச.திலிப்குமார்-ஏ2பி, ச.டெங்கிஸ்ரன்ஸ்-ஏ2சி, பூ.கஸ்தூரி-பி2சி, த. சாதனா-சி2எஸ், ர.டனுசன்-சி2எஸ், உ.கிருஷாளினி-சி2எஸ்.

கலைப்பிரிவு

சி.தனுஷா-பி2சி, ஜெ.லகோசியா-பி2சி, சு.சிந்துஜன்-பி2சி, ஹ.தேனுவாசன்-பிசிஎஸ், கை.கலைவாணி-சி2எஸ், பா.நிஷாளினி-2சிஎஸ், சோ. கஜானா-2சிஎஸ், அ.அலஸ்ரினா-பி2எஸ்

**யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

கணிதப்பிரிவு

தெ.கிருஷன்-3ஏ, சி.கயானன்-3ஏ, சி.யாழினி-3ஏ, தலக்சியா-2ஏபி, ம.மதீசன்-2ஏபி, ச.சுகேசினி-ஏ2பி, ச.சங்கர்ஜி-ஏ2பி, பா. தினுசன்-ஏபிசி, கு.அகித்- ஏபிசி, த.தசிதா-ஏ2சி, ரா.தாட்சாஜினி-ஏ2சி, அ.அயூசன்-ஏசிஎஸ், யோ.பிந்துசன்-2பிசி, ந.ஆருஜன்-2பிசி, அ.நியானந்தி-2பிசி, சி.பிரவீனன்-2பிசி, சி.சௌமினியன்-2பிசி, த.தனுசியா-2பிசி, இ.பிரதீப்-2பிசி, மௌ.மயில்றேஜன்-2பிசி, ம.ஈசராஜ்-2பிசி, பா.விஷ்ணுகன்-பி2சி, யா.கபீசன்-பி2சி, சி.மிதிலன்-பி2சி, இ.அபிநயா-பி2சி, ச.வித்தகன்-பி2சி, ரா.சுதர்சிகா-பி2சி, த.ஜஸ்மினா-பி2சி, ம.அஜித்கரன்-பி2சி, பு.மேதுலன்-3பி, க.கஜீபன்-3பி, ச.தர்சிகன்-பிசிஎஸ், கி.தனுசாந்-பிசிஎஸ், சி.ஆரமுதன்-பிசிஎஸ், அ.அயூசன்-ஏசிஎஸ், த.யதுர்சா-2பிசி.

உயிரியல் பிரிவு

கு.கம்சிகா-3ஏ, தி.டினோஜன்-2ஏபி, சி.சோபனா-2ஏபி, வி.மதனிகா-ஏபிசி, ம.சுர்த்தியா-ஏ2சி, க.நித்திலா-3பி, சி.கோபிகா-2பிசி, நா.நவீன் சங்கர்-2பிசி, வ.கிரியாலினி-2பிசி, சி.சங்கவி-2பிசி, கு.சத்தியவாகினி-பி2சி.

உயிர்முறைமை தொழில்நுட்பம்

ம.மாதுமை-ஏ2பி, கு.மதுஷா-2பிசி, ப.ரதீபன்-பி2சி, கோ.டினோஜா-பி2சி.

பொறியியல் தொழில்நுட்பம்

தே.சுஜிகரன்-ஏ2பி, க.சகீலன்-2ஏபி, வி.ஸ்ரீசங்கரன்-ஏபிசி, வி.விபூசனன்-2பிசி, க.பத்மஜன்-பி2சி, இ.கவிராஜ்-3சி, மோ.சசிவராஜ்-பி2சி.

வர்த்தகப்பிரிவு

சி.தர்மிலன்-3ஏ, அ.சாம்பவி-3ஏ, சி.கஜீபன்-2ஏபி, ரா.அபிஷேக்-2ஏபி, சி.டிவக்ஷனா-2ஏபி, சு.சாருப்பிரியா-ஏ2பி, வி.ஜானுகா-3பி, கி.கிருஷ்ணாங்கி-2பிசி, ம.கஜீபன்-2பிசி, ரா.தன்சிகா-2பிசி, சி.திவ்யா-2பிசி, ப.சங்கவி-பி2சி, இ.றுபேக்-பி2சி, ஞா.மிதுரா-பி2சி, ப.நித்தியா-பிசிஎஸ்.

கலைப்பிரிவு

சி.நிலக்ஷனா-3ஏ, இ.ஹறிநி-3ஏ, எ.பிரியந்தி-3ஏ, அ.அனுசா-3ஏ, பா.தபோதினி-3ஏ, இ.தமிழினி-2ஏபி, ப.தமிழினி-2ஏபி, கு.இந்துஷா-2ஏபி, க.சிந்துஜன்-2ஏபி, சி.கலையரசன்-2ஏபி, டே.கிருத்திகா-ஏபிசி, சு.சங்கவி-ஏபிசி, சி.கலையரசி-ஏபிசி, ச. தனோஜன்-ஏபிசி, ந.சனோசா-ஏபிசி, செ.சரண்யா-ஏ2சி, ந.கானப்பிரியா-ஏ2எஸ்.

**யாழ். விக்ரோறியா கல்லூரி**

கணிதப்பிரிவு

தி.நகுல்ராஜ்-3ஏ, இ.கரன்-2ஏபி, சி.உமையாளன்-ஏபிசி, செ.யசோதரன்-ஏ2பி, வி.கோபிதாஸ்-ஏ2சி, நா.தவச்செல்வி-பி2சி, சி.சனோஜன்-பி2சி, ர.நிசாந்தன்-பி2சி, பி.சயந்தினி-பிசிஎஸ், த.ஸ்ரீரங்கன்-பிசிஎஸ்

விஞ்ஞானப்பிரிவு

க.யசோதா-ஏ2பி, யோ.ஜங்கரன்-ஏபிசி, த.துசியந்தி- 2பிசி, சி.திலக்சன்-பி2சி,

வர்த்தகப்பிரிவு

தே.தனுயா-ஏபிசி, ஞா.குசாளினி-ஏ2பி, சி.பிரவீனா-2பிசி, வி.ஜெயப்பிரகாஷ்-3சி, ஜெ.மீனலோயினி-3சி,

கலைப்பிரிவு

க.கஜானி-ஏ2பி, சி.தர்மிகா-ஏபிசி, து.கேமா-2ஏபி, இ.பிரியங்கா-2ஏசி, ப.ருக்சனிக்கா-2பிசி, சி.ஜீவமலர்-2பிசி,சி.சிவப்பிரியன்-ஏபிசி, த.நிலக்சன்-பி2சி, த.பிரியதர்சினி-ஏபிசி, க.தினேஷ்-ஏ2சி.

**யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி**

வர்த்தகப்பிரிவு

த.கிருஷாந்தினி-3ஏ, ஆ.வினோதன்-ஏ2பி, கி.விதுனன்-2பிசி, ச.துசிதா-2பிசி, வி.வனஜா-2பிசி, ர.கம்சா-ஏபிசி, த.சங்கவி-ஏ2பி, க.ஜீவகன்-பி2சி.

கலைப்பிரிவு

வே.பால்ராஜ்-ஏபிஎஸ், தி.அபிதா-பிசிஎஸ், சி. மதுரா-பி2சி, சி.மீனலோஜினி-பிசிஎஸ்.

**கணிதப்பிரிவில் ஹாட்லி மாணவன் முன்னிலை**



க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணிதப்பிரிவில் தோற்றிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் ச.சன்ஜித்-(3ஏ) மாவட்ட நிலையில் முதலாம் இடத்தைப்பெற்றதோடு தேசிய ரீதியில் ஆறாம் இடத்தைப் பெற்றுள்ளார். (இ-10)

### பாரம்பரிய கல்வித்திறனை நோக்கிப் பயணிக்கும்

# எமது மாணவ மாணவியர்களால் யாவரும் மகிழ்வடைகின்றோம்

## நீதியரசர் விக்னேஸ்வரன் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

எமது வடக்கு-கிழக்கின் கல்வி நிலை அண்மைக் காலங்களில் சற்று தடுமாற்றத்திற்கு உள்ளாகியிருந்தது.

மீண்டும் மாணவ மாணவியர் எமது பாரம்பரிய கல்வித்திறனை நோக்கிப் பயணிப்பதைக் கண்டு நாம் யாவரும் மகிழ்வடைகின்றோம் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் கல்விப் பொதுத் தராதரத்தின் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

எமது வடகிழக்கின் கல்வி நிலை அண்மைய காலங்களில் சற்று தடுமாற்றத்திற்கு உள்ளாகியிருந்தது. மீண்டும்எமது மாணவ மாணவியர் எமது பாரம்பரிய கல்வித்திறனை நோக்கிப் பயணிப்பதைக்கண்டுநாம் யாவரும் மகிழ்வடைகின்றோம். வடக்கிலும் கிழக்கிலும் தத்தமது பிரிவுகளில் முதலிடம் பெற்ற அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக! முக்கியமாக சித்தி பெற்ற கிராமப்புற மாணவ மாணவியர்களை நாங்கள் விசேடமாக வாழ்த்துகின் றாம். காரணம் பல பொருளாதாரப் பிரச்சினைகள், குடும்பக் கஷ்டங்கள் மத்தியில் வைராக்கியத்துடன் அவர்கள் படித்து முன்னேறியுள்ளார்கள். நகர்ப்புற வசதிகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. அப்படியிருந்தும் அவர்கள் அடைந்த வெற்றிகள் எம்மைப் பெருமையடைய வைக்கின்றது.

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பின்தங்கிய 15ஆம் கிராமத்தில் இருந்து மருத்துவத் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவரை இதற்கு உதாரணம் காட்டலாம். ஒரு விவசாயின் மகன் இன்று அக் கிராமத்தில் இருந்து முதன் முதலாக வைத்தியத் துறையினுள் நுழைகின்றார் என்பது ஒரு சாதாரண விடயமல்ல. அவரைநாம்வாழ்த்துகின்றோம்

யாவரும் உயர் கல்வியில் உன்னத நிலை அடைந்து எமது தமிழ் மண்ணிற்குப் பேரும் பெருமையும் பெற்றுத் தர வாழ்த்துகின்றோம். அவர்கள் ஒவ்வொருவரும் வருங்காலத்தில் எம் தமிழ் மண்ணின் விருத்திக்கு வித்திட வாழ்த்துகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்த பாடசாலைகளில் மாணவர் ஒன்றுகூடல்

## செயலாளர் சத்தியசீலன் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயப் பாடசாலைகளை உள்ளடக்கியதான மாணவர்களின் ஒழுக்க விடுமியங்களை மேம்படுத்தும் பொருட்டுப் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களால் வாரத்தில் ஒருநாள் பாடசாலைகளில் மாணவர் ஒன்றுகூடலை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

நல்லொழுக்க மாணவர் சமுதாயத்தை உருவாக்கும் செயற்றிட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்புக்கள் வழங்கிய பின்னர் பாடசாலைகள் தோறும் மாணவர்களுக்கான ஒழுக்க விழுமியங்கள் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்தார்.

இச்செயற்றிட்டம் எதிர்வரும் மாதங்களில் ஏனைய வலயங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமெனவும் ஆர்வமுள்ள ஆசிரியர்கள் இச் செயற்றிட்டத்தில் இணைந்து கொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-10)

# விளம்பரப் பதாகைகளுக்கான வாடகை வசூலிப்பில் பொறுமை காத்து வருகிறோம்

## நகரசபைத் தவிசாளர் சிவமங்கை விளக்கம்

(சாவகச்சேரி)

சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே விளம்பரப் பதாகைகளுக்கான வாடகை வசூலிப்பில் பொறுமை காத்து வருகின்றோம் என சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பேருந்து தரிப்பிடத்தில் தனியார் ஒருவர் தனது வர்த்தக நிலையங்களின் விளம்பரங்களைக் காட்சிப்படுத்தியுள்ள போதிலும் நகர சபையினர் குறித்த நபரிடம் பதாகைகளுக்கான வாடகையை வசூலிக்கவில்லை என உள்ளூராட்சி ஆணையாளரிடம் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள் முறையிட்டுள்ளனர். இது தொடர்பாக தவிசாளரிடம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விளம்பரப் பதாகைகள் விடயத்தில் கடும் போக்கினைக் கையாளும் பட்சத்தில் அது எமது சபைக்கு வருமான இழப்பினை ஏற்படுத்தும். நகர சபையினர் வாடகை செலுத்தாத விளம்பரப் பதாகைகளை அப்புறப்படுத்தும் பட்சத்தில் அது வருமான இழப்பை ஏற்படுத்தும். அதற்காகவே நாம் வாடகை செலுத்தாதவர்களுக்கு மூன்று கட்டமாக கடிதம் அனுப்பிய பின்னரே கடும் போக்கினைக் கையாள்வோம்.

சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் தனியார் ஒருவருக்கு கட்டணம் வசூலிக்காமல் விளம்பரப் பதாகைகள் அமைக்க அனுமதி கொடுத்தமை தொடர்பான செய்தியில் எந்தவொரு உண்மையும் இல்லை. இதில் எந்தவொரு அரசியல் பின்புலமும் இல்லை. குறித்த நபரே சாவகச்சேரி பேருந்து நிலையத்திற்கு இலவசமாக வர்ணம் பூசி அழகு படுத்தியவர்.

ஆகவே அவருக்கு முன்னுரிமை அடிப்படையில் கட்டணத்துடனேயே பதாகைகள் காட்சிப்படுத்த அனுமதி வழங்கினோம்.

அதற்கான கட்டணத்தையும் அவர் நகர சபையில் செலுத்தியுள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் சாவகச்சேரியிலுள்ள இலங்கை வங்கிக் கிளையை இடம் மாற்றி அந்த இடத்தை சிறுவர் பொழுது போக்கு இடமாக மாற்றுமாறு சபை உறுப்பினர் ஒருவர் பிரேரணை முன் வைத்திருந்தார்.

ஆனால் இலங்கை வங்கிக் கிளையினரின் கோரிக்கைக்கு அமைவாகவும், சபையின் வருமானம் கருதியும் மேலும் 3 வருடங்கள் இலங்கை வங்கிக் கிளை அதே இடத்தில் இயங்கும் வண்ணம் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-30)

## ஓய்வூதியர்கள் வதிவிடச் சான்றிதழ்களை கிராம உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கவும்

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவில் ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளும் ஓய்வூதியர்கள் தொடர்பான வதிவிடச் சான்றிதழ்கள் 15.02.2019 இற்கு முன்னர் கிராம உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து ஓய்வூதிய கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்தப்படும் எனவும் இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள தங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தரைத் தொடர்பு கொள்ளுமாறும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)


**விற்பனைக்கு**

சிறிது காலம் பாவித்த SISIL குளிர் சாதனப் பெட்டி விற்பனைக்கு உண்டு.

(6869)

தொடர்பு: 077 272 0103

யாழ்ப்பாணம்





**அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்**

இணுவில்-மருதனார் மடம், சுன்னாகம்

இசை ஆராதனை

02.01.2019 புதன்கிழமை (பகல் 11 மணி)

பாட்டு:- ஜெ.மதூஷிகன்

வயலின்:- ப.சியாமகிருஸ்ணா

மிருதங்கம்:- ஞா.வசந்

அனுசரணை: முரளிதரன், ஏழாலை



**நிரு ரியூசன் சென்ரர், கோண்டாவில்**

A/L 2k21

கலை, வர்த்தக, கணித, தொழில்நுட்பப் பிரிவுகள்

ஆரம்பம்

06.01.2019

ஞாயிற்றுக்கிழமை

காலை 8.00 மணி

(4971)



**மாணவர்கள் புதிய அனுமதி**

சிவபூமி பாடசாலை

(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை)

கோண்டாவில்- யாழ்ப்பாணம்

2019 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாற்று வலுவுடைய மனவிருத்தி குன்றிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது.

எனவே நேரடியாக எமது பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி: சிவபூமி பாடசாலை, கோண்டாவில், யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம்: 021 222 7938

சிவபூமி பாடசாலை

(சிறுவர் மனவிருத்திப் பாடசாலை)

கனகபுரம்- கிளிநொச்சி

2019 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாற்று வலுவுடைய மனவிருத்தி குன்றிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது.

எனவே நேரடியாக எமது பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(வாகன வசதி செய்து கொடுக்கப்படும்)

முகவரி: சிவபூமி பாடசாலை,

முதலாம் ஒழுங்கை, கனகபுரம், கிளிநொச்சி

தொலைபேசி இலக்கம்: 021 222 7938,

021 228 5938

(6861)



**மணிவிழா நாயகனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்**

**திரு. சிதம்பரப்பிள்ளை மாணிக்கராஜா**

(பிரதிக் கல்விப் பணிப்பாளர் – நிர்வாகம், யாழ். கல்வி வலயம்)

எமது வித்தியாலயத்தினது கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு பல் வழிகளில் ஆலோசனைகள் வழங்கி ஓய்வு பெறுகின்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்

திரு.சி.மாணிக்கராஜா

அவர்களை இந்நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர்களது ஓய்வுக் காலமானது சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.




வித்தியாலய சமூகம்,

கோண்டாவில் இராமகிருஷ்ணா

மகா வித்தியாலயம்.

(சி-4987)



**மணிவிழா வாழ்த்து**




**சிதம்பரப்பிள்ளை மாணிக்கராஜா**

(பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி நிர்வாகம்)

யாழ்.கல்வி வலயத்தின் உயர் வளர்ச்சிக்கு

பலமாக– வளமாக– தாங்குவேராக

தான் அர்ப்பணிப்புமிகு பணியால் அணி செய்து

நற்பண்பால்– ஆலோசனைகளால்

நம் இதயம் கவர்ந்த சேவைச் சிகரம்

பிரதிக் கல்விப் பணிப்பாளர்

உயர்திரு.சிதம்பரப்பிள்ளை மாணிக்கராஜா

அவர்களுக்கு மணிவிழா நாளில்

வாழ்த்துரைப்பதுடன்

அவரது ஓய்வுக் காலம்

இறையருளோடும் நலமோடும்

சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள்,

வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.






**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

செல்வன் **செல்வராசா செந்தில்குமரன்**

செல்வன் செல்வராசா செந்தில்குமரன் அவர்கள்

யாழ். இந்துக் கல்லூரியில் கணிதப் பிரிவில்

(2018) க.பொ.த.(உ.த) பரீட்சையில் 2 AB பெறுபேற்றை பெற்று

மாவட்ட நிலையில் 43 இடத்தையும் பெற்று

மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ளார்.

இவரை பெற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்

பாராட்டி வாழ்த்துகின்றனர்.

ந.சண்முகராஜா,

ஸ்தாபகர்,மார்க்கண்டு சுவாமிகள் சபை,

பிரான்பற்று, பண்டத்தரிப்பு.

(6880)

# மாத்தறையிலிருந்து வடக்கு நோக்கி பயணித்த யாழ்தேவி நிவாரணப் புகையிரதம் நேற்று புகையிரத நிலையங்களில் பொருட்கள் கையளிப்பு





(குருமன்காடு)

இலங்கை ரயில்வே திணைக்களம் ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களை ஏற்றி கொழும்பு கோட்டையிலிருந்து புறப்பட்ட யாழ்தேவி புகையிரதம் வவுனியாவை வந்தடை ந்தது.

மாத்தறையில் இருந்து நேற்று முன்தினம் பயணத்தை ஆரம்பித்து கொழும்பு கோட்டையை வந்தடைந்து நேற்றுக் காலை கொழும்பு கோட்டையில் இருந்து யாழ் தேவி நிவாரணப் புகையிரதம் தனது பயணத்தை வடக்கு நோக்கி ஆரம்பித்திருந்தது.

வடக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக முன்னெடுக்கப்படும் நிவாரண வேலைத்திட்டங்களுக்கு உதவும் வகையில் இந்த தொடரூந்து சேவை இடம்பெற்றது. பிற்பகல் 12.30 மணியளவில், வவுனியாவை வந்தடைந்த நிவாரணப் புகையிரதத்தில் பொதுமக்களால் கையளிக்கபட்ட நிவாரண பொருட்களை வவுனியா புகையிரத நிலைய அதிபர் எஸ்.அகிலேஸ்வரன் வழங்கி வைத்தார்.

குறித்த புகையிரதம் பயணத்தை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்கான நிவாரணப் பொருட்கள் மாங்குளம் புகையிரத நிலையத்தில் வைத்து முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது

இதில் பாராளுமன்ற உற்றுப்பினர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக மாவட்ட செயலாளர் கோ.தனபாலசுந்தரம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன், ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் இ.ரமேஸ், முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட பல்வேறு அரச அதிகாரிகள் கலந்துகொண்டு பொருட்களை பெற்றுக்கொண்டனர்.

பொருட்களை பெற்றுக் கொண்ட முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் பொருட்களை சேகரித்து அனுப்பிவைத்தவர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு பொருட்களை பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா இது நல்லிணக்கத்துக்கான ஒரு சிறந்த முயற்சி என தெரிவித்தார். நிவாரணப்பொருட்களுடன் பிற்பகல் இரண்டு மணியளவில் குறித்த புகையிரதம் கிளிநொச்சியைச் வந்தடை ந்தது.

இவ்வாறு புகையிரதங்களில் கொண்டுவரப்பட்ட நிவாரண உதவிப் பொருட்கள் கிளிநொச்சியில் வைத்து கிளிநொச்சி அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகத்திடம் கையளிக்கப் பட்டது.

இதில் ரயில்வே திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (2-312-250-281-315)

## மோட்டார் சைக்கிள் திருட்டு; பற்றைக்குள் இருந்து மீட்பு

(பூநகரி)

பூநகரி வாடியடி நகர்ப் பகுதியில் சந்தை கட்டடத் தொகுதியுள்ள கடை அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டு மன்னார் பூநகரி வீதியூடாக கொண்டு செல்லப்பட்ட போது அதனை அவதானித்த இளைஞர்கள் மோட்டார் சைக்கிளைப் பின்தொடர்ந்து துரத்திச் சென்ற வேளை திருடியவர் வாகனத்தை வேகமாக செலுத்தி கிராஞ்சிப் பகுதியில் தலைமறைவாகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது.

இது தொடர்பில் பூநகரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பூநகரி பொலிஸ் நிலைய அதிபர் கபில பண்டார தலைமையில் விரைந்த பொலிஸ் குழுவினர் சந்தேக நபரான யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞன் ஒருவரை கிராஞ்சிப் பகுதியில் வைத்து கைது செய்தனர்.

கைதான பிரஸ்தாப நபரை பூநகரி பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணை மேற்கொண்டதையடுத்து நேற்றுக் காலை சந்தேக நபருடன் கிராஞ்சிக் காட்டுப் பகுதியில் தேடுதல் நடத்தியதில் பற்றையொன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மோட்டார் சைக்கிளை மீட்டு பூநகரி பொலிஸ் நிலையம் கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் மோட்டார் சைக்கிள் பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் சந்தேக நபரும் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-84)

## தமிழன் குண்டுகள் உள்ளிட்ட வெடிபொருட்கள் தாக்கி அழிப்பு

(பனிக்கன்குளம்)

விடுதலைப் புலிகளின் தயாரிப்பில் உருவாகிய தமிழன் குண்டுகள் உள்ளிட்ட வெடிபொருட்கள் சில நேற்று முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் அழிக்கப்பட்டுள்ளன.

2009 ஆம் ஆண்டு




இறுதியுத்தத்தின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் கைவிடப்பட்ட 10 தமிழன் குண்டுகள் உள்ளிட்ட வெடிபொருட்கள் சில முள்ளிவாய்க்கால் பகுதியில் மீட்கப்பட்டன.

இந்நிலையில் மீட்கப்பட்ட வெடிகுண்டுகள் நீதிமன்றத்தின் அனுமதியுடன் பாதுகாப்பான முறையில் முள்ளிவாய்க்கால்பகுதியில் வைத்து தாக்கி அழிக்கப்பட்டுள்ளதாக அதிரடிப்படையினர் தெரிவித்தனர். (2-281)

## மக்களுக்கு வெள்ள நிவாரணத்தை வழங்கி வைத்தார் அமைச்சர் சஜித்


(பனிக்கன்குளம்)

மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்காக தேசிய வீடமைப்பு, நிர்மாண மற்றும் கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் பணிப்பின் பேரில் கொடுக்கப்படும் நிவாரண பணி நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட மன்னாகண்டல் பகுதியில் வைத்து முல்லை. மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சாந்தி சிறீஸ்கந்தராசா.சி.சிவமோகன், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், ஐக்கிய தேசிய கட்சியின் மாவட்ட இணைப்பாளர்கள், பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் என பெருமளவானவர்கள் கலந்துகொண்டுள்ளார்கள்.

நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த தேசிய வீடமைப்பு நீர்மாண அமைச்சர் சஜித் பிரேமதாஸ இந்தமாவட்டத்தில் வீடு இல்லாத அனைவருக்கும் வீட்டை பெற்றுத்தருவேன் என கூறினார். (2-281)

## வடமாகாண ஆளுநரை தொடர்ந்தும் கடமையில் அமர்த்தக் கோரி கிளிநொச்சியில் கவனயீர்ப்பு

வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயை தொடர்ந்தும் வடமாகாணத்திற்கே கடமையில் அமர்த்தக் கோரி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது. குறித்த போராட்டம் கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பமாகி கவன யீர்ப்பு குழுவினர், கிளிநொச்சி புகையிரத நிலையம் வரை சென்றன

கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு நேற்றைய தினம் ஜனாதிபதி வருகை தரக் கூடும் என கருதி குறித்த குழுவினர் கிளிநொச்சி புகையிரத நிலையம் வரை வருகை தந்தனர். எனினும் ஜனாதிபதி வருகை தராமையால் அங்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஜனாதிபதிக்கான மகஜரை கையளித்தனர்.

போராட்டத்தில் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள், வடக்குமாகாண தொண்டர் ஆசிரியர்கள் உள்ளிட்ட சில அமைப்புக்கள் இணைந்து முன்னெடுத்திருந்தனர்.

தொடர்ந்து ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த அவர்கள்,

வடக்கு மாகாண ஆளுநர் வடக்கில் நேர்மையாக செயற்பட்டு வந்ததாகவும் அவர் காலத்தில் மேற்கொள்ளப் பட்ட பல பணிகள் இடையில் கைவிடப்பட்டுள்ள நிலை காணப்படுவதால், அவரை மீண்டும் வடக்கு மாகாணத்திற்கே நியமிக்க வேண்டும் என கோரினர்.

மகஜரை பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம்,

ஜனாதிபதிக்கு கையளிக்க கோரி மகஜர்கள் தம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அவற்றை உடனடியாக ஜனாதிபதியின் கரங்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் தெரிவித்தார். (2-315)





ஊழியர் நம்பிக்கை நிதிய யாழ். பிராந்திய காரியாலய உத்தியோகத்தர்களினால் அனைத்து E.T.F பிராந்திய கிளை அலுவலர்களின் பங்களிப்புடன் வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட நாதன் குடியிருப்பு பகுதியிலும் ஏ-9 வீதி, பரந்தன் பகுதியிலும் ரூபா 100000 இற்கு மேற்பட்ட உலர் உணவுப் பொதிகள் கடந்த 29 ஆம் திகதி வழங்கப்பட்டதைப் படங்களில் காணலாம்.




யாழ்.கல்வியங்காடு நொதேண் விளையாட்டுக் கழகமும் புலம்பெயர் தேசத்து கல்வியங்காடு நல்லூர் நண்பர்களும் மற்றும் பல சமூக ஆர்வலர்களும் இணைந்து கன மழை மற்றும் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்களுக்கு இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றை கொள்வனவு செய்தும் பிரதேச மக்களிடமும் வர்த்தகர்களிடமும் நண்பர்களிடமும் சேகரித்தும் வழங்கினர்.

# மாகாண சபைத் தேர்தல்கள் உடன் நடத்தப்பட வேண்டும்

## பவ்ரல் மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் விரைவில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடல் நடத்த விருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

6 மாகாண சபைகளின் அதிகாரக் காலம் நிறைவடைந்துள்ளது.

எனினும் அவற்றுக்கான தேர்தல், மாகாண எல்லை மறுசீரமைப்பு அறிக்கை குறித்த மீளாய்வுப் பணிகள் தாமதித்துள்ளமையால், நடத்தப்படாதுள்ளது.

இந் நிலையில் பிரதமர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள மீளாய்வுக் குழு தமது அறிக்கையை 2 மாதங்களுக்குள் கையளிக்க வேண்டும் என்றும் பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (இ-7)

# 1400 இலங்கைப் படையினர் இந்தியாவில் பயிற்சி-ஒஸ்ரின்




(கொழும்பு)

இலங்கையில், இந்தியாவால் நிதியிடப்பட்ட திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று இலங்கை அரசாங்கம் உறுதி அளித்துள்ளது.

இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் கிரண் ரிஜிஜுவைச் சந்தித்த, இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் ஒஸ்ரின் பெர்னாண்டோ இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார் என்று, இலங்கை வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய உள்துறை அமைச்சில் கடந்த டிசெம்பர் 27 ஆம் திகதி இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இந்திய வெளிவிவகார அமைச்சின் இணைச் செயலர் தினேஸ் பட்நாயக் மற்றும் இந்திய உள்துறை அமைச்சின் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இதன்போது, சமயம், கலாசாரம், பொருளாதார செயற்பாடுகள், குறிப்பாக, யாத்திரைச் சுற்றுலா போன்ற துறைகளில் நெருங்கிய உறவுகளை இன்னும் வலுப்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்தியுள்ள இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் கிரண் ரிஜிஜு, இதன் மூலம் இரண்டு நாடுகளுக்கும் சாதகமான நன்மைகள் கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போது மெதுவாக முன்னெடுக்கப்பட்டு வரும், இந்தியாவின் கடன் திட்டங்களின் கீழான திட்டங்களை வேகமாக முன்னெடுப்பதற்கு தனிப்பட்ட முறையில் தான் முயற்சிகளை எடுப்பதாக இலங்கை தூதுவர் ஒஸ்ரின் பெர்னாண்டோ உறுதியளித்துள்ளார்.

தற்போது சுமார் 1400 இலங்கை படையினர் இந்தியாவில் பயிற்சி பெற்று வருவதாக தெரிவித்த ஒஸ்ரின் பெர்னாண்டோ, இந்த வாய்ப்பை அளித்த இந்திய அரசாங்கத்துக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1604

### கந்தன்

MY REACTION



அம்மா திட்டும்போது அப்பா திட்டும் போது

### அபிலாசா

கடவுள் இறங்கி வந்தாலும் ரொக்கெட் விண்ணில் பறந்தாலும் பசித்து இவன்தான் பலகாரம் மண்ணுக்கு இவன்தான் ஆகாரம்



### ரஸ்மி

வாழ்ந்து உயர்ந்துவிட்டால் பொறாமையில் பேசுவார்கள், தாழ்ந்து வீழ்ந்து விட்டால் கேவலமாகப் பேசுவார்கள். இவ்வளவுதான் மனித சமூகம்



### வசந்தன்

நிமிர்த்த முடியாதது நாய் வால் மட்டுமல்ல சிலரின் நடத்தையையும் குணங்களையும் தான்



### பகீரதன்

நன்மையோ தீமையோ அவரவர் செய்யும் செயல்களுக்கு உண்டான பலனை இன்றில்லையானாலும் என்றாவது நிச்சயம் அனுபவித்தாக வேண்டும்



### முரளி

சிறு தவறுக்காக ஒருவரைவிட்டு விலகாதே அதுவே உன் பெரும் தவறாகிவிடும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மொத்த மரக்கறி விற்பனை நிலையத்தில் ஆறு வியாபார நிலையங்களில் தொடர் திருட்டு

## வவுனியா நகரில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா நகரப் பகுதியில் உள்ள மொத்த மரக்கறி விற்பனை நிலையத்தில் அமைந்துள்ள ஆறு வியாபார நிலையங்களில் தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் இரவு 8 தொடக்கம் 9.30 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் இந்த தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள மொத்த மரக்கறி விற்பனை நிலையத் தொகுதிக்குள் அமைந்துள்ள ஆறு கடைகளின் கூரைகளைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கு காசுப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த பணங்களைத் திருடி தப்பிச் சென்றுள்ளனர். சி.சி.ரி.வி. கமரா பொருத்தப்பட்டிருந்த கடைகளில் நுழைந்த திருடர்கள் அவற்றை செயலிழக்கச் செய்த பின் திருட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த தொகுதியில் 35 வர்த்தக நிலையங்கள் தொடர்ச்சியாக அமைந்துள்ள நிலையில் பிற்பகல் 7 மணியளவில் பூட்டப்பட்ட வர்த்தக நிலையங்களின் கூரைகளே பிரிக்கப்பட்டு திருடர்கள் உள்நுழைந்துள்ளனர். இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற போது அத் தொகுதியில் உள்ள சில கடைகள் திறந்து காணப்பட்டுள்ளன. குறித்த கடைகளில் இருந்தவர்கள் கடைகள் உடைக்கப்பட்டதை அவதானித்து கடை உரிமையாளருக்கு தெரியப்படுத்தியதையடுத்து அவர்கள் இது தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாட்டையடுத்து சி.சி.ரி.வி. கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இக் கடைகளில் இருந்த சுமார் 60 ஆயிரம் ரூபாய் வரையிலான பணமே இவ்வாறு திருடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)




# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு எதிராக தமிழ் தேசிய கூட்டமைப்பு செயற்படாது

## சாந்தி எம்.பி.உறுதி

(பனிக்கன்குளம்)

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் பணிபுரியும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்படாது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா உறுதிபட தெரிவித்துள்ளார்.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் பணிபுரியும் முன்பள்ளி ஆசிரியர்களை பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் பணிபுரியும் முன்பள்ளி ஆசிரியர்களை நிறுத்துமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்திருப்பதாகவும் தம்மை வேலையில் இருந்து நிறுத்துவதாகவும் குழப்ப நிலைகள் நிலவி வரும் நிலையில் துணுக்காய் நந்தகுமார் நகரில் உள்ள முன்பள்ளியில் இச் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா,

நான் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் கோட்டங்களை சேர்ந்த சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் சேவையாற்றுகின்ற முன்பள்ளி ஆசிரியர்களை சந்தித்தேன். இதன்போது இந்த சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் சேவையாற்றுகின்ற முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்பான தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்ன கதைத்திருக்கிறோம் என்பதனை அவர்கள் தாங்கள் முற்றுமுழுதாக கல்வி திணைக்களத்தோடு இணைந்து சேவையாற்றுவதற்க்கு தமது விருப்பத்தை தெரிவிக்கின்றனர். கல்வித் தினைக்களத்தின் கீழ் சேவையாற்ற சில கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர். அவர்கள் 2 வருட



பட்டப்படிப்பை முடித்திருக்கிறார்கள். அவர்களை சேவையில் இணைக்கும் போது வயது உள்ளிட்ட காரணங்களால் புறக்கணிக்கக்கூடாது என்பதனை தெரிவிக்கின்றனர்.

இவர்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய நிலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு செயற்படாது என்பது உறுதி. இந்த ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் ஊடாக வழங்கப்படும் சம்பளத்தை கல்வித்திணைக்களம் ஊடாக வழங்க நடவடிக்கை எடுத்து இவர்களை கல்வித் திணைக்களத்தின் கீழ் கொண்டுவருவதே எமது நிலைப்பாடு. அவர்களை தொடர்ந்து சேவையில் இணைக்கவே நாம் நடவடிக்கை எடுத்துவருகிறோம் என்றார். (2-281)

# வலைஞர்மடம் கடற்கரையில் கரையொதுங்கிய இந்தியப்படகு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வலைஞர் மடம் கடற்கரை பகுதியில் மாலை இந்திய மீனவ படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளதை அடுத்து பிரதேச வாசிகள் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்கள்.

சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு பொலிஸார் படையினர் ஆகியோர் பொது மக்களின் உதவியுடன் கடலில் அமிழ்ந்து கரை ஒதுங்கியு ள்ள குறித்த படகை கரைக்கு கொண்டுவருவதற்கு கனரக வாகனத்தின் உதவியோடு படகினை கரைக்கு கொண்டுவந்துள்ளனர்.

படகில் பொருட்கள் மட்டும் இருந்துள்ள நிலையில் கரையில் நிறுத்தி வைத்துள்ளனர். படகு கடுமையாக சேதமடைந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது. இது விடயம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (2-281)

# ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற சத்தியப்பிரமாண நிகழ்வு



(பனிக்கன்குளம்)

அரச அதிகாரிகளின் 2019 ஆம் ஆண்டுக்கான சத்தியப்பிரமாண நிகழ்வு நாடளாவிய ரீதியில் அரச திணைக்களங்களில் நேற்று இடம்பெற்றது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அதிகாரிகள் நேற்று காலை 9 மணியளவில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

மேலதிக மாவட்ட பதிவாளர் ஜெ.கோபிநாத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தேசிய கொடியை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இ.ரமேஸ் ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதேச செயலக அதிகாரிகள் அனைவரும் இந்த சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து பிரதேச செயலக வளாகத்தில் மரநடுகை நிகழ்வு ஒன்றும் இடம்பெற்றது.

இங்கு வாழ்த்து செய்தியை வழங்கிய ஒட்டுசுட்டான் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இ.ரமேஸ் பொதுமக்களின் வரிப் பணத்திலே ஊதியத்தை பெறுகின்ற நாங்கள் சாதி, மதம், இனம், ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமின்றி மக்களுக்கு நேர் மையாகவும் வெளிப்படைத் தன்மையாகவும் விரைவாகவும் ஊழலற்ற சேவையை வழங்க வேண்டும் என்றார். (2-281)

# விளையாட்டுத்துறை அமைச்சினால் வடமாகாணத்தில் அபிவிருத்தி வேலைகள்

(கண்டாவளை)

வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் மாகாண சபை உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் மூலம் 2019ஆம்ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரைக்குமான பல்வேறு அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

உள்ளூராட்சித்துறையிலுள்ள வளங்களை வலுவூட்டுவதன் மூலம் வெளிப்படையாகவும் பொறுப்புடனும் கூடிய முறையில திட்டத்தை வழிநடத்தி அப்பிரதேசங்களின் பொருளாதார அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் சமூகத்திற்கு சேவையாற்றுதல் என்ற தொனிப்பொருளின் கீழ் 2019ஆம் ஆண்டு தொடக்கம் 2022ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் இலங்கையின் வடமத்திய மாகாணம், கிழக்கு மாகாணம், ஊவா மாகாணம், வடமாகாணம் ஆகிய நான்கு மாகாணங்களிலும் இந்த அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதன்படி வடமாகணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, ஆகிய மாவட்டங்களில் கிராமிய வீதிகள், கிராமியப்பாலங்கள் வாரச்சந்தைகள், நீர்வடிகால்கள், சுகாதார மத்திய நிலையங்கள் வாகனத்தரிப்பிடங்கள், பல்நோக்குக் கட்டடங்கள், சிறுவர் பூங்காங்கள், நீர்விநியோகத்திட்டங்கள் கிராமிய வியாபார நிலையங்கள், உள்ளூராட்சி நிலையங்களின் கீழ் வரும் பல்வேறு திட்டங்கள் என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்காக உலக வங்கிக் கடன், ஐரோப்பிய யூனியன், இலங்கை அரசாங்கம் ஆகியவற்றின் நிதியொதுக்கீட்டின் கீழ் சுமார் பதினாறாயிரத்து 500 மில்லியன் ரூபாசெலவில் இந்த அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இது தொடர்பான ஆரம்ப கட்ட வேலைகள் கடந்த ஆண்டு இறுதியிலிருந்து முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# கோம்பாவிலில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கல்





யாழ்.கோப்பாய் கண்ணகி அம்மன் சனசமூக நிலையம் மற்றும் ஸ்ரார் விளையாட்டுக்கழக இளைஞர்களால் சேகரிக்கப்பட்ட வெள்ள நிவாரணப் பொருட்கள் குறித்த இளைஞர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வடக்குமாகாண முன்னாள் அமைச்சர் க.சிவநேசன், கோப்பாய் பிரதேச சபை உறுப்பினர் இ.செல்வராஜா ஆகியோரால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், கோம்பாவில் கிராம சேவையாளர் தேவகி இலங்கநாதன் ஆகியோரிடம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில் கையளிக்கப்பட்டன.

இதனை தொடர்ந்து இப்பொருட்கள் கோப்பாய் கண்ணகி அம்மன் சனசமூக நிலையம் மற்றும் ஸ்ரார் விளையாட்டுக் கழக இளைஞர்களால் கோம்பாவில் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டன. (2)

# பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைப்பதற்கு நலன்புரி நிலையங்கள் அமைக்கவேண்டும்

## பல்வேறு தரப்பினரும் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் அனர்த்தப் பிரதேசங்களிலிருந்து வெளியேறும் மக்களை தங்க வைப்பதற்கு நலன்புரி நிலையங்களை அமைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் தாழ்நிலப்பகுதிகளில் ஏற்படும் வெள்ள அனர்த்தம் காரணமாக வெளியேறும் மக்கள் பாடசாலைகளில் தங்க வைக்கப்படுகின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தின் போது பாடசாலை விடுமுறை காலம் என்பதால் பாடசாலைகளை பயன்படுத்தக்கூடியதாக இருந்தது.

பாடசாலைக்காலங்களில் இவ்வாறான அனர்த்தங்கள் ஏற்படுமாயின் கல்விச செயற்பாடுகளில் பாதிப்புக்கள் ஏற்படும் என்றும் குறிப்பாக இரணைமடுக் குளத்தினுடைய தாழ்நிலப் பகுதிகளிலும் இவ்வாறான வெள்ள அனர்த்தங்கள் ஏற்படுவது வழமையான ஒன்றாக இருப்பதனால் இந்த தாழ்நிலப்பகுதிகளிலிருந்து வெளியேறும்மக்களை வைத்துப் பராமரிக்கக்கூடிய நிலையங்களை எதிர்காலத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியுள்ளனர். (2-315)

# கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் உள்ளிட்ட இருவர் பிணையில் விடுவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கச்சென்ற பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இடையூறு விளைவித்து அரச வாகனத்தை தடுத்து நிறுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட இரண்டு பேரையும் தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணைகளில் செல்லுமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (2-315)

# இனங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தி அதிகாரத்தைக் கைப்பற்ற சூழ்ச்சி

## மகிந்த அணி மீது ஐ.தே.க. குற்றச்சாட்டு



(கொழும்பு)

**அதிகாரத்தை இழந்த குழு நாட்டில் இனங்களுக்கிடையில் மோதலை மீண்டும் ஏற்படுத்தி அரசாங்கத்தைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார , மகிந்த அணியை நோக்கி குற்றம் சாட்டியுள்ளார்.**

திகனவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

சிங்கள-முஸ்லிம் மக்களிடம் மோதலை ஏற்படுத்த இந்த குழு முயற்சிக்கின்றது.

அக்குரனையில், பேருவளையில் மோதலை ஏற்படுத்தினர்.

இதுபோன்ற ஒரு மோதல் நிலையை புத்தர் சிலையை உடைத்து மீண்டும் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

பொதுபல சேனா என்கிறார்கள். சிங்ஹலே என்கிறார்கள். ராவணா பலய என்கிறார்கள். தாயகத்தை மீட்கும் அமைப்பு என்று கூறுகிறார்கள். மஹசோன் பலகாய என்கிறார்கள்.

இவ்வாறாக ஒவ்வொரு சொஹோன் குழுக்களை உருவாக்கி நாட்டில் பிரச்சினையை ஏற்படுத்த முயற்சித்தனர் எனவும் அவர் மேலும் குற்றம் சாட்டினார். (இ-7)

---

### கைக்குண்டு மற்றும் ஹெரோயினுடன்

# பாதாள உலகக் குழு உறுப்பினர் சிக்கினார்



(கொழும்பு)

கைக்குண்டு மற்றும் 60 கிராம் ஹெரோயினுடன் பாதாள உலக குழு உறுப்பினர் ஒருவர் பனாகொட இராணுவ முகாமிற்கு அருகில் காரில் பயணித்த போது கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய 33 வயது நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர், டுபாயில் தலைமறைவாகியுள்ள சைமா என்ற ழைகப்படும் பாதாள உலகக் குழுத் தலைவரின் உதவியாளர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி பிலிமத்தலாவை -நானுஓயா பகுதியில் வர்த்தகர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் இவர் தொடர்புடையவர் என தெரிய வந்துள்ளது. (இ-7)

---

### வடக்கு - கிழக்கை இணைக்கக்கோரும்

# புதிய அரசியலமைப்பை நாம் தோற்கடிப்போம்

## மகிந்த அமரவீர திட்டவட்டம்



(கொழும்பு)

வடக்கு- கிழக்கு இணைப்பு போன்ற, சர்ச்சைக்குரிய புதிய அரசியலமைப்புப் திருத்த யோசனைகளை தமது கட்சி தோற்கடிக்கும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

"நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும், ஐக்கியத்துக்கும் அச்சுறுத்தலான எந்தவொரு திட்டமும், நாடாளுமன்றத்தில் தடுக்கப்படும்.

இந்த விடயத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தீவிர கரிசனை கொண்டுள்ளார்.

அரசியலமைப்பு திருத்தங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டமிட்டுள்ள போதிலும், நாடாளுமன்றத்தில் இதுவரை எந்த வரைவும் சமர்ப்பிக்கப்படவில்லை.


இதுதொடர்பான எந்தக் கலந்துரையாடல்களிலும் நாங்கள் பங்கேற்கவில்லை.

அரசியலமைப்பு திருத்தங்கள் மூலம், சமஷ்டி அரசை உருவாக்கும்நோக்கம்கொண்ட இனவாத அரசியல்வாதிகளின் அறிக்கைகள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீவிர கவனம் செலுத்தி வருகிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(இ-7)

---

# தனக்குப் பிரதமருடன் எப்போது கோபம் வரும்

## மரிக்கார் எம்.பி. விளக்கம்



(கொழும்பு)

தனக்கு பிரதி அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படாவிடின் பிரதமருடன் கோபம் வரும் எனவும், அவசியம் தான் அதனை எதிர்பார்ப்பதாகவும் கொழும்பு மாவட்ட ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகங்களிடம் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சியின் உயர் பதவியிலுள்ளவர்களுக்கு கஷ்டமான சூழ்நிலை வரும்போது தவறுகள் விளங்க ஆரம்பிக்கும். கஷ்டத்திலிருந்து மீண்டுவிட்டதும் மூளை இல்லாத நிலைமை ஏற்பட்டு விடுகின்றது.

உண்மையான செய்தியை நான் ஊடகங்களிடம் தெரிவிக்கின்றேன். இன்னும் பிரதி அமைச்சுப் பதவிகள் 13 வழங்கப்படவுள்ளன. இதனைப் பெற்றுக் கொள்ள, கட்சியில் அமைச்சுப் பதவி கிடைக்காதவர்களிடையே பெரும் போட்டி நிலைமையொன்று உருவாகியுள்ளது.

எனக்கு கட்சியில் எந்தவித அதிருப்தியும் இல்லை. ஆனால், பிரதி அமைச்சுப் பதவியொன்றாவது வழங்கப்படாவிடின் நிச்சயம் எனக்குக் கோபம் வரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

### நான்கு பக்கங்களிலிருந்தும் வரும்

# எதிர்ப்புக்களை சமாளிப்பதற்கு தவிக்கிறது ரணில் அரசு

## வாசுதேவ எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மூன்று,நான்கு பக்கங்களிலிருந்தும் வரும் எதிர்ப்புக்களை சமாளிப்பதற்கு புத்தர் சிலை உடைப்பைப் பயன்படுத்த முயற்சிக்கின்றது என வாசுதேவ நாணயக்கார குற்றம்சாட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டாவறு தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிகளவில் ஆரம்பித்துள்ள பௌத்த விகாரைகளைத் தரிசிக்கும் சந்தர்ப்பத்தில் தான் இந்த புத்தர் சிலை உடைப்பு இடம்பெறுகின்றது.

பல்வேறு பக்கங்களிலிருந்தும் வரும் சவால்களுக்கு முகம்கொடுக்க முடியாதவாறு ரணில் அரசாங்கம் தவிக்கின்றது.

ஒரு புறம் ஜனாதிபதியின் எதிர்ப்பு, மறுபுறம் பாராளுமன்றத்தில் பலமான எதிர்க் கட்சி, அடுத்தது மக்களின் எதிர்ப்பு. இவ்வாறு செயற்பட முடியாமல் தவிக்கும் இந்த அரசாங்கம் தப்பிக்க வழி தேடுவதாகவும் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாரதம்

## ஜெயலலிதாவின் மரணம் குறித்து சி.பி.ஐ.விசாரணையே சிறந்தது

### மு.க.ஸ்ராலின் தெரிவிப்பு



(சென்னை)

ஜெயலலிதாவின் மரணம் தொடர்பில் உண்மையைக் கண்டறிவதற்கு இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினர், விசாரணை நடத்துவதே சிறந்ததென தி.மு.க.தலைவர் மு.க. ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.

அண்ணா அறிவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

"ஜெயலலிதா மரணம் தொடர்பில் முறையாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும்.

அந்தவகையில் ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மங்கள் இருப்பது உண்மை என்பதால், இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்துவதே சிறந்ததாகும்.

அப்போதுதான் நாட்டு மக்களுக்கு உண்மை தெரியவருமே ஒழிய, ஆறுமுகசாமி ஆணையகத்தினால் ஒருபோதும் உண்மை வெளிப்படுத்தப்படமாட்டாது.

இதேவேளை 2019 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில், மிகப்பெரிய மாற்றம் நிச்சயம் ஏற்படுவது உறுதி" என மு.க.ஸ்ராலின் குறிப்பிட்டுள்ளார். (7)

## ஆபத்தான மாநிலமாக நாகலாந்து அறிவிப்பு ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் நீடிப்பு

(நாகலாந்து)

நாகலாந்து மாநிலம் முழுவதையும் ஆபத்தான மாநிலமாக அறிவித்து அங்கு அமுலில் உள்ள ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை மத்திய அரசு மேலும் 6 மாதங்களுக்கு நீட்டித்துள்ளது.

நாகலாந்து மாநிலத்தில் ஆயுதப்படைட் (சிறப்பு அதிகாரச்) சட்டம் நீடிக்கப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சகம் இது தொடர்பாக நேற்றுத் திங்கட்கிழமை வெளியிட்ட அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பயங்கரவாதிகள் மற்றும் உள்நாட்டு போராளிக் குழுக்களின் நடமாட்டம் அதிகம் உள்ள ஜம்மு-காஷ்மீர் மற்றும் அசாம், மேகாலயா, மணிப்பூர், நாகலாந்து, அருணாச்சலப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் மத்திய அரசின் ஆயுதப்படை (சிறப்பு அதிகாரச்) சட்டம் அமுலில் உள்ளது.

அந்தவகையில் போடோலாந்து, நக்சலைட், மாவோயிஸ்ட், நாகா விடுதலை முன்னணி ஆகிய அமைப்பினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வன்முறையில் ஈடுபடுவோர் மற்றும் பொதுச் சொத்துகளை நாசப்படுத்துவோரை உடனடியாக கைது செய்யவும், தேவை ஏற்படும்போது தற்காப்புக்காக சுட்டுக் கொல்லவும், சந்தேகத்துக்குரிய பகுதிகளில் முன்அனுமதியின்றி சோதனை நடத்தவும் துணை இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு இந்தச் சட்டம் அதிகாரம் அளிக்கின்றது.

அண்மைக்காலமாக இம் மாநிலத்தில் நடைபெற்று வரும் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் போன்ற குற்றச்செயல்களைக் கருத்தில் கொண்டே குறித்த சட்டம் நீடிக்கப்படுவதாக மத்திய உள்துறை அமைச்சகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (7)

### சீக்கியர்களுக்கு எதிரான கலவரம்

## சரணடைந்த சஜ்ஜன் சிறையில் அடைப்பு!



(டில்லி)


சீக்கியர்களுக்கு எதிரான கலவரம் தொடர்பான வழக்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சரணடைந்த சஜ்ஜன் குமார் சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சிப் பிரமுகர் சஜ்ஜன் குமார், மகேந்தர் யாதவ் மற்றும் கிஷன் கோக்கார் ஆகியோர் நேற்று முன்தினம் டில்லியிலுள்ள கர்கர்டூமா நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.

இந்நிலையில், சஜ்ஜன் குமாரின் உயிருக்கு ஆபத்து உள்ளதால் பாதுகாப்புக் கருதி அவரை திகார் சிறையில் வைக்க வேண்டும் என்று கோரிய அவரது சட்டத்தரணி கோரிக்கையை நீதிபதி நிராகரித்துள்ளார்.

உரிய பாதுகாப்புடன் அவரைத் தனி வாகனத்தில் கொண்டுசென்று மன்டோலி சிறையில் அடைக்குமாறு பொலிஸாருக்கு நீதிபதி அறிவுறுத்தியதைத் தொடர்ந்து சஜ்ஜன் குமார் மன்டோலி சிறையில் அடைக்கப்பட்டார். (7)

## உலகளாவிய ரீதியில் நேற்று புத்தாண்டுக் கொண்டாட்டம்



(லண்டன்)

மிகுந்த எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் உலக மக்கள் 2019 புத்தாண்டை கோலாகல கொண்டாட்டங்களுடன் வரவேற்றுள்ளனர்.

அந்தவகையில் பிரித்தானிய மக்கள் லண்டனில் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையிலுள்ள மிகப்பெரிய மணிக்கூடு ஒலிக்க, வான வேடிக்கைகளுடன் புத்தாண்டை வரவேற்றனர்.

வேடிக்கையான தொப்பிகளையும் கண்கவர் ஆடைகளையும் அணிந்து வீதியில் கொண்டாட்டங்களுடன் மிகவும் வித்தியாசமான முறையில் ஜேர்மனியில் புத்தாண்டு வரவேற்கப்பட்டது.

பரிஸ் எலிசி அவனியூவில் கூடிய ஆயிரக்கணக்கான மக்கள் பாரம்பரிய இசை நிகழ்ச்சிகளுடன் 2019 ஆம் ஆண்டை வரவேற்றனர். அமெரிக்க மக்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது, நியூயோர்க் ரைம்ஸ் சதுக்கத்தில் வர்ண வான வேடிக்கைகளுடன் 2019 ஆம் ஆண்டை வரவேற்றனர்.

சீனாவில் ஆடல், பாடல்களுடன் புத்தாண்டு வரவேற்பு நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

இதேவேளை, பியாங்யாங்கிலுள்ள வடகொரிய கிம் - 2 சதுக்கத்தில் கூடிய ஆயிரக்கணக்கான மக்கள் இசை நிகழ்ச்சிகள் மற்றும் வானவேடிக்கைகளுடன் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். (7)

## பிலிப்பைன்ஸில் ... உயிரிழப்பு 70 ...



(மணிலா)

பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்துள்ளது.

அந்நாட்டு பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியிலுள்ள மிண்டானோ தீவில் கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவு கோலில் 6.9 அலகாக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இதற்கிடையே, பிலிப்பைன்ஸ்

## சுதந்திரமாகவும் ... தேர்தல் நடைபெற்...

### ஷேக் ஹசினா தெரிவிப்பு



(டாக்கா)

பங்களாதேஷ் பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடந்து முடிந்ததாகவும்

## இந்தோனேஷியா... ஐந்து பேர் பலி, 4...

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் இடம்பெற்ற நிலச்சரிவில் சிக்குண்டு ஐவர் உயிரிழந்துள்ளதுடன், 40 பேர் காணாமல் போயுள்ளனர்.

இந்தோனேசியாவின் ஜாவா தீவிலேயே நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்போது 30 இற்கும் மேற்பட்ட வீடுகள் மண்



# வெளிநாடு

## ...யில் நிலச்சரிவு! ...0 ஆக உயர்வு!



நிலநடுக்கத்தை தொடர்ந்து அங்கு ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி 22 பேர் உயிரிழந்ததாக முதல் கட்ட தகவல் வெளியானது.

இந்நிலையில், நிலச்சரிவு, வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், நிலச்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தொடர்ச்சியாக மீட்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (7)

## ...ம் நேர்மையாகவும் ...ற்று முடிந்துள்ளது

நான்காவது முறையாக அந்நாட்டின் பிரதமராகப் பதவியேற்கவுள்ள ஷேக் ஹசினா தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷில் மொத்தம் 300 தொகுதிகளில் 299 தொகுதிகளுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடத்தப்பட்டு உடனடியாக வாக்குப் பதிவு தொடங்கியது.

இதில் வாக்குப்பதிவு நடந்தபோது பல்வேறு நகரங்களில் நடந்த வன்முறைச் சம்பவங்களில் 20 பேர் பலியாகினர்.

பொதுத்தேர்தலில் 288 தொகுதிகளில் ஷேக் ஹசினாவின் அவாமி லீக் தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றது.

இதில் எதிர்க்கட்சிகள் வெறும் 6 இடங்களையே கைப்பற்றின.

இந்த வெற்றி மூலம் ஷேக் ஹசினா நான்காவது முறையாக பங்களாதேஷின் பிரதமராக வரலாற்றுச் சாதனை படைத்தார்.

இந்த நிலையில் தேர்தல் முறையாக நடத்தப்படவில்லை என்றும் மீண்டும் முறையாகத் தேர்தல் நடைபெற வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்தன. இதற்கு ஷேக் ஹசினா பதிலளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் பேசும்போது,

" இந்தத் தேர்தல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடந்ததுள்ளது. என்னுடைய கட்சி அனைவருக்காகவும் உழைத்தது.

எதிர்க்கட்சிகளின் தோல்விக்கு அவர்களே காரணம்.

அவர்கள் தேர்தல் பிரசாரத்தில் சரியாக ஈடுபடவில்லை" என்றார். (7)

## ...பாவில் நிலச்சரிவு; ..., 40 பேர் மாயம்!



...ணில் புதையுண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் தற்போது தொடர்ச்சியாக மீட்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் அந்நாட்டு இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## பங்களாதேஷ் பாராளுமன்றத்தேர்தல்; மீண்டும் பிரதமராகிறார் ஷேக் ஹசினா

(டாக்கா)

பங்களாதேஷில் பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று முன்தினம் நடைபெற்ற நிலையில், ஷேக் ஹசினாவின் அவாமி லீக் கட்சி பெரும்பான்மை இடங்களை கைப்பற்றி ஆட்சி அமைத்துள்ளது.



பங்களாதேஷில் பாராளுமன்றத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்று முடிந்தது. இந்த தேர்தலில், பிரதமர் ஷேக் ஹசினா தலைமையிலான அவாமி லீக் கட்சி மற்றும் முன்னாள் பிரதமர் கலிதா ஜியா தலைமையிலான பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி இடையே கடும் போட்டி நிலவியது.

மொத்தமுள்ள 300 தொகுதிகளில் 299 தொகுதிகளுக்கு நேற்று முன்தினம் தேர்தல் நடைபெற்றது.

இதில் ஷேக் ஹசினாவின் அவாமி லீக் கட்சி பெரும்பான்மை இடங்களை கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சி அமைக்கவுள்ளது.

பங்களாதேஷைப் பொறுத்தவரை பெரும்பான்மை இடங்களைப் பெற 151 தொகுதிகளைக் கைப்பற்ற வேண்டும்.

அவாமி லீக் கட்சி 281 இடங்களை கைப்பற்றியுள்ளது. இதன்மூலம் மூன்றாவது முறையாக பங்களாதேஷ் பிரதமராக ஷேக் ஹசினா ஆட்சி அமைக்கவிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே இந்த தேர்தலில் முறைகேடு நடந்ததுள்ளதாகவும், இது கேலிக்கூத்தானது என்றும் எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர். எதிர்க்கட்சி மொத்தமாக ஏழு தொகுதிகளை மட்டுமே கைப்பற்றியுள்ள நிலையில், பாரபட்சமின்றி மறுதேர்தல் நடத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளது.

முன்னதாகத் தேர்தல் சம்பந்தப்பட்ட வன்முறை மற்றும் மோதலில் 17 பேர் பலியாகியுள்ளனர். வன்முறைகள் பரவுவதை தடுக்க நாடு முழுவதும் இணைய சேவையும் முடக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (4-7)

## இராணுவத்தின் வான்வழித்தாக்குதலில் ஐ.எஸ்.பயங்கரவாதிகள் 28 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவத்தினர் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் 28 பேர் பலியானதாக அதிகாரிகள் தெரிவீத்துள்ளனர்.



ஆப்கானிஸ்தான் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஐ.எஸ்.பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற நிலையில் ஆப்கானிஸ்தானின் நங்கர்ஹர் மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் பதுங்கியுள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகளை குறிவைத்து இராணுவத்தினர் நேற்று முன்தினம் வான்வழித்தாக்குதல் நடத்தினர்.

இந்தத்தாக்குதலில் ஐ.எஸ். அமைப்பின் உளவுப்பிரிவின் பொறுப்பாளரான செதிக்யர் உட்பட 28 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (7)

## ஆப்கானில் விமானத்தாக்குதல் 20 பயங்கரவாதிகள் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் வடக்கு பர்யாப் மாகாணத்தில் பயங்கரவாதிகளை குறிவைத்து விமானப்படையினர் நடத்திய தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டனர்.



ஆப்கானிஸ்தான் நாட்டில் சுமார் 45 சதவீதம் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் தலிபான் பயங்கரவாதிகள் ஏராளமான பொது மக்களை கொன்று குவித்து வருகின்றனர். அவர்களை வேட்டையாடும் நோக்கத்தில் இராணுவமும் விமானப் படையும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், அந்நாட்டின் வடக்கு பர்யாப் மாகாணத்திற்குட்பட்ட காகா சப்ஸ் போஷ் மற்றும் காய்சார் மாவட்டங்களில் நேற்றிரவு பயங்கரவாதிகளை குறிவைத்து விமானப்படையினர் நடத்திய தாக்குதலில் 3 உள்ளூர் பயங்கரவாத இயக்கத் தலைவர்கள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் 3 பேர் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (4-7)

## அமெரிக்காவுடன் பேச்சுக்குத் தயார்

### ட்ரம்புக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் கடிதம்

(மொஸ்கோ)

அமெரிக்காவுடன் விரிவான பேச்சு நடத்த ரஷ்யா தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடிதம் எழுதியுள்ளார்.



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தலையீடு, உக்ரேய்ன் விவகாரம் உள்ளிட்டவற்றால் அமெரிக்கா-ரஷ்யா இடையே அண்மைக்காலமாக மோதல் போக்கு நீடித்து வருகிறது. இதன் காரணமாக ஆர்ஜென்டினாவில் அண்மையில் நடைபெற்ற ஜி20 மாநாட்டில் புடினுடனான சந்திப்பை ட்ரம்ப் தவிர்த்துவிட்டார்.

இந்த நிலையில், ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், "பல்வேறு விவகாரங்கள் குறித்து அமெரிக்காவுடன் விரிவான பேச்சு நடத்த ரஷ்யா தயாராக இருக்கிறது" என புடின் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யா-அமெரிக்கா இடையேயான நல்லுறவு சர்வதேச பாதுகாப்பையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்துவதற்கான முக்கிய காரணி என புடின் அக்கடிதத்தில் வலியுறுத்தி உள்ளார்.

அதேபோல் சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாதுக்கு புடின் எழுதியுள்ள கடிதத்தில், பயங்கரவாதத்தை எதிர்க்கவும் இறையாண்மையைக் கட்டிக்காக்கவும் சிரிய அரசுக்கும் மக்களுக்கும் தேவையான அனைத்து உதவிகளையும் ரஷ்யா தொடர்ந்து செய்யும் என உறுதியளித்துள்ளார். (7)

# தமிழை விழுங்கியது சீன மொழி

## அமைச்சர் மனோ கணேசன் கண்டனம்




(கொழும்பு)

இலங்கையில் சீனாவின் கட்டுமானத் திட்டங்களின் போது, தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு, சீன மொழி உள்வாங்கப்பட்டுள்ளமை குறித்து அமைச்சர் மனோ கணேசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டு, அதிகாரபூர்வ மொழிகள், சமூக மேம்பாட்டு, இந்து கலாசார அமைச்சரான மனோ கணேசன் தனது டுவிட்டர் பக்கத்தில் இது தொடர்பான பதிவுகளை இட்டுள்ளார்.

"இலங்கையில் சீனாவின் கட்டுமானத் தளங்களில் உள்ளூர் மொழிச் சட்டங்கள் மீறப்படுவதை நாங்கள் சகித்துக் கொள்ளமாட்டோம். தேவைப்பட்டால், சீனத் தூதரகம் உள்ளிட்ட எல்லாத் தரப்புகளுடனும் பேசும் திட்டம் உள்ளது.

இலங்கையின் உள்ளூர் சட்டங்களுக்குச் சீனர்கள் மதிப்பளிக்க வேண்டும்.

கொழும்பு பெருநகர திடக்கழிவு முகாமைத்துவ திட்டப் பகுதியில் நாட்டப்பட்டுள்ள பலகை தொடர்பாக எமது அமைச்சு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

அந்தப் பெயர்ப்பலகையில், சிங்களம், மண்டரின், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. எனினும் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது.

சீனாவின் திட்டப் பகுதிகளில் பெயர்ப்பலகைகளில், ஆங்கிலம் மற்றும் மண்டரின் மொழிகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஒன்று அல்லது இரண்டு உள்ளூர் மொழிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன" என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (இ-7)

# எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தவுக்கு புதிய மேலதிக செயலரை நியமிக்குக

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் கோரிக்கைக்கு அமைய புதிய செயலாளரை நியமிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திற்கு புதிதாக மேலதிக செயலாளர் ஒருவரை நியமிப்பதற்கு பிரதமரால் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்க்கட்சித் தலைவருக்காக இதுவரை இவ்வாறான செயலாளர்கள் இல்லாத நிலையில், தற்போது எதிர்க்கட்சி அலுவலகத்தின் சிரேஷ்ட செயலாளருக்கு மேலதிகமாக இந்தப் புதிய மேலதிக செயலாளர் நியமிக்கப்படவுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் கோரிக்கைக்கமைய இந்த அமைச்சரவை பத்திரம், பிரதமரால் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நாடாளுமன்றத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் பிரதமர் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் வினவிய போது, அமைச்சரவை திருத்தம் தொடர்பான தகவல்கள் அனைத்தும் இரகசியமானதென அவர் தெரிவித்தார். (இ-7)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிக்கித் தவிக்கும் பயணிகள்!



(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக பயணிக்கும் பெருமளவு பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாகத் தெரிய வந்துள்ளது.

விமான நிலையத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட கணனி மற்றும் விமான பயணக் கடவுச்சீட்டு ஸ்கான் செய்யும் இயந்திரம் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தினுள் இயங்கும் குடிவரவு-குடியகல்வு அதிகாரிகளின் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக புதிய இயந்திர கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

எனினும் புதிதாக உருவாக்கப்பட்ட கணனி மற்றும் விமானப் பயண கடவுச்சீட்டு ஸ்கான் செய்யும் இயந்திரம் காரணமாக முன்னரை விடவும் தற்போது அதிக நேரம் எடுப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று மடங்கிற்கு அதிக நேரம் தற்போது செலவாகுவதனால் விமான நிலையத்தினுள் பயணிகள் வரிசையில் சிக்கித் தவிப்பதாகத் தெரியவந்துள்ளது.

50 கணனிகள் மற்றும் 50 ஸ்கானர் இயந்திரங்கள் கடந்த மாதம் முதலாம் திகதி பொருத்தப்பட்டுள்ளன. அதன் பின்னரே நீண்ட வரிசை அதிகரித்துக் காணப்படுவதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் இலங்கைக்கு அதிகம் சுற்றுலா பயணிகள் வருகைதரும் காலப் பகுதிகளாகும். இவ்வாறான நிலையில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந் நிலைமையால் அதிகாரிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# தனது உயிருக்கு அச்சுறுத்தல் என சண்.குகவரதன் பொலிஸில் முறைப்பாடு

(கொழும்பு)

தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து மேல் மாகாண சபை உறுப்பினர் சண். குகவரதன் பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில், தனக்கு உரிய பாதுகாப்பு வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏழு கோடி ரூபாய் காசோலை மோசடி செய்ததாக தெரிவித்து மேல்மாகாண சபை உறுப்பினர் சண். குகவரதன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து, அவர், கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிணையில் விடுவிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இவ்வாறான நிலையிலேயே, தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்படுவதாக தெரிவித்து சண்.குகவரதன் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மூவகை குணங்கள்

ஒரு செல்வந்தர் ஒரு காட்டுவழியாகப் போய்க்கொண்டிருந்தார். வழிப்பறி செய்யும் திருடர்கள் மூன்று பேர் பார்த்து விடுகிறார்கள்! சும்மா விடுவார்களா? ஓடிவந்து சுற்றி நின்று விட்டார்கள்.

"என்ன வைத்திருக்கிறாய்... மரியாதையாக எடுத்துக் கொடுத்து விடு" என்று மிரட்டினார்கள்! இவருக்கு உயிர் தானே பெரிது... அதனால் இருப்பதை எல்லாம் எடுத்துக் கொடுத்து விட்டார்.

அவங்களும் எல்லாவற்றையும் பறித்து விட்டார்கள்! சரி நாங்கள் ஓடிப்போய் விடலாம் என்று புறப்படும் நேரம் அந்த மூன்று திருடனில் ஒருத்தன் யோசிக்க ஆரம்பித்தான்!

"இவனை உயிரோடு விட்டு வைப்பதனால் என்ன இலாபம்?" என்று சொல்லிக்கொண்டே கத்தியைக் கையில் எடுத்தான். அந்த ஆளை வெட்டப் போனான். இன்னொரு திருடன் இதைப்பார்த்தான். இவனைத் தடுத்து நிறுத்தினான்.

"வேண்டாமப்பா! இவனைக் கொன்று விடுவதால் மட்டும் நமக்கு என்ன இலாபம்? இவனுடைய கையைக் காலை வேண்டு என்றால் கட்டி இங்கேயே போட்டுவிட்டுப் போய்விடுவோம்!" என்றான்.

"அதுவும் சரி தான்" என்று தோன்றியது! மூன்று பேரும் சேர்ந்து அந்த ஆள் கையையும் காலையும் ஒரு கயிற்றால் சேர்த்து நன்றாக இறுக்கிக் கட்டினார்கள்! அதற்குப் பின்னர் வீதி ஓரமாக அந்த ஆளைத் தூக்கிப் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். கொஞ்ச நேரம் ஆகியது. மூன்றாவது திருடன் மறுபடியும் அதே இடத்துக்குத் திரும்பி வந்தான். வீதி ஓரமாக இருந்த அந்த ஆளைப் பார்த்தான். இரக்கப்பட்டவன்.

"ஐயா பாவம்! உனக்கு வலிக்குதா?" என்று கேட்டான். கொஞ்சம் இரு... இந்தக் கட்டையெல்லாம் அவிழ்த்து விடுகிறேன்! என்று சொல்லிக்கொண்டே கட்டுகளைக் அவிழ்த்து விட்டான். அதற்குப் பின்னர் "என்னோடு வா! உனக்கு வழிகாட்டுகிறேன்" என்று சொல்லி அழைத்துக்கொண்டு போனான்.

"அதோ தெரிகிறது பார் உன்னுடைய வீடு! போய்ச் சேர்!" என்று சொல்லி விட்டுக் காட்டினான். அந்த ஆளு சொன்னார், "ஐயா! நீங்கள் எனக்குப் பெரிய உபகாரத்தைப் செய்திருக்கிறீர்கள்... நீங்களும் என் வீட்டுக்கு வந்துவிட்டுப் போங்களேன்... எல்லோரும் சந்தோசப்படுவார்கள்!" என்று சொல்லிக் கூப்பிட்டார்.

அதற்குத் திருடன், "நீ சொல்வது போல் நான் வருவதற்கு இல்லை! வரக்கூடிய தகுதியும் எனக்கு இல்லை! வந்தால் காவலர்கள் என்னை பிடித்துக்கொள்வார்கள்!" என்று சொல்லி இவரை அனுப்பி வைத்துவிட்டுப் போய் விட்டான். பழையபடியே காட்டுக்குள்ளேயே போய் மறைந்து விட்டான்.

ஸ்ரீராம கிருஷ்ணர் சொன்ன கதை இது, எதுக்காக இதை சொன்னார். இந்த உலக வாழ்க்கை ஒரு காடு மாதிரி... இந்தக் காட்டில் மூன்று திருடர்கள் இருக்கிறார்கள்... அவர்கள் யார் யார் தெரியுமா? சத்துவக் குணம், ரஜோ குணம், தமோ குணம் இவர்கள்தான் அந்தத் திருடர்கள்.

ஜீவாத்மா ஆகிய மனிதன் காட்டுவழியாக போகின்றான். அவனிடம் இருக்கும் பொருள் என்ன? புனிதம் நிறை ஆத்ம ஞானம். ரொம்ப விலை உயர்ந்த பொருள். அதை இந்த மூன்று திருடர்களும் வழிப்பறி செய்கிறார்கள். தமோ குணம் தான் முதல் திருடன்.

அவனை ஒரேயடியாக அழித்து விடுவதற்கு முயற்சி செய்கிறது. ரஜோ குணம் ஒருத்தனை லௌகீகத்தில் பிணைக்கிறது. அதனால் ஆசைகள் வளருகிறது. பந்தங்கள் என்பது சங்கிலியால் அவனைக் கட்டுப்படுத்துகிறது.

இந்த மூன்று திருடர்களும் நமக்குள்ளேயே இருக்கிறார்கள். சத்துவ குணம், என்ன செய்கிறது? உலக பந்தங்களிலேயிருந்தும் ரஜோதமோ குணங்களின் கொடுமையான உடும்புப் பிடிகளிலேயிருந்து ஒருத்தனைக் காப்பாற்றும்.

இருந்தாலும் சத்துவ குணமும் ஒரு திருடன் தான். அதுவே நம்மைக் கடவுளிடம் அழைத்துக்கொண்டு போய்விடாது... "அதோ பார் உன்னுடைய வீடு போய் சேர்!" என்று கையைக் காட்டிவிட்டுப் போய்விடும்.

சத்துவ குணம் உயர்ந்தது தான். இருந்தாலும் அதைவிடப் பெரிய நிலை ஒன்று உண்டு. அது இறைமயமாகவே ஆகிவிடுகிற ஞானியின் நிலை. மூன்று குணத்தையும் கடந்து போனால் தான் ஒருத்தன் பிரம்ம ஞானத்தை அடைய முடியும். இது தான் ஸ்ரீராமகிருஷ்ணருடைய கருத்து.

இதை அடிப்படையாக வைத்து நாம் எந்த நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம் என்று யோசித்துப் பாருங்கள்... எனக்கு ஒரு ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு பெரிய பணக்காரர் வீட்டில் தனியாக இருக்கிறார். வீட்டுக்கார அம்மா கோயிலுக்குப் போயிருக்கிறார்கள்.

அந்த நேரம் மூன்று திருடர்கள் உள்ளே வருகிறார்கள். கத்தியைக் காட்டி மிரட்டி நகை, பணம் எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டு கிளம்புகிறார்கள்... அவர்கள் யாருமே இவரை கட்டிப் போட வேண்டும் என்று நினைக்கவில்லை. ஆனால் இவரே அவர்களைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிடுறார். "ஐயா... நீங்கள் திருடிக்கொண்டு போவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை... ஆனால் என் கவலை வேறு! அதற்கு நீங்கள் ஒரு ஒத்தாசை செய்யவேண்டும்" என்றார்.

"என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார்கள்! என்னை இந்த நாற்காலியில் சேர்த்துக் கட்டிப் போட்டுவிட்டு என் வாயில் கொஞ்சம் துணியை வைத்து அடைத்துவிட்டுப் போய்விடுங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

திருடர்களுக்கு ஆச்சரியம்! "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்" என்று கேட்டார்கள். அதற்கு அந்த ஆள் சொல்கிறார். "நீங்கள் அப்படி என்னைக் கட்டி போடவில்லை என்றால்... இந்த நகை, பணம் எல்லாற்றையும் நான் தான் திருடி விட்டேன் என்று என் சம்சாரம் சந்தேகப்படுவாள்! அதற்காகத் தான் அப்படிச் சொல்லுகிறேன்" என்றார்.

# புத்தாண்டுப் பலன்கள் -2019

## ஜென்ம ராகு வருகிறது, சிந்தித்துச் செய்தால் நலம் சேரும்



சமயோஜித புத்தியால் சாதனைகள் நிகழ்த்தும் மிதுன இராசி வாசகர்களே!

வந்துவிட்டது புத்தாண்டு, வளர்ச்சியிலும், தளர்ச்சியிலும் சிக்கித்தவித்த உங்களுக்கு மலர்ச்சி கிடைக்கப் போகின்றது. மாபெரும் கிரகமான சனி பகவான் அஸ்தமனம் பெற்று ஆண்டின் தொடக்கத்தில் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். அஷ்டமாதிபதியாகவும், 9 இற்கு அதிபதியாகவும் விளங்கும் சனி பகவான் வலிமை இழந்து சூரியனுடனும், புதனுடனும் சேர்ந்து சஞ்சரிக்கின்றார். புத ஆதித்ய யோகத்தோடு ஆண்டு பிறக்கின்றது. தொழில் ஸ்தானம் எனப்படும் 10 ஆம் இடத்தில் செவ்வாய் சஞ்சரிக்கின்றார். அவரை 6 இல் சஞ்சரிக்கும் குருபகவான் பார்த்து குரு மங்கள யோகத்தை உருவாக்குகின்றார். இங்ஙனம் பிறக்கும் புத்தாண்டில் எண்ணற்ற மாற்றங்களும், ஏற்றங்களும் வரப்போகின்றது.

உங்களை மற்றவர்கள் புரிந்து கொள்வது என்பது அரிது. புரிந்து கொண்டுவிட்டால் கடைசிவரை நட்பைக் கைவிடமாட்டார்கள். இரக்க குணமும், அரக்க குணமும் உங்களோடு இணைந்திருக்கும். பதவிக்கு ஆசைப்படாமல், உதவிக்கு ஆசைப்படுபவர்களாக விளங்குவீர்கள். நீங்கள் கற்ற கல்வியை விட பெற்ற அனுபவம் ஏராளமாக இருக்கும். இராசி நாதனாக புதன் விளங்குவதால் இலட்சியவாதியாக இருப்பீர்கள்.

புத்தாண்டின் தொடக்க நிலை

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகின்றார். சகாய ஸ்தானாதிபதி சூரியன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும். தொழில் சம்பந்தமாக துணிந்து எடுத்த முடிவுகளால் நல்ல பலன்கள் உங்களை நாடிவரப் போகின்றது. உங்களை ஏமாற்றியவர்கள் எதிரில் வந்து சரணடைவர். தந்தை வழியில் தனவரவு கிடைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. சனியின் பார்வை இராசியில் பதிவதால் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும்.

செவ்வாயைக் குரு பார்ப்பதால் பழைய பங்குதாரர்களை விலக்கி விட்டு புதிய பங்குதாரர்களை சேர்த்துக் கொள்ள முன்வருவீர்கள். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தென்படும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தலைமைப் பதவியும், தகுந்த ஊதியமும் கிடைக்கும்.

ஆண்டின் தொடக்கத்தில் 2இல் இராகுவும், 8 இல் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். பெப்ரவரி 13 ஆம் திகதி வரை இந்த அமைப்பு இருக்கின்றது. 2 ஆம் இடத்து ராகு திரண்ட செல்வத்தை தரும் என்றாலும் அஷ்டமத்து கேதுவால் அலைச்சல்களும், அமைதியின்மையும் உருவாகும். அஷ்டமத்து கேது பலம் பெற்றிருப்பதால் ஆண்டின் தொடக்கத்திலேயே நாகசாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்றநாளில் செய்து கொள்வது நல்லது.

சப்தம ஸ்தானத்தில் சனி இருப்பதால் அடிக்கடி ஆரோக்கியத் தொல்லைகள் உருவாகி மறையும். ஜீரணத் தொல்லை, எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட தொல்லைகள் உருவாகலாம். வாகனப் பழுதுகளால் கவலை ஏற்படும். புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். வாழ்க்கைத்துணை வழியே சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும்.

பொருளாதாரத்தில் திடீர் சரிவுகள் ஏற்பட்டு அகலும். வெளிநாட்டு வணிகத்தை கொஞ்சம் யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது. தொழில் நடத்தும் இடம் வாடகைக்குப் பிடித்திருந்தால் உரிமையாளர்களால் சில பிரச்சினைகள் உருவாகலாம். விரயாதிபதி சுக்கிரன் 5இல் சஞ்சரிப்பதால் பிள்ளைகளால் விரயம் 'உண்டு. பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது.

ராகு-கேது பெயர்ச்சிக் காலம்

ஆண்டின் தொடக்கத்தில் இரண்டாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகுவும், எட்டாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவும் பிப்ரவரி 13 ஆம் திகதி மாற்றமடைகின்றார்கள். பின்னோக்கி நகர்ந்து செல்லும் இந்த கிரகங்களின் பெயர்ச்சி தான் நீங்கள் முன்னோக்கி நகர்ந்து செல்ல வழிகாட்டுகின்றது. அன்றைய தினம் ஜென்மத்தில் இராகுவும், 7இல் கேதுவும் சஞ்சரித்து எண்ணற்ற மாற்றங்களை உருவாக்கப் போகிறார்கள்.

வரும் மாற்றம் வளம் தரும் மாற்றமாக அமைய வீடு தேடி வரும் இராகுவையும், சப்தம கேதுவையும் பரிகாரம் செய்து பலப்படுத்த வேண்டியது நமது கடமையாகும்.

ஜென்மத்தில் சஞ்சரிக்கும் இராகுவால் பெரிய மனிதர்களின் தொடர்பும், பிரச்சினைகள் அனைத்தும் தீரும் வாய்ப்பும் உருவாகும். 'ராகுவைப் போல கொடுப்பானுமில்லை' என்பது பழமொழி. அங்ஙனம் அள்ளிக்கொடுக்கும் ராகு உங்கள் இல்லம் தேடி வரும் பொழுது சலசலப்பு ஓயும். கலகலப்பு கூடும்.

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் குடும்பத்தில் கூடுதல் செலவுகள் உருவாகலாம். கடுமையாக முயற்சித்தும் இதுவரை நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். வேலைக்காரர்களால் ஏற்பட்ட வேதனைகள் அகலப் புதிய பணியாளர்களை நியமிப்பீர்கள். உறவினர் பகை கொஞ்சம் அதிகரிக்கலாம்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகவும், வெளிநாடு செல்லும் முயற்சிக்காகவும் பெரும் தொகை ஒன்றைச் செலவிடலாம். சனியோடு கேது இணைந்திருப்பதால் பூர்வீகச்சொத்து சம்பந்தமாக புதிய பிரச்சினைகள் உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. ஒருசிலருக்கு கடன் சுமை அதிகரிக்கும். இதுபோன்ற காலங்களில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது.

குருப்பெயர்ச்சிக் காலம்

ஒக்டோபர் 28 ஆம் திகதி குருப்பெயர்ச்சி நிகழ இருக்கின்றது. ஆண்டின் தொடக்கத்தில் 6இல் சஞ்சரிக்கும் குரு பகவான் அப்பொழுது 7 ஆம் இடத்திற்கு வந்து எண்ணற்ற நற் பலன்களை வழங்கப் போகின்றார். குரு சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது யோகம் தான். குரு சப்தம பார்வையாக உங்கள் இராசியைப் பார்ப்பதும் யோகம். குரு வின் நேர்பார்வை உங்கள் இராசியில் இருப்பதால் கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். கூடுதல் இலாபம் கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி உருவாகும்.

குருபார்வையால் ஜென்ம இராசி மட்டு மின்றி 3, 11 ஆகிய இரண்டு இடங்களும் புனிதமடைகின்றன. எனவே உடன்பிறப்புகள் உறுதுணையாக




விளங்குவர். உங்களுக்கு இணக்கமாக இல்லாமல் பிணக்கை ஏற்படுத்திய தொழில் பங்குதாரர்கள் இனி கணக்கு வழக்கைப் பார்க்கச் சம்மதிப்பர். சேமிப்பு உயர்ந்து கொண்டே போவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கூடுதலாகக் கிடைக்கும்.

குருவின் அதிசாரமும், வக்கிரமும்

ஆண்டின் தொடக்கத்தில் விருச்சிக இராசியில் சஞ்சரிக்கும் குரு பகவான் மார்ச் 13 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். இடையில் வக்கிரமாகவும் உலா வருகின்றார். இதன் விளைவாக நற்பலன்களே உங்களை நாடி வரும். காரணம் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகமான குரு பகவான் வலிமை இழக்கும் போதெல்லாம் நல்ல பலன்களையே அள்ளி வழங்குவார். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது கல்யாண வாய்ப்புகள் கை கூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகள் ஒருசிலருக்கு வாய்க்கும். பொன், பொருள் சேர்க்கைக்கு வழி பிறக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஒரு சிலர் தொழில் புரியும் இடத்தை விலைக்கு வாங்க நினைப்பர். அந்த வாய்ப்புகளும் கைகூடலாம். இதுபோன்ற காலங்களில் முறையாக குரு பீடங்களுக்கு சென்று குருவை வழிபட்டு வந்தால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும்.

கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

7.5.2019 முதல் 24.6.2019 வரை சனி, செவ்வாய் பார்வைக் காலமாகும். இக்காலத்தில் மிதுனச் செவ்வாயைத் தனுசு சனி பார்க்கின்றது. இக் காலத்தில் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது. உறவினர் பகை உருவாகும். ஊர் மாற்றங்கள் எதிர்பாராத விதத்தில் வந்து சேரும். சேமிப்பு கரைகின்றதே என்று கவலைப்படுவீர்கள். குடும்ப முன்னேற்றத்தில் சில குறுக்கீடுகள் ஏற்படலாம்.

5.6.2019 முதல் 29.6.2019 வரை ரிஷப சுக்கிரனை விருச்சிக குரு பார்க்கின்றார். இக்காலத்தில் சுப காரியப் பேச்சுகள் கைகூடும். வீண் விரயங்களிலிருந்து விடுபட சுப விரயங்களை மேற்கொள்வது நல்லது. வாகன மாற்றம் செய்ய முன்வரும் நேரமிது. தங்கம், வெள்ளி வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்கும் முயற்சி கைகூடும்.

வளர்ச்சி தரும் வழிபாடு

அஷ்டலட்சுமி கவசம் படித்து மகாலட்சுமியை புதன்கிழமை தோறும் வழிபடுவது நல்லது. யோகபலம் பெற்ற நாளில் தஞ்சை பெரிய கோவில் சென்று சப்த தெய்வ அர்ச்சனைகளைச் செய்து வருவதோடு, நந்தி மற்றும் வராகி தெய்வத்தையும் வழிபட்டு நலங்களையும், வளங்களையும் வரவழைத்துக் கொள்ளுங்கள்.

சனியின் வக்கிர காலம்

8.5.2019 முதல் 3.9.2019 வரை தனுசு ராசியில் பூராடம் நட்சத்திரக் காலில் சனி வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் நன்மை, தீமை இரண்டும் கலந்தே நடைபெறும். உங்கள் இராசிக்கு 8, 9 ஆகிய இரண்டு இடங்களுக்கும் சனி அதிபதியாவதால் ஆரோக்கியத் தொல்லையில்இருந்து விடுபடுவீர்கள். மாற்று மருத்துவத்தால் உடல்நலத்தை சீராக்கிக் கொள்ள முன்வருவீர்கள். அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டுமென்று சொன்ன மருத்துவர்கள் கூட இனி சாதாரண சிகிச்சையிலேயே நோய் குணமாகி விடுமென்று சொல்வர். அதே நேரத்தில் பிதுர்ரார்ஜித ஸ்தானத்திற்கும் சனி அதிபதியாவதால் தந்தை வழி உறவில் விரிசல் ஏற்படும், விரோதங்கள் அதிகரிக்கும். உரிய விதத்தில் பெற்றோர் களின் ஆதரவு கிடைக்காது. பூர்வீக சொத்துக்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

மிதுன இராசியில் பிறந்த பெண்களுக்கு ஆண்டின் தொடக்கத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். பொறுப்புகள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தைப் பேணி வைத்துக்கொள்வது இயலாத காரியமாகத் தெரியும். இருப்பினும் குருப் பெயர்ச்சிக்குப் பிறகு நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். கணவன்-மனைவி உறவில் ஒற்றுமையும், திருப்தியும் ஏற்படும். பிள்ளைகளுக்கான வேலை வாய்ப்பும், மாலை சூடும் வாய்ப்பும் கைகூடும்.


உடன்பிறப்புகளின் பகை உருவாகலாம். அதே சமயம் தாய்வழி ஆதரவு உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு இனிய தகவல் வந்து சேரும். ஆஞ்சநேயர் வழிபாடும், தெசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடும் திருப்தியான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும்.

(தொடரும்)

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -



யாழ். பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் புத்தாண்டு தினமான நள்ளிரவு விசேட ஆராதனைகள் இடம்பெற்றன. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)



# பாலிதீவு- பயணத்தின் அனுபவம்

13

சோ.நிக்கஞ்
அரியாலை.



பாலிதீவில் எங்களது எட்டாவதும் இறுதியானதுமான நாள். இதற்கு முந்தைய நாளில் பாதி ஓய்வாக கழித்திருந்தாலும் இன்றைய நாளிற்கென திட்டம் ஏதும் அந்த சமயம் கைவசம் இருக்கவில்லை.

நாங்கள் தவற விட்ட முக்கியமான இடங்கள் ஆராய்ந்த போது இரண்டு இடங்கள் சிக்கியது ஒன்று **Breton temple** மற்றையது **lembayung temple** அல்லது **heaven gate.** இரண்டுஇடங்களுக்கும் போய்வருவதற்காக சாரதிகளிடம் முகப் புத்தகத்தில் விலைகளை விசாரித்த போது தான் தெரிந்தது இரண்டும் இருப்பது எதிர் எதிர் திசைகளில் என்று.

எல்லா சாரதிகளும் பேசி வைத்தது போல் ஏதாவது ஒருஇடத்திற்கு தான் போகலாம் என்றார்கள். அங்கு போய் வரும் வழியில் பார்க்கக் கூடிய இடங்களின் பட்டியலையும் தந்தார்கள்.

**Breton temple** உடனான பட்டியலில் நாங்கள் ஏற்கனவே பார்த்த இடங்கள் தான் இருந்தன. அத்தோடு ஒப்பிடுகையில் இரண்டாவது நன்றாக இருப்பது போல இருந்ததனால் அதற்குரிய விலைகளை விசாரிக்க தொடங்கினோம்.

விலைகளை விசாரித்தது முகப்புத்தகத்தில் தான். முகப்புத்தகத்தில் கிட்டத்தட்ட மூன்று இலட்சம் உறுப்பினர களை கொண்ட **Bali travelers information** எனும் குழு



ஒன்று உள்ளது. இதில் உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை கேட்டு அறிந்து கொள்ளலாம். அதோடு தனியாக இயங்கும் சாரதிகளையும் பெற்றுக் கொள்ளலாம். அப்படி ஐந்தாறு நபர்களிடம் விசாரித்து நாங்கள் வரச்சொல்லிய நபர் தான் **Firman** (பேர்மன்).

என்னைப் பொறுத்த வரையில் **Firman** தான் நாங்கள் சந்தித்த சாரதிகளில் ஓரளவுக்கு பிடித்தமானவராக இருந்தார்.

குறைந்த விலை என்பதால் தான் வேறு எதையும் விசாரிக்காது அவர் சொல்லியிருந்தோம். அன்று காலையில் தான் அவரை சந்தித்தோம். கொஞ்சம் வயதான ஆள் போல தெரிந்தாலும் வயது 21 தான் என்றார்.

படித்து முடித்து விட்டு கைகட்டி வேலை செய்ய விருப்பமில்லாததால் சாரதியாக இருப்பதாக கூறினார்.

பழகியது வரை நல்ல மனிதராக தெரிந்தார். பயணம் முடிந்த பின்பு அவரிடம் நேரிடையாகவே இதைக்கூறினோம். மிகவும் மகிழ்ந்து போனார்.

**Firman** எங்களை முதலில் அழைத்துச் சென்ற இடம் **lembayung temple** அல்லது **heaven gate** என அழைக்கப்படும் இடத்திற்காகும். ஆரம்பத்தில் பிரபல்யம் இல்லாத இந்த இடம் ஒரு தனித்துவமான படத்திற்காக மிகப்பிரபல்யம் பெற்று வருகிறது. இங்கிருக்கும் கோயில் வாயிலின் நேர்எதிரே மலைஒன்று உள்ளது. உள்ளிருந்து பார்க்கும் போது அற்புதமான பின்னணியுடன் தோற்றமளிக்கும்.

**Kuta**விலிருந்து இதற்குரிய பயண நேரம் கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம். கோவிலுக்கு சற்று முன்பாகவே இறக்கி விடுவார்கள். அங்கிருந்து கோவிலுக்கு மலைப்பாதையில் (தார் வீதி) ஏறிச் செல்ல வேண்டும். அது ரொம்ப கடினம். 20,000 **IDR** செலுத்தினால் இன்னுமொரு வாகனத்தில் அழைத்துச்சென்று கோவிலின் அருகாமையில் இறக்குவார்கள். திரும்பி இறங்க இன்னுமொரு 20,000 **IDR**, சறம் வாடகைக்கு 10,000 **IDR**, ஆக 50,000 **IDR** செலவாகிவிடும். கோவிலுக்குள் நுழைவதற்கு கட்டணம் ஏதும் கிடையாது.

இங்கு வருபவர்கள் கோவில வாசலில் இருந்து பின்னணியில் தெரியும் மலையுடன் கூடிய இடத்தில் இருந்து படம் பிடிககவே வருகிறார்கள். நாங்களும் வரிசையில் காத்திருந்து படம் பிடித்துக்கொண்டோம். எங்கள் துரதிர்ஷ்டம் அந்தநேரம் மேக மூட்டமாக இருந்த காரணத்தினால் பின்னணியில் இருந்த மலை தெளிவாக தெரியவில்லை.

பயணநேரம் அதிகம் பிடித்துக்கொண்டதால் நாங்கள அங்கிருந்து கிளம்பும் போதுநேரம் மதியமாகி விட்டிருந்தது. இதைவிட இன்னும்மூன்று இடங்களுக்குச் செல்ல வேண்டும். அவை எல்லாம் திரும்பும் வழியில் பார்த்துக்கொள்ளலாம் என எங்க சாரதி சொல்லியிருந்ததால் அது ஒரு ஆறுதல்.

நாங்கள் திரும்பும் வழியில் சென்ற இடம் **Trita Ganga water palace.** நுழைவுக்கட்டணமாக 30,000 **IDR** வசூலித்தார்கள். இது நீரால் அலங்கரிக்கப்பட்ட பூங்காவாகும். பெரிய அளவில் விஸ்தீரணம் இல்லா விட்டாலும் நன்றாக இருந்தது.

'ஊரெல்லாம்உன்னைக் கண்டு வியந்தாரா.' பாடலை இங்கும் படப்பிடிப்பு செய்தார்களாம். எங்கள் கூட்டமே அதை நயன்தாரா கோவில் என அழைக்க தொடங்கியது வேறு கதை..

(பயணம் தொடரும்)

# ஐக்கிய தேசியக் கட்சி விரைவில் பிளவுபடும்

## விமல் வீரவன்ச எதிர்வுகூறல்

(கொழும்பு)

ஐக்கியக் தேசிய கட்சிக்குள் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதால் விரைவில் அக்கட்சிக்குள் பிளவு ஏற்படலாம் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,



"ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக அக்கட்சிக்குள் தற்போது சிக்கல் நிலைமைகள் காணப்படுகின்றன.

அவர்களுக்குள் அமைச்சுப் பதவிகளைப் பங்கிட்டுக் கொள்வதில் முறுகல்நிலை காணப்படுவது தெளிவாகத் தெரிகின்றது. பலர் தமக்கு விருப்பமான அமைச்சுக்களைப் பெறுவதில் விடாப்பிடியாக நிற்கின்றனர்.

அதனால் எதிர்க்கட்சியான எமக்கு தற்போது நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து செயற்படக்கூடிய வாய்ப்புக் கிடைத்துள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ரங்கே பண்டாரவுக்கு பிரதமரால் அமைச்சு வழங்க முடியாது-எஸ்.பி.

(கண்டி)

பாலித ரங்கே பண்டாரவுடன் தான் தொலைபேசியில்முதலில்தொடர்பு கொள்ளவில்லையெனவும், அவர் மூன்று முறை தன்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போதே ஆதரவு தருகிறீர்களா? என்று கேட்டேன் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

பாலித ரங்கே பண்டார என்னதான் துள்ளினாலும், பிரதமரினால் ரங்கே பண்டாரவின் கோரிக்கையை நிறைவேற்ற முடியாது. ஏனெனில், 30 இற்கு மேலாக அமைச்சரவை அமைச்சுப் பதவியை வழங்க சட்டத்தில் இடமில்லையெனவும் அவர் தெரிவித்தார்.



கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

தனக்கு அமைச்சுப் பதவியும் பணமும் தருவதாக மகிந்த தரப்பு அழைப்பதாக பாலித ரங்கே பண்டாரவே கடந்த கால அரசியல் நெருக்கடி நிலையின் போது முதலில் வெளிப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்




“ தமிழ் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் பலர் வெளிப் படையாகவே மீண்டும் றோமன் கத்தோலிக்கத்தைத் தழுவிக்கொள்ள முழு மாவட்டமுமே கோவா கல்லூரியிலிருந்து வந்த குருமாரிடம் கையளிக்கப்பட்டது.சிங்கள மாவட்டங்களிலும் இதுபோன்று நிகழ்ந்தது. 1810 அளவில் 342000 ஆக இருந்த புரட்டஸ்தாந்தினரின் தொகை அரைப் பங்கிற்கும் மேலாகக் குறைந்தது. 1808 இல் இதைக் கேள்வியுற்ற வைக்கவுண்ட் காசல்ரீ (Viscount Castlereagh) என்ற இங்கிலாந்தின் அரசாங்கச் செயலாளர், இலங்கை தேசாதிபதியை உள்ளூர் மக்கள் மத்தியில் கிறிஸ்தவத்தை மேம்படுத்துவதற்கு முழுச் சக்தியையும் அர்ப்பணிக்கும்படி தூண்டினார். ”

## பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக்காலமும் தமிழரும் (கி.பி. 1796-கி.பி. 1850)

1722 இல் இத்தொகை 139388 ஆக அதிகரித்தது. 1760 இல் 182226 தமிழ் கிறிஸ்தவர் இருந்தனர். 1796 இல் பிரித்தானியரின் இருப்பின் போது இத்தொகை வியக்கத் தக்க வகையில் வீழ்ந்தது. 1802 இல் தமிழ்ப் பிரதேசங்களில் 136000 கிறிஸ்தவரும் இலங்கை முழுவதும் 342000 புரட்டஸ்தாந்தினரும் இதைவிட அதிக தொகையிலான றோமன் கத்தோலிக்கரும் காணப்பட்டனர்.

1806 அளவில் புரட்டஸ்தாந்து மதம் தமிழர் மத்தியில் அநேகமாக மறைந்தே விட்டிருந்தது. காடினர் (Gardinar) என்ற கத்தோலிக்க மதகுரு பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

இருளில் நீண்டகாலம் அலைந்த பின்னர் ஒளியின் ஆரம்பக் கீற்றுக்களை இவர்கள் ஆனந்தமாகப் பின்பற்றுகின்றனர். மத அறிவின் அறிமுகங்களை இவர்கள் தம்மை மறந்து ஏற்று அவற்றைத் தமக்குக் கற்பிக்கப் பிரயத்தனம் செய்யும் எவரையும் போற்றிக் கொண்டாடுகின்றனர்.

என்னதான் இருப்பினும் காடினரின் இந்த நம்பிக்கைக்கு ஆதாரமே இருக்கவில்லை. தமது புதிய ஆட்சியாளர்கள் மதத்தையிட்டு ஆர்வம் கொள்ளாததால் தம்மீது மதம் திணிக்கப்படவில்லை எனத் தமிழர் விரைவில் நம்பத் தொடங்கி விட்டனர்.

கிறிஸ்தவத்திற்கு மதம் மாறுவது எவ்வித பொருளாதார நலன்களையும் அளிக்காது. கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்பு வழங்கப்படுவது இப்போதெல்லாம் நடைமுறையில் இல்லை எனக் கண்ட இவர்கள் கிறிஸ்தவத்திற்கு மாறினால் எவ்விதச் சாதகமும் இல்லையென்பதை உறுதியாகப் புரிந்து கொண்டார்கள்.

எவ்வளவு விரைவில் மதம் மாறுவோர் தொகை அதிகரித்திருந்ததோ அவ்வளவு விரைவில் அது இப்போது குறையலாயிற்று. உள்ளூர் மக்கள் கிறிஸ்தவத்தை முழுமையாகப் புறந்தள்ளினர் அல்லது டச்சு ஆதிக்கத்தின் முன்னர் தாம் தழுவிக் கொண்ட கத்தோலிக்கத்துக்கு மீண்டும் திரும்பினர் என்பதைப் பின்வரும் செய்தி குறிப்புணர்த்துகிறது.

1802 இல் யாழ்ப்பாணத்துத் தமிழர் மத்தியில் புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர் தொகை குறைந்த பட்சம் 136000 ஆகவிருந்தது. 1806 இல் இலங்கைக்கு வந்த புச்சானன் (Buchanan) புரட்டஸ்தாந்து மதம் அழிந்துவிட்டது.

சிறந்த பழைய தேவாலயங்கள் சிதை ந்து கிடக்கின்றன என்றும் அந்த மாகாணத்துக்குப் பொறுப்பாகவிருந்து ஒரேயொரு இந்துவினாவிடை ஆசிரியரைத் தவிர அவ் ஆலயங்களில் பணிபுரிந்த குருமார் மறக்கப்பட்டிருந்தனர் என்றும் விபரித்துள்ளார்.

தமிழ் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் பலர் வெளிப்படையாகவே மீண்டும் றோமன் கத்தோலிக்கத்தைத் தழுவிக் கொள்ள முழு மாவட்டமுமே கோவா கல்லூரியிலிருந்து வந்த குருமாரிடம் கையளிக்கப்பட்டது.

சிங்கள மாவட்டங்களிலும் இதுபோன்று நிகழ்ந்தது. 1810 அளவில் 342000 ஆக இருந்த புரட்டஸ்தாந்தினரின் தொகை அரைப் பங்கிற்கும் மேலாகக் குறைந்தது.

1808 இல் இதைக் கேள்வியுற்ற வைக்கவுண்ட் காசல்ரீ (Viscount Castlereagh) என்ற இங்கிலாந்தின் அரசாங்கச் செயலாளர், இலங்கை தேசாதிபதியை உள்ளூர் மக்கள் மத்தியில் கிறிஸ்தவத்தை மேம்படுத்துவதற்கு முழுச் சக்தியையும் அர்ப்பணிக்கும் படி தூண்டினார்.

சேர் றொபேட் பிறவுண்றிக் (Sir Robert Brownrigg) தேசாதிபதியின் காலத்தில் (1812) இங்கிலாந்தில் மத மறுமலர்ச்சி நிகழ்ந்து அங்கு பலர் கிறிஸ்தவமல்லாத நாடுகளில் கிறிஸ்தவத்தையும் கல்வியையும் பரப்ப வேண்டுமென ஆலோசனை வழங்கினர்.

நாடு முழுவதும் கிறிஸ்தவத்தைப் பரப்பும் நோக்கத்துடன் பிரித்தானிய புரட்டஸ்தாந்து மிஷனரிமார். இலங்கைக்கு வரலாயினர்.

### தமிழ்ப் பிரதேசங்களில் றோமன் கத்தோலிக்கர்

நாம் முன்னர் பார்த்தவாறு றோமன் கத்தோலிக்கர் நாட்டில் குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்கத்தில் ஏற்கனவே இருந்தனர். 16 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்கத் திருச்சபை இலங்கை முழுவதிலும் கிறிஸ்தவத்தைப் பரப்புவதற்கு முன்னோடியாக ஆரம்பித்த போர்த்துக்கேய காலத்திலிருந்தே இவர்கள் இருந்தனர்.

பிரித்தானியர் வருகையுடன் கத்தோலிக்கர் மீதான மத ரீதியான ஆக்கின்னகள் ஈற்றில் முடிவுக்கு வந்தன. இந்த ஆக்கினைகளை அனுமதித்த சட்டங்களில் மாற்றங்கள் எதுவும் செய்யப்படாத போதிலும் இவை கைக்கொள்ளப்படாது கத்தோலிக்க மிஷனரிமார் தண்டனைக்கு அஞ்சாது போதனை செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

1806 அளவில் கத்தோலிக்கர் தமது மதத்தைப் பின்பற்றுவதற்கு ஓரளவு சுதந்திரம் கிடைத்தவராக புரட்டஸ்தாந்து மதத்திற்கு கிடைக்கின்ற அதிக சலுகைகளைத் தாமும் அனுபவிக்க ஆரம்பித்தனர். கோவாவிலிருந்து வந்த குருமார் இந்த மாற்றங்கள் நிகழும் காலத்தில் தொடர்ந்தும் சேவையாற்றிவர கத்தோலிக்க சமூகங்கள் புதிதாகத் தோன்றின.

புதிய கத்தோலிக்கத் தேவாலயங்கள் கட்டப்பட்டு கத்தோலிக்க எழுத்தாக்கங்களும் சுதந்திரமாக புழக்கத்தில் வர அனுமதி கிடைத்தது. இவ்வகையில் மிஷன் வேலைகள் அனுசரணை பெற்றதால் இலங்கையில் கத்தோலிக்கர் தொகை அதிகரித்தது. மே 1845 இல் இலங்கை, கொழும்பு, யாழ்ப்பாணம் என இரண்டு குரு சபைகளாகப் பிரிக்கப்பட்டது.

பிதா ஒறாசியோ பெற்றாச்சினி (Father Orazio Bettachini), கோ அஜூற்றாராகவும் (Coad-jutor), பிதா கேற்றானோ அந்தோனியோ (Father Gatano Antonio), விக்கார் அப்போரிலிக் (Vicar Apostilic) ஆகவும் பதினாறாம் போப்பாண்டவர் கிறகோரியினால் (Gregory) நியமிக்கப்பட்டனர்.

(தொடரும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## அத்தி

சங்க இலக்கியத்தில் அதலம் எனும் அத்தி மரம் பூத்துக் காய்க்குமாயினும் மலர்கள் வெளிப்படையாகத் தெரியாது. "அத்திப்பூத்தாற் போல" எனும் பழமொழியினாலேயே அத்தி பூக்கும் என்பத யிற்று. உணவாகக் கொள்ளப்படும் அத்திக்காயின் பிஞ்சு முட்டை வடிவானது. இதற்குள்ளே அத்திப் பூக்கள் நிறைந்திருக்கும். இப் பூக்களை தன்னகத்தே கொண்டிருத்தலின் அத்திப்பிஞ்சு கோளி எனப்படும். இதனை Receptacle என்று கூறுவர். அத்திக்காயினுள்ளே மூன்று அல்லது நான்கு வகையான பூக்கள் உள்ளன. அவை ஆண் பூ, பெண்பூ, மலட்டுப்பூ என் பன. அத்தியில் ஆண் மரமும் பெண் மரமும் தனித்தனியாக வளரும். அத் திக்காய்கள் இலைக் கோண த்தில் இரண்டிரண்டாகக் காணப்படும்.

அத்திப்பிஞ்சை சமைத்துண்ண மூல வாயு, மூலக் கிராணி, இரத்தமூலம், வயிற்றுக்கடுப்பு ஆகிய வற்றை போக்கும்.

அத்திப்பிஞ்சு, கருவேலம் பிஞ்சு, மாம் பட்டை இவைகளை சம அளவாக எடுத்து வாழை ப்பூச் சாற்றில் குடிநீரிட்டுக் குடிக்க வயிற்றுக் கடு ப்பு, சீதக்கழிச்சல் முதலியன போகும்.

அத்திக்காயை பிஞ்சைப்போல் சமைத்துண்ண வெள்ளை சாய்தல், வாத நோய், உடல் வெப்பு, வயிற்றுப்புண் இவைகள் தீரும். மலம் இலகுவாகக் கழியும்.

அத்திப்பழத்தை மணப்பாகு செய்து அல்லது உல ர்த்திச் சூரணம் செய்து உட்கொள்ள மலக்கட்டு, சிறு நீரிலுள்ள சீனிச் சத்து, நாவறட்சி, உடல் வெதும்பல் நீங்கும்.

அத்திமர வேரிலிருந்து இறக்கும் கள்ளில் சீனியேனும் வாழைக்கனியே னும் கூட்டி நாள்தோறும் விடியற் காலையில் உட்கொள்ள என்பைப் பற்றிய மேகம், உட்சூடு, பித்த மயக்கம், நீர்வேட்கை முதலியவைகள் நீங்கும்.

100 கிராம் அத்திப் பழத்திலுள்ள சத்துக்கள்

புரதம்- 1.3 கிராம்

கொழும்பு- 0.2 கிராம்


நார்ப்பொருள்- 2.2 கிராம்

கல்சியம்- 80 மி.கி.

பொஸ்பரஸ்- 30 மி.கி.

காபோவைதரேற்று- 7.6 கிராம்.

பழங்களை உலர்த்தியோ ஜாம் தயாரித்தோ சேமித்து வைத்து சாப்பிட்டுப் பயன்பெறலாம்.



அத்திப்பழத்தைக் கழுவி ஒரு நாளைக்கு இரண்டு பழம் என்ற அளவில் சாப்பிட்டு வந்தால் நரம்புத் தளர்ச்சி குணமாகும்.

அத்திக்காயைத் துவரம் பருப்புடன் சேர்த்துக் காய்ச்சி சாப்பிட்டு வந்தால் உடல் அரிப்பு குணமாகும்.

அத்தி மரத்திலிருந்து பால் எடுத்து வீங்கிய மூட்டுப் பகுதிகளில் தேய்த்துக் கொண்டால் வீக்கம் குறையும்.

50 கிராம் அத்திப் பிஞ்சை 200 மில்லி இளநீரில் அவித்து எடுத்து காலை உணவுக்கு முன் உட்கொள்ள வயிற்றுப்புண் ஆறும்.

மூன்று நாட்கள் மரத்திலிருந்த அத்திப் பிஞ்சை எடு த்து இளநீரில் அவித்து நிழலில் உலர்த்தி இடித்துக்கொள்ள வேண்டும். இதை ஒரு தேக்கரண்டி அளவு தேனில் குழை த்து காலை உணவி ற்கு முன் ஒரு முறை யும் மாலை ஆறு மணியளவில் ஒரு முறையும் உட்கொண்டு வரவும். இவ் வாறு 40 நாட்கள் வரை உட்கொள்ளலாம். இதனால் மூல நோய் நன்கு குணமடையும்.

அத்திப்பழ பார்லிக் கஞ்சி

பார்லி அரிசி- 100 கிராம்

அத்திப்பழம்- 50 கிராம்

உலர்ந்த பேரீச்சம்பழம்- 25 கிராம்

அதிமதுரம் -25 கிராம்

சுக்குப்பொடி- 8 கிராம்

ஏலக்காய்- 5

பார்லி- 10 மில்லி

பனங்கற்கண்டு- 100 கிராம்

பார்லி அரிசியை இலேசாக வறுத்து பொடி செய்து 1/4 லீற்றர் நீர் விட்டு வேக வைக்கவும். வேகும் போது பேரீச்சம்பழம், அத்திப்பழம், அதிமதுரம், சுக்குப்பொடி, நசுக்கிய ஏலக்காய் ஆகியவற்றைச் சேர்த்து ஒன்றாகக் காய்ச்சி இறக்கி ஆற வைக்க வேண்டும். ஆறியவுடன் வடி கட்டி அவற்றுடன் பனங்கற்கண்டும் பாலும் சேர்த்து பருக உடலின் வெப்பம் காரணமாக வருகின்ற குடற்புண், வாய் ப்புண், வாய்நாற்றம், தொண்டைப்புண், வயிற்று வலி என்பன நீங்கும்.

## சட்டவிரோத துப்பாக்கிகளை கைப்பற்றுமாறு பொலிஸ்மா அதிபர் பூஜித பணிப்புரை

### மூன்று மாதங்களுக்கு விசேட நடவடிக்கை



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் சட்ட விரோத துப்பாக்கிகளை கைப்பற்றுவதற்காக விசேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனை பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர அறிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய புதுவருடமான நேற்று செவ்வாய்க் கிழமை முதல் மூன்று மாதங்களுக்கு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## 27 கைதிகள் கொலை

## எமில் ரஞ்சன் மீள விளக்கமறியலில்

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட, சிறைச்சாலைகள் முன்னாள் ஆணையாளர் எமில் ரஞ்சன் மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேதிக நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில், நேற்று பிரசன்னப்படுத்தப்பட்ட போது, அவரை எதிர்வரும் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தர விட்டுள்ளார். இச் சம்பவத்தின் போது பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி தொடர்பில், அரச இரசாயன பரிசோதனை அறிக்கை இது வரையில் தமக்கு கிடைக்கவில்லை என குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகள் இதன்போது, நீதவான் முன்னிலையில் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)





யாழ்.கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தினால் கடந்த 25 ஆம் திகதி நடத்தப்பட்ட கிறிஸ்மஸ் விழாவின் போது நூறு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் இரு மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டிற்காக தலா 12 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டன.





கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளி கலைவிழாவும் பரிசளிப்பும் கடந்த 30 ஆம் திகதி கைதடி விக்னேஸ்வர மகா வித்தியாலய மண்டபத்தில் நிலையத் தலைவர் செ.மயூரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டார். (படங்கள்:-விஜயவாசன்)



யாழ்ப்பாணம் - புனித மரியன்னை பேராலயத்தில் புத்தாண்டு தின விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.
(படங்கள்:- ஐ.சிவசாந்தன்)

## மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்



மீன்பிடித் தொழிலை மேம்படுத்தும் முகமாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் நிதி ஒதுக்கீட்டில் கடந்த 28 ஆம் திகதி பிரத்தியேக செயலாளர் சதாசிவம் இராமநாதனால் வட்டுக்கோட்டை பொன்னாலைப் பிரதேசத்தைச் சேர்ந்த மூவருக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன. (இ-5)



யாழ்.குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் புத்தாண்டு தின நள்ளிரவு விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

## கட்சிக் கொடிகள் தீக்கிரை!



(அக்கரப்பத்தனை)

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் பெரியசாமி சந்திரசேகரனின் 9 ஆவது ஆண்டு சிரார்த்த தின நிகழ்வுகள் நேற்று அக்கரபத்தனை A மன்ராசி நகரிலுள்ள நிஷாந்தினி மண்டபத்தில் நடத்து வதற்கான ஏற்பாடுகள் முன்னெடு க்கப்பட்டன.

அதற்கமைய மன்றாசி நகரம் முழுவதும் கட்சியின் கொடிகளைக் கொண்டு நேற்றிரவு அலங்கரிக்கப்பட்டிருந்தன. இந் நிலையில் இனந்தெரியாதோரால் மன்றாசி நகரில் அலங்கரிக்கப்பட்டிருந்த கட்சியின் கொடிகளைப் பிடுங்கி தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. (இ-7)

# கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு 'ISO 14001" தரச் சான்றிதழ் வழங்கல்



கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் நாடளாவிய ரீதியில் 14 கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு ISO 14001 தரச்சான்றிதழை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதில் விசேடமாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று கைத்தொழில் முயற்சியாளர்களான அன்னை கடல் உணவு வாணிபம், அண்ணா தொழிலகம் மற்றும் சாரா (மின்பொறியியல்) கைத்தொழில் ஆகிய நிறுவனங்கள் தமக்குரிய சான்றிதழை கடந்த 27 ஆம் திகதி கொழும்பு 01 இலுள்ள "மிலோடா" நிதிகற்கைகள் அக்கடமியிலுள்ள அந்தோனி டீ அஞ்சலோ கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பெற்றுக் கொண்டனர். அத்தோடு சான்றிதழ் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிறுவன ரீதியான மாற்றம் பயிற்சி வழங்கல் மற்றும் தரச் சான்றிதழிற்குரிய விண்ணப்பணம்என்பவற்றுக்கு ஏற்பட்ட செலவில் 50 வீதத்தினை மானியமாக வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இதற்கான காசோலையானது அன்றையதினம் வழங்கப்பட்டது.

கைத்தொழில் செயல்திறன் மேம்பாட்டிற்கு மேலதிகமாக நிறுவனங்கள் ISO 14001 தர நிலைகளை பின்பற்றுவதன் மூலம் சட்டபூர்வ மற்றும் ஒழுங்கு முறை தேவைகளுடன் சிறந்த இணக்கப்பாடு உள்ளிட்ட பல பொருளாதார நலன்களை பெற்றுக் கொடுக்கின்றது. சுற்றுச்சூழலுக்கும் கைத்தொழிலுக்கும் இடையே சிறந்த ஒருங்கிணைவை ஏற்படுத்துவதற்காக ISO 14001 முதன்மையாக உருவாக்கப்பட்டது.

இது அவர்களின் சுற்றுச்சூழல் தாக்கங்களை குறைப்பதோடு உற்பத்தியின் தரம் உயர்த்தப்பட்டு வீண் செலவீனங்களை குறைக்கின்றது. அத்துடன் உற்பத்திப் பொருளுக்கான கேள்வியினை அதிகரித்து சந்தை வாய்ப்பினை விஸ்தரித்து ஏற்றுமதிக்கான அடித்தளத்தினையும் அமைக்க முடிகின்றது என யாழ். மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபை உதவிப் பணிப்பாளர் கா.சசிகரன் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## பாரவூர்தி விபத்து

(ஹற்றன்)

மொனராகலைப் பகுதியிலிருந்து போபத்தலாவ பகுதிக்குச் சோளம் ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று விபத் துக்குள்ளானது.

நுவரெலியா- ஹற்றன் பிரதான வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை குறித்த பாரவூர்தி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. பாரவூர்தியில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறே விபத்துக் குக் காரணம் என நானு ஓயா போக்குவரத்துப் பொலி ஸார் தெரிவித்தனர்.

விபத்திற்குள்ளான பாரவூர்தியில் சாரதியும், உதவியாளரும் பயணித்துள்ளதாகவும், அவர்கள் காயமெதுவுமின்றி உயிர் தப்பியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்துச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சாவகச்சேரி இளைஞர் சபைக்கு விருது



இலங்கை -ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான இளைஞர் வலையமைப்பின் 2018 ஆம் ஆண்டிற்கான தன்னார்வலர் தின விருது வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் விருது வழங்கும் நிகழ்வில் சிறந்த சபையாக சாவகச்சேரி இளைஞர் சபை தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது.

அத்துடன் சாவகச்சேரி இளைஞர் சபையின் தலைவருக்கு சபையின் செயற்பாடுகளுக்கான அமெரிக்க மற்றும் தென்கொரிய பல்கலைக்கழக விருது, வீர சாரசூரி விருது, சிறந்த நிலைபேறான இளைஞர் சபைத் தலைவர் விருது ஆகிய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

நிகழ்வில் இலங்கையிலுள்ள அபிவிருத்தி இலக்குகளுக்கான இளைஞர் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (இ-29-30)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 90 | 140 | 150 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 380 | 300 | 400 |
| தக்காளி | 150 | 160 | 140 | 110 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 100 | 80 | 100 | 80 | 100 |
| கரட் | 120 | 150 | 140 | 120 | 160 |
| பூசணி | 30 | 50 | 30 | 40 | 60 |
| புடோல் | 120 | 120 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 120 | 70 | 70 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 160 | 120 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 90 | 90 |
| பாகற்காய் | 250 | 300 | 200 | 220 | 250 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 180 | 250 | 160 | 120 | 160 |
| லீக்ஸ் | 150 | 180 | 160 | 160 | 200 |
| பீற்றூட் | 160 | 80 | 160 | 200 | 160 |
| கறிமிளகாய் | 250 | 300 | 220 | 220 | 300 |
| முருங்கைக்காய் | — | — | 500 | — | 500 |
| போஞ்சி | 150 | 180 | 120 | 110 | 140 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | — | 130 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 30 | 50 | 40 | 60 |
| தேசிக்காய் | 250 | 300 | 200 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 40 | 30-50 |
| இராசவள்ளி | 180 | 120 | 140 | 180 | 160 |
| வெங்காயப்பூ | 200 | 350 | .300 | — | — |
| முள்ளங்கி | 50 | 70 | 100 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 45 | 20 | 15 | 30 |
| ஈரப்பலா | 60 | 70 | 50 | 110 | 60 |

## அனுமதி பெறாத கட்டடங்களுக்கு உடன் அனுமதி பெறக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)


வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபையின் அனுமதியின்றிக் கட்டப்பட்ட அரச, தனியார் கட்டடங்களுக்கெதிராக நீதிமன்ற நடவடிக்கையெடுக்க தீர்மானித்துள்ளதாக தவிசாளர் தெரிவித்தார்.

தமது ஆளுகைக்குட்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், சரவணை, வேலணை, புங்குடுதீவு மற்றும் நயினாதீவு ஆகிய பிரதேசங்களில் பிரதேச சபையின் அனுமதியின்றிக் கட்டப்பட்ட கட்டடங்கள் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி அனுமதிகளைப் பெறுமாறும் அனுமதி பெறாமல் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவோர் உடன் பணிகளை நிறுத்தி உரிய அனுமதியைப் பெறுமாறும் கேட்டுக் கொண்டார்.

தமது அறிவுறுத்தல்களைப் பின்பற்றாத அரச, தனியார் துறையினர் மற்றும் தனி நபர்களுக்கெதிராக விரைவில் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார். (இ-5-10)

# சிறுவர் அரங்கம்

# பொற்காசு



முன்னொரு காலத்தில் பாரசீக நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு மீன் என்றால் உயிர். ஒருநாள் மீனவன் ஒருவன் மிகவும் அழகான பெரிய மீன் ஒன்றை அரசவைக்குக் கொண்டு வந்து அரசனிடம் தந்தான். அந்த மீனைக் கண்டு மகிழ்ந்த அரசன் மீனவனுக்கு உடனே நூறு பொற்காசுகள் பரிசளிக்குமாறு கட்டளை இட்டான். பக்கத்திலே அமர்ந்திருந்த அரசிக்கு இந்தச் செயல் பிடிக்கவில்லை.

அரசனைப் பார்த்து, “நாளைக்கே நம் வீரர்கள் யாரேனும் செயற்கரிய வீரச் செயல் செய்து வந்தால், நீங்கள் வழக்கம் போல நூறு பொற்காசுகள் பரிசளிப்பீர்கள். ஆனால், பரிசு பெறுபவன், ஒரு மீனவனுக்குக் கொடுத்ததைத்தானே, அரசர் நமக்கும் தந்துள்ளார் என்று நினைப்பான். அதனால், அந்த மீனவனுக்குக் கொடுத்த பரிசை ஏதேனும் சொல்லித் திரும்ப வாங்கிக் கொள்ளுங்கள்!” என்றாள்.

“நீ சொல்வது சரிதான். ஆனால், கொடுத்த பரிசை மற்றவர் குறை சொல்லாதபடி எப்படித் திரும்ப வாங்குவது?” என்று கேட்டான் அரசன்.

“அந்த மீன் ஆணா? பெண்ணா? என்று கேளுங்கள். அவன் ஆண் என்று சொன்னால் பெண் மீன் வேண்டும் என்று மீனைத் திருப்பித் தந்து விடுங்கள். பெண் என்று சொன்னால் ஆண் மீன் வேண்டும் என்று சொல்லுங்கள்!” என்றாள் அவள்.

அரசனுக்கு தன் மனைவியின் அறிவுரை மிக நல்லதாகப்பட்டது.

மீனவனைப் பார்த்து, “நீ கொண்டு வந்த மீன் ஆண் மீனா, பெண் மீனா?” என்று கேட்டான்.

அதற்கு அந்த மீனவன் பணிவாக, “அரசே! இது ஆணுமல்ல, பெண்ணும் அல்ல, பொதுவான மீன்!” என்றான்.

மீனவனிடமிருந்து தான் சற்றும் எதிர்பாராத பதில் வந்ததைக் கண்டு அரசன் பெரிதும் மகிழ்ந்தான். அந்த மகிழ்ச்சியில் அவனுக்கு மேலும் நூறு பொற்காசுகள் தரும்படி கட்டளை இட்டான்.

“ஐயோ! நூறு பொற்காசுகள் கொடுத்ததே அதிகம். அதைத் திரும்ப வாங்குங்கள் என்றால், மேலும் நூறு பொற்காசுகள் தந்துவிட்டீர்களே!” என்று கோபத்துடன் சொன்னாள் அரசி.

“நான் மகிழ்ச்சி அடையும் போதெல்லாம் நூறு பொற்காசுகள் பரிசு தருவது வழக்கம். இப்போது அவன் சொன்ன பதிலால் மகிழ்ச்சியடைந்து அவனுக்குப் பரிசு தந்தேன். என்ன செய் வது?” என்றான் அரசன்.

இரண்டு பொற்காசுப்பைகளையும் பெற்றுக் கொண்ட மீனவன், அரசனை வணங்கி விடைபெற்றான்.

பையில் ஓட்டை இருந்ததால் திரும்பிச்செல்லும் போது ஒரு பொற்காசு கீழே விழுந்தது. இதைப் பார்த்த மீனவன் அந்தக் காசு எங்கே உள்ளது என்று தேடிக் கண்டுபிடித்துப் பையில் போட்டுக் கொண்டான்.

இதை அரசனும், அரசியும் பார்த்துக் கொண்டு இருந்தனர்.

உடனே அரசி, “நீங்கள் அவனுக்கு இருநூறு பொற்காசுகள் பரிசு தந்தீர்கள். ஓர் பொற்காசு கீழே விழுந்தால் என்ன? நம் வீரர்கள் யாரேனும் எடுத்துக் கொள்ள மாட்டார்களா? எவ்வளவு பேராசை அவனுக்கு.

இதையே காரணமாகக் காட்டி அவனுக்குக் கொடுத்த பரிசைத் திரும்ப வாங்கிக் கொள்ளுங்கள்!” என்றாள். அரசனுக்கும் தன் மனைவி சொன்னது சரி என்றேபட்டது.

மீனவனை அழைத்து, “கீழே விழுந்த ஒரே ஒரு காசை ஏன் அவ்வளவு கடினப்பட்டுத் தேடினாய்? இருநூறு பொற்காசுகள் கிடைத்தும் உனக்கு நிறைவில்லையா?” என்று கோபத்துடன் கேட்டான்.

மீண்டும் அரசனைப் பணிவுடன் வணங்கிய மீனவன், “அரசே! அந்தப் பொற்காசு கிடைக்கவேண்டும் என்ற பேராசையால் நான் தேடவில்லை. இக்காசின் ஒரு பக்கத்தில் உங்கள் உருவமும் மற்றொரு பக்கத்தில் நம் அரசின் இலச்சினையும் பொறிக்கப்பட்டு உள்ளது.


யார் காலிலேனும் இக்காசுபட்டுவிட்டால் பெருமை மிகுந்த தங்களை அவமதித்ததாக ஆகுமே என்பதற்காகத் தான் தேடினேன்!” என்று பதில் தந்தான். சாமர்த்தியமான இந்த பதிலைக் கேட்டு மகிழ்ந்த அரசன் அவனுக்கு மேலும் நூறு பொற்காசுகள் பரிசளிக்கக் கட்டளை இட்டான்.

இதைக் கண்ட அரசி, இதற்குமேல் ஏதாவது யோசனை கூறினால், மேலும் பல பொற்காசுகளை இழக்க வேண்டியிருக்கும் என்று எண்ணி வாயை மூடிக்கொண்டாள்.

## பொது அறிவு

- உலகிலேயே உயரமான சிகரம் எவரெஸ்ட், இதன் உயரம் 8848 மீற்றர்கள்.
- திரை அரங்குகளே இல்லாத நாடு பூட்டான்.
- உலகிலேயே மிகப் பெரிய நூலகம் மொஸ்கோவில் உள்ள லெனின் நூலகம்.
- உலகிலேயே துனியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு ஸ்பெயின்.
- அஞ்சல் தலையில் தனது நாட்டின் பெயரைக் கொண்டிராத நாடு ஐக்கிய இராச்சியம்.
- உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம் முதலை. இவை 300 ஆண்டுகள் வரை வாழுகின்றன.
- இரண்டு பிரதமர்களைக் கொண்ட நாடு சான் மரீனோ.

## விலங்குகளைப் பற்றிய சில அரிய தகவல்கள்



விலங்குகளை பற்றி சில சுவாரஸ்யமான, நம்ப இயலாத தகவல்களை இப்போது காண்போம்.

- எறும்புகள் தூங்குவதே இல்லை.
- மரங்கொத்தி பறவையால் மரத்தை ஒரு நொடியில் 20 முறை தொடர்ந்து கொத்த முடியும்.
- கரப்பான் பூச்சியால் ஒன்பது நாட்கள் வரை தலை துண்டிக்கப்பட்ட நிலையில் வாழ இயலும்.
- பச்சோந்தியின் நாக்கு அதன் உடலைவிட இருமடங்கு நீளமாக இருக்கும்.
- ஒரு நத்தையால் மூன்று ஆண்டுகள் வரை தூங்க முடியும்.
- பட்டாம்பூச்சிகள் அதன் கால்களை கொண்டுதான் உணவை ருசிக்கின்றன.
- உலகளவில் பெரும்பான்மையாக விலங்குகளால் ஏற்படும் மரணங்களை ஏற்படுத்துவது கொசு.
- பூச்சிகளின் இரத்தம் மஞ்சள் நிறத்தில் இருக்கும்.
- பனிக்கரடிகள் அனைத்தும் இடது கை வழக்கமுடையவை.

ஒரு ஆட்டுக்கூட்டத்துக்கு சிங்கம் தலைமை வகிக்கலாம். ஆனால் சிங்கக்கூட்டத்துக்கு ஆடு தலைமை வகிக்கக்கூடாது. – டானியல் டீஃபோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் கட்சிகள் தாம் நினைத்தபடி செயற்பட முடியாது

தமிழ் அரசியல் கட்சிகள் தமக்கிடையே ஒற்றுமைப்பட வேண்டும் என்ற கருத்து பரவலாக உள்ளது.

எனினும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் இருக்கக்கூடிய கொள்கை வேறுபாடுகளும் கடந்த காலச் செயற்பாடுகளும் ஒட்டுமொத்த தமிழ் அரசியல் கட்சிகளையும் ஓரணியில் ஒற்றுமைப்படுத்துவதற்குத் தடையாக இருப்பதையும் ஏற்றுத்தானாக வேண்டும்.

எனினும் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு தமிழ் மக்கள் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

இருந்தும் சில அரசியல் கட்சிகள் தமிழ் மக்கள் பற்றியோ அல்லது தமிழ் மக்களின் மனநிலை பற்றியோ எந்தக் கவனமும் செலுத்தாமல் தாங்கள் நினைப்பதுதான் சரியானது என்ற முடிவுக்கு வருகின்றனர்.

தவிர, இக்கட்டான அரசியல் சூழ்நிலைகளில்கூட தமிழ் மக்களின் கருத்துக்களை உள்வாங்குகின்ற ஏற்பாடுகளோ அன்றி இதர அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளை அறிகின்ற பொறிமுறைகளோ இல்லாமல், தனியுரிமைப் பாங்கில் முடிவுகளை எடுக்கின்ற மிக மோசமான செயற்பாடுகள் நடந்தாகின்றன.

தமிழ் மக்களுக்கான அரசியல் என்று கூறி; மக்களின் வாக்குகளைப் பெற்றுவிட்டு, தம்பாட்டில் தீர்மானங்களை எடுக்கும்போது அதனால் ஏற்படுகின்ற பாதிப்பு என்பது சம்பந்தப்பட்ட தமிழ் அரசியல் கட்சிக்கன்றி தமிழ் மக்களுக்கானதாகவே இருக்கும்.

எனவே தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை ஏற்படுவதென்பது, தேர்தல் சூழ்நிலையில் அல்லது கொள்கை அடிப்படையில் சாத்தியமாகாவிட்டாலும்,

தமிழ் மக்களின் நலன் என்ற அடிப்படையில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் பொதுக் கொள்கைக்கு உடன்பட்டு வருவது கட்டாயமானதாகும்.

சுருங்கக்கூறின் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ன என்ற கேள்வி எழும்போது, தமிழ் மக்கள் பேரவையால் தயாரிக்கப்பட்டு தமிழ் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட தீர்வுத் திட்ட வரைபே தீர்வாகும் என்பதை அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

அப்போதுதான் ஒரு விடயத்தை அனைத்துத் தரப்பினரும் வலியுறுத்த முடியும்.

ஒரு விடயத்தை சகல தரப்பினரும் வலியுறுத்தும்போது அதற்கான அங்கீகாரம் என்பது வலுப்பெறும்.

ஆனால் இத்தகையதொரு பொது உடன்பாட்டின் கீழ் ஒன்றுபடுவதற்குக்கூட தமிழ் அரசியல் கட்சிகள் தயாராக இல்லை.

இந்தநிலைமையானது தமிழ் அரசியல் கட்சிகள் சொந்த நலனை மையப்படுத்திச் செயற்படுகின்றனவே தவிர, தமிழ் மக்களின் நலனை அவர்கள் மையப்படுத்தவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

எனவே அனைத்து அரசியல் கட்சிகளும் தமிழ் மக்களின் விடயத்தில் ஒரு பொது உடன்பாட்டுக்கு வந்தாக வேண்டும்.

## அர்ஜுன் அலோசியஸ், பலிசேன 11 மாதங்களின் பின்னர் நேற்று பிணையில் விடுவிப்பு

பேர்ச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளரான அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அந்த நிறுவனத்தின் தலைமை நிறைவேற்றுப் பணிப்பாளர் கசுன் பலிசேன ஆகியோருக்கு 11 மாதங்களின் பின்னர் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றால் நேற்று பிணை வழங்கப்பட்டது.

மத்திய வங்கி பிணை முறி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அர்ஜுன் அலோசியஸும் கசுன் பலிசேனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கடந்த பெப்ரவரி 4ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

மத்திய வங்கி பிணை முறி மோசடியில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், அர்ஜுன் அலோசியஸ், கசுன் பலிசேன ஆகியோரைச் சந்தேகநபர்களாக நீதிமன்றம் அறிவித்த நிலையில், அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் வெளிநாட்டுக்குத் தப்பித்து தலைமறைவாகியுள்ளார்.

அர்ஜுன் அலோசியஸ், கசுன் பலிசேன இருவரும் கடந்த 11 மாதங்களாக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்று மாலை கடும் நிபந்தனைகளுடன் அர்ஜுன் அலோசியஸ், கசுன் பலிசேன இருவரையும் பிணையில் செல்ல நீதிவான் அனுமதியளித்தார். (ம-3)

## தவறுகளை திருத்தி சேவையாற்றுவோம் – ரவி

2018ஆம் ஆண்டின் தவறுகளை திருத்தி புத்தாண்டில் சேவையாற்றவுள்ளதாக மின்சக்தி மற்றும எரிசக்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில்நேற்று நடைபெற்ற புத்தாண்டு நிகழ்வுகளில்கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கடந்த ஆண்டின் தவறுகளை திருத்தி அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றவுள்ளதாக தெரிவித்த அமைச்சர், அதற்கு அனைவரதும் ஒத்துழைப்பை கோரியுள்ளார். (ம-3)

## ஜம்பட்டா வீதியில் துப்பாக்கிச் சூடு

(கொழும்பு)

இனந்தெரியாதோரால் கொழும்பு 13 - ஜம்பட்டா வீதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குறித்த துப்பாக்கிச்சூட்டில் 36 வயதுடைய நபரே காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குறித்த வீதியில் தம்பதிகள் இருவர் மீது துப்பாக்கிச்சூடு மேற் கொள்ளப்பட்டது.

இதில் உயிரிழந்தவர்களின் உறவினர் மீதே குறித்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது. (இ-7)

## உற்பத்தித்திறன் விருதுப் போட்டியில் பரு.பிரதேச செயலகம் இரண்டாமிடம்

(யாழ்ப்பாணம்)

தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் திணைக்களங்களுக்கிடையில் நடத்தப்படும் உற்பத்தித்திறன் விருது வழங்கும் போட்டித் தொடரில் 2017/ 2018 இல் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலகம் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொணடுள்ளது.

இதேவேளைகடந்ததடவை தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடத்தப்பட்ட உற்பத்தித்திறன் விருது வழங்கும் போட்டித் தொடரில் வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை பிரதேச செயலகம் மெச்சுரை (5ஆம் இடம்) பெற்றுக்கொண்டது.

தற்போது மேம்பட்ட நிலையில் உற்பத்தித்திறன் செயற்பாடுகளை இப்பிரதேச செயலகம் முன்னெடுப்பதுடன் மக்களுக்கு இலகுவான, விரைவான சேவைகளை ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவ்வாண்டில் மென்மேலும் சேவைகளை மேம்படுத்த எண்ணியுள்ளதாக பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்தார். (இ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில பறயனாலங்குளம், பெரிய குஞ்சுக்குளம், பொய்முறிப்பு திக்கம், மடுச்சந்தி, கட்டையடம்பன், மளவராயர்கட்டையடம்பன், தம்பனைக்குளம், பண்ணை வெட்டுவான், இசைமலைத் தாழ்வு, கற்கடந்தகுளம், நீராவிபுரம், செட்டியார் கட்டையடம்பன், முருங்கன் விதைகள் உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## கசிப்பு வைத்திருந்த இரண்டு பெண்கள் கைது

(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது கசிப்பு, கோடா வைத்திருந்த இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடநத ஞாயிற்றுக்கிழமை மாலை துன்னாலை கிழக்கு பகுதியில் இரண்டு வீடுகளில் பொலிஸார் தேடுதல் மேற் கொண்டனர்.

இதல் ஒரு வீட்டில் இருந்து ஐந்து லீற்றர் கசிப்பு, 25 லீற்றர் கோடா என்பன மீட்கப்பட்டன.

மற்றைய வீட்டில் இருந்து இரண்டரை லீற்றர் கசிப்பு, பதினைந்து லீற்றர் கோடா என்பன மீட்கப்பட்டன.

இவற்றை மீட்ட பொலிஸார் இரண்டு வீடுகளிலும் இருந்த இரண்டு பெண்களை கைது செய்தனர். (இ-60)

## மொழியின் அடிப்படையில் எம்.பிக்களை பிரிக்காதீர்கள்

### விஜயமுனி சொய்சா வலியுறுத்து

(கண்டி)

நாடாளுமன்றில் அங்கம் வகிப்பவர்களை தமிழ், முஸ்லம், சிங்களவர்கள் என்று பாராமல், அனைவரையும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக பார்க்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்கு நேற்று செவ்வாய்க்கிழமை சென்ற அவரிடம் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இடையிலான ஒப்பந்தம் குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே, அவர் இதனைத தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "ஐக்கிய தேசியக் கட்சி, கூட்டமைப்புடன் உடன்படிக்கைக்கு சென்றதா? இல்லையா? என்பது குறித்து எமக்கு பிரச்சினை இல்லை. அதனைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம்.

நாடாளுமன்றிலுள்ள 225 உறுப்பினர்களையும் தமிழ், முஸ்லிம், சிங்களவர்கள் எனப் பிரித்துப் பார்க்கக்கூடாது. அவர்கள் அனைவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களே.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து உறுதியான அரசாங்கத்தை அமைக்க வேண்டியது எமது பொறுப்பாகும். நாம் நாடாளுமன்றத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாத்து நாட்டின் நிர்வாகத்தை பலப்படுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் பிரதமர் இல்லாமல், அரசாங்கம் இல்லாமல் நாடு திண்டாடியது. குடிசையில் உள்ள ஏழை முதல், மாளிகையில் வாழும் செல்வந்தர்கள் வரையிலும் பாதிக்கப்பட்டனர். அச்சத்தில் காணப்பட்டனர். அவர்களின் அச்சத்தைப் போக்குவதே எமது பொறுப்பாகும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### மனைவியிடம் கோபிக்காதீர்கள்

✦ நாம் செய்த நல்வினை, தீவினை ஒன்றுக்கு ஆயிரமாகப் பெருகி வரும். வயலில் இட்ட விதை ஒன்று பலவாக வருவதுபோல் வினைகளும் பன்மடங்கு வளர்ந்து வரும்.

✦ பகை தொலைவில் இருக்கலாம். அடுத்த வீட்டில், எதிர்வீட்டில் இருக்கக்கூடாது. இருந்தால் அது நமக்கு அஷ்டமத்துச் சனி. மிக்க ஆபத்தைத் தரும்.

✦ மனிதன் வாழ்கின்ற வாழ்க்கை பிறருக்கும், நாட்டுக்கும் பயனுள்ளதாக இருக்க வேண்டும்.

✦ மனைவியைக் கோபிக்கும் ஆண்கள் இருக்கக்கூடாது. மனைவி கண்ணீர் சிந்தினால் அந்தக் குடும்பம் தழைக்காது.

✦ ஒரு மனிதனோடு பழகும்போது அளந்து பழக வேண்டும். பால் வாங்கும் போதும், துணி எடுக்கும் போதும் அளந்து தானே வாங்குகிறோம். அதுபோல் யாரிடம் பழகினாலும் அளந்து பழகாவிட்டால் துயரம் வந்து சேரும்.

✦ நமது உடம்பின் அளவு கண். கண்ணை மட்டும் பார்த்தாலே அவன் எப்படி உள்ளவன் என்று கணக்கிட்டு விடலாம்.

✦ இருள இருவகைப்படும். ஒன்று புற இருள், மற்றொன்று அக இருள். இதற்கு ஆணவம் என்று பேர். புறஇருள் தன்னைக் காட்டும், ஏனைய பொருள்களை மறைக்கும். ஆணவ இருள் தன்னையும் மறைத்து, மற்ற எல்லாவற்றையும் மறைத்து நின்று பெருந்துயரத்தைச் செய்யும்.

✦ தங்கம் இளகினால் அதில் ரத்தினக்கல் பதியும். அதுபோல் நம் உள்ளம் உருகினால் உருகிய உள்ளத்தில் இறைவன் ஒன்றி விடுவான்.

✦ எதனையும் பலமுறை சிந்தித்துச் செய்ய வேண்டும். ஒருவர் போன வழியிலேயே, சிந்திக்காமலேயே பின்பற்றிச் செல்வது மூடத்தனம்.

✦ எங்கும் நிறைந்த இறைவனை எங்கும் எளிதாகக் கிடைக்கக்கூடிய பூவினாலும், நீரினாலும் நாம் வழிபட வேண்டும். வழிபாட்டிற்கு அன்பும், ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை.

# உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்க கால்பந்தாட்டம் ஞானமுருகன், ஆனைக்கோட்டை யூனியன் அணிகள் வெற்றி

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில், அழைக்கப்பட்ட 12 கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியானது உரும்பிராய் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 12 அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகள், அடுத்த சுற்றுக்குத் தெரிவு செய்யப்படும். அந்தவகையில் 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டு, காலிறுதியாட்டங்கள், அரையிறுதியாட்டங்கள் என நொக்கவுட் முறையில் நடைபெற்று இறுதிப் போட்டிக்கு அணிகள் தெரிவு செய்யப்படும்.

கடந்த 29 ஆம் திகதி நடைபெற்ற லீக் சுற்றின் போட்டியொன்றில், மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் அணி மோதியது.

இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி, 04:00 என்ற கோல்கள் கணக்கில் இலகுவான வெற்றியைப் பதிவு செய்தது. ஞானமுருகன் அணி சார்பாக பவித்திரன் இரண்டு கோல்களையும், சயந்தன் மற்றும் வகின்சன் ஆகியோர் தலா ஒரு கோலையும் பெற்றுக்கொடுத்தனர்.

மற்றுமொரு போட்டியில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதியது. போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் தலா 3 கோல்களைப் பெற்றிருந்தன. வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. அதில், ஆனைக்கோட்டை யூனியன் அணி 04:03 என்ற கோல்கள் கணக்கில் வென்றது. (க-26)

# என் வாழ்வின் முக்கியமான நபரை இழந்து விட்டேன்

## ஆப்கான் வீரர் உருக்கம்



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான ரஷித் கானின் தந்தை நேற்று முன்தினம் காலமானதைத்தொடர்ந்து, தான் மிகுந்த வேதனையில் இருப்ப தாக ரஷித் கான் டுவிட்டரில் பதிவிட்டுள் ளார்.

ஆப்கானிஸ்தானில் இளம் நட்சத்திர வீரராக திகழ்ந்து வரும் ரஷித் கான் ஐ.பி.எல், பிக்பாஷ், பாகிஸ்தான் லீக் போன்ற தொடர்களிலும் தனது பந்து வீச்சின் மூலம் முத்திரை பதித்துள்ளார்.

இந்நிலையில், ரஷித் கான் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் பிக்பாஷ் லீக் தொடரில் விளையாடி வருகிறார். இவரது தந்தை காலமானதைத் தொடர்ந்து, ரஷித் கான் உடனடியாக தனது தாய் நாட்டிற்கு சென்றுள் ளார்.

தந்தையின் மறைவை எண்ணி மனமுடைந்த ரஷித் கான், டுவிட்டர் பக்கத்தில் தனது சோகத்தை பதிவிட்டுள்ளார். அதில் அவர் கூறுகையில், 'இன்று, நான் என் வாழ்க்கையில் முக்கியமான ஒரு மனிதரை இழந்துவிட்டேன். என் வாழ்க்கைக்கு ஒளியேற்றிய என் தந்தை இனி இல்லை.

நான் மனவலிமையாக இருக்க வேண்டும். என்று நீங்கள் (என் தந்தை) எப்போதும் என்னிடம் கேட்பது ஏன் என தெரிந்து விட்டது. இன்று உங்கள் இழப்பை நான் தாங்கிக்கொள்ள எனக்கு மனவலிமை அவசியம் தேவை. நான் உங்களை miss செய்கிறேன்' என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் தனது நண்பரின் தந்தை மறைவு துயரத்தில் ஆழ்த்தியுள்ளதாகவும், ரஷித் கானின் குடும்பத்திற்கு தன்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும், சக கிரிக்கெட் வீரரான முகமது நபி தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (க)

# ஐ.சி.சியின் இரண்டு விருதுகளை தட்டிச் சென்ற இந்திய வீராங்கனை



இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா, ஐ.சி.சி-யின் இரண்டு விருதுகளை தட்டிச் சென்றார்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் ஒவ்வொரு ஆண்டும் மகளிர் கிரிக்கெட்டில் சாதித்த வீராங்கனைகளுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது.

அதன்படி 2018ஆம் ஆண்டில் சாதனை படைத்த வீராங்கனைகளுக்கான விருது பட்டியலை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இந்தப் பட்டியலில் 2018ஆம் ஆண்டின் சிறந்த மகளிர் கிரிக்கெட் வீராங்கனை மற்றும் சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீராங்கனை ஆகிய இரண்டு விருதுகளை, இந்திய அணியின் நட்சத்திர வீராங்கனை ஸ்மிரிதி மந்தனா தட்டிச் சென்றுள்ளார்.

அதே போல் ஐ.சி.சியின் சிறந்த இருபது-20 கிரிக்கெட் வீராங்கனை விருதிற்கு அவுஸ்திரேலிய வீராங்கனை ஆஸ்லே ஹீலி தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க)

# புதிய சாதனை படைத்தார் இந்தியா அணியின் தலைவர் ஹோலி



இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் ஹோலி தொடர்ந்து 3ஆவது ஆண்டாக சர்வதேச போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்துள்ளார்.

விராட் ஹோலி கடந்த ஆண்டு இங்கிலாந்து டெஸ்ட் தொடர், தென் ஆபிரிக்கா டெஸ்ட் தொடர், அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர் ஆகியவற்றில் சதம் அடித்து அசத்தினார்.

அதன்படி பார்க்கும்போது, 2018 ஆம் ஆண்டில் இருபது-20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் ஆகிய 3 வகையான போட்டிகளிலும் சேர்த்து 2, 653 ஓட்டங்கள் சாதனை படைத்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு ஹோலியின் துடுப்பாட்ட சராசரி 69.81 ஆகும். ஏற்கனவே, கடந்த 2016 ஆம் ஆண்டில் 2,595 ஓட்டங்களும், 2017ஆம் ஆண்டில் 2,818 ஓட்டங்களும் ஹோலி எடுத்திருந்தார்.

இதன்மூலம் அவர் தொடர்ந்து 3ஆவது ஆண்டாக அதிக ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்துள்ளார்.

மேலும், வெளிநாடுகளில் அதிக வெற்றிகளைப் பெற்ற தலைவர் என்ற கங்குலியின் சாதனையை, மெல்பேர்ன் வெற்றி மூலம் சமன் செய்துள்ளார். (க)

# மகளைக்காண விரைந்தார் இந்திய வீரர் ரோகித் சர்மா



இந்திய கிரிக்கெட் வீரர் ரோஹித் ஷர்மா-ரித்திகா தம்பதிக்கு அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது. ரோஹித் ஷர்மா கடந்த 2015 ஆம் ஆண்டு ரித்திகா என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். கிரிக்கெட் போட்டி நடக்கும் இடங்களுக்கு, எப்போதும் தனது மனைவியை அழைத்து செல்வதை ரோஹித் வழக்கமாக கொண்டிருப்பார்.

ஆனால், அவரது மனைவி ரித்திகா கர்ப்பமாக இருந்ததால் ரோஹித்தால் அவுஸ்திரேலிய தொடருக்கு அவரை அழைத்துச் செல்ல முடியவில்லை.

இந்நிலையில், ரித்திகாவுக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. பின்னர் தாயும், சேயும் நலமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த தகவலை கேள்விப்பட்ட ரோஹித் ஷர்மா, மிகுந்த மகிழ்ச்சியடைந்து சக வீரர்களிடம் இதனை பகிர்ந்து கொண்டார். அதன் பின்னர் அவர் உடனடியாக தனது குழந்தையைக் காண மும்பைக்கு திரும்ப உள்ளார்.

இதன் காரணமாக, ரோஹித் வரும் 3ஆம் திகதி தொடங்கும் நான்காவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்க மாட்டார். அவருக்கு பதிலாக ஹர்திக் பாண்டியா களமிறங்குவார் என்று கூறப்படுகிறது. (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

## தெற்கிலிருந்து பயணித்த மனிதாபிமான...

தென் பிரதேச மக்கள் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட சந்தர்ப் பத்தில் வடபுல மக்களின் நேசக்கரங் களுடன் ஜனாதிபதி செயலகத்தின் "மக்கள் தொடர்பாடல்" செயற்திட் டத்தின் ஏற்பாட்டில் வடக்கிலிருந்து தெற்கிற்கு "மனிதாபிமான புகை யிரதம்" பயணித்த அதேவேளை, வடக்கு மக்கள் அனர்த்தத்திற்கு முகங்கொடுத்துள்ள இன்றைய நிலையில் தெற்கு மக்கள் தமது நேசக்கரங்களை இன்று அவர் களை நோக்கி நீட்டியுள்ளனர்..

புகையிரத சேவையை பாது காப்போம் அமைப்பினால் இம் முறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த மனித நேய செயற்திட்டத் திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பூரண ஆசிர்வாதங் களுடன் ஜனாதிபதி செயலகத்தின் "மக்கள் தொடர்பாடல்" செயற்திட்ட மும் ஜனாதிபதி ஊடகப் பிரிவும் தமது ஒத்துழைப்பினை வழங்கின.

நிவாரணப் பொருட்களைத் தாங்கிய புகையிரதம் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணி யளவில் மாத்தறை புகையிரத நிலையத்திலிருந்து தனது பய ணத்தை ஆரம்பித்ததுடன், காலி மாவட்ட செயலாளரின் வழிகாட்ட லில் மக்கள் தொடர்பாடல் செயற் திட்டத்தின் தன்னார்வ செயற்பாட் டாளர்களினால் சேகரிக்கப்பட்ட நிவா ரணப் பொருட்கள் காலி புகையிரத நிலையத்தில் வைத்து குறித்த புகை யிரதத்திற்கு கையளிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 6.30 மணியள வில் கொழும்பு கோட்டை புகை யிரத நிலையத்தை வந்தடைந்த மனிதாபிமான புகையிரதம் ராகமை, கம்பஹா, வேயங்கொடை, மீரிகம, பொல்கஹவெல, குருநாகல், கனே வத்த, மஹவை, கல்கமுவ மற்றும் அநுராதபுரம் ஆகிய புகையிரத நிலை யங்களில் சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொண்டது.

உலர் உணவுப் பொருட்கள், குடிநீர், பாடசாலை உபகரணங் கள், ஆடைகள், சுகாதார பாது காப்பு பொருட்கள், மருந்துப்பொருட் கள் உள்ளிட்ட ஏராளமான நிவா ரணப் பொருட்கள் இந்த மனித நேய புகையிரதத்தில் கொண்டு செல் லப்பட்டதுடன், அவை கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் வைத்து கிளிநொச்சி மாவட்ட செயலாளரி டம் உத்தியோகபூர்வமாக கை யளிக்கப்பட்டன.

பல தனியார் நிறுவனங்களும் வர்த்தக சமூகத்தினரும் இந்த நற்பணியுடன் கைகோர்த்துக் கொண்டனர். (ம-3,312)

## யாழ் போதனாவில் திருடிய...

குற்றச் சாட்டு வழக்கில் பிணை வழங்கிய யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம், நல்லூர் ஆலயத்தில் பெண்ணிடம் சங்கிலியை கொள்ளை யடித்த வழக்கில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சைக்கு வருவோ ரின் தங்க நகைகள் களவாடப் படுவது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்திற்கு தொடர்ச்சியாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

அது தொடர்பில் வைத்திய சாலை வளாகத்தினுள் பொருத்தப் பட்டு உள்ள கண்காணிப்பு கமராக் களின் (சிசிரிவி) உதவியுடன் நகைகளைதிருடிவந்த பெண்ணொரு வர் அடையாளம் காணப்பட்டார். அவரை வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் துணை யுடன் வைத்தியசாலை நிர்வாகம் மடக்கி பிடித்து காணொளி ஆதாரத் துடன் யாழ்ப்பாண பொலிஸாரிடம் கடந்த ஒரு சில வாரங்களுக்கு முன் னர் ஒப்படைத்தனர்.

இந்நிலையில்கடந்த சனிக்கிழமை வைத்தியசாலைக்கு வந்த வயோ திப பெண்ணொருவரிடம் இருந்து சங்கிலி ஒன்று களவாடப்பட்டு உள்ளது. அது தொடர்பில் அந்த வயோதிபப் பெண் வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறையிட்டார்.

அதனை அடுத்து கண்காணிப்பு கமராக்களை பரிசோதித்த போது , வைத்தியசாலையில் முன்னர் நகைகளை திருடிய குற்றச்சாட்டில் தம்மால் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பெண்ணே மீண்டும் திருட்டில் ஈடுபடுவதனை நிர்வாகத்தினர் கண்டறிந்தனர்.

அது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு அறிவித்தனர். அந்த காணொலியை ஆராய்ந்த யாழ்ப்பாணம் பொலிஸார் அந்தப் பெண்ணை முல்லைத்தீவில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்தனர். அத்துடன், மேலும் இரண்டு பெண்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டனர்.

அந்தப் பெண்ணிடம் முன்னெ டுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் பெண்ணொரு வரிடம் சங்கிலி அறுத்ததையும் அவர் ஒத்துக்கொண்டார். அந்தச் சங்கிலி நகை வேலை செய்பவரி டம் விற்பனை செய்ததையும் சந் தேகநபர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட நகை வேலை செய்பவரை அழைத்து விசாரணை செய்த பொலிஸார், சந்தேகநபரால் விற்பனை செய்யப்பட்ட சங்கிலி உருக் கப்பட்டு தங்கக் கட்டியாக மீட்டனர். அதனால்நகை வேலை செய்பவரும் பொலிஸாரால்கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளியி டம் தங்க நகையைத் திருடியமை மற்றும் நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் பெண் ஒருவரிடம் சங்கிலி அறுத்தமை என இரண்டு குற்றச் சாட்டுக்களுக்கு தனித் தனியே வழக்குகளைப் பதிவு செய்தனர்.

சந்தேகநபரான பெண், அவரு டன் கைது செய்யப்பட்ட மேலும் மூவர் மற்றும் நகை வேலை செய்ப வர் என 5 பேர் யாழ்ப்பாணம் நீதிவான் அன்ரனி சாமி பீற்றர் போல் முன்னிலையில் நேற்று முற்படுத்தினர். அத்துடன் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை யில் நகையைப் பறிகொடுத்த வயோ திப் பெண்ணும் நீதிமன்றில் முன்னி லையானார்.

வழக்குகளை விசாரணை செய்த நீதிவான், சந்தேகநபருடன் கைது செய்யப்பட்ட மூவரையும் நகைத் தொழிலாளியையும் பிணை யில் விடுவித்தார். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் திருடிய நகை சந்தேகநபரிடம் மீட்கப்பட்டதால் அந்த வழக்கில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

எனினும் நல்லூர் ஆலயத்திரு விழாவில் பெண் ஒருவரிடமிருந்து அபகரித்த சங்கிலி உருக்கப்பட்டுள் ளது. அதனால் அந்த வழக்கில் சந்தேகநபரான பெண்ணை வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறிய லில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் அன்ரனி சாமி பீற்றர் போல் உத்தரவிட்டார். (ம-3)

## அமைச்சரவை...

சரவைக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

கடந்த 20ஆம் திகதி புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னர் குறுகிய அமைச்சரவைக் கூட்டம் ஒன்று முன்னதாக இடம் பெற்றுள்ளது.

எனினும் அதன்போது அமைச் சர்களுக்குரிய விடயங்கள் தொடர் பில் வர்த்தமானி வெளியிடப் பட்டிருக்கவில்லை என்பதுடன், வர்த்தமானி வெளியிடப்பட்ட பின்னரான முதலாவது அமைச் சரவை கூட்டம் இன்று இடம்பெற உள்ளது. (ம-3)

## யாழ்.நீதிமன்ற...

நீதிபதி அந்தோனி சாமி பீற்றர் போல், யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவானாக நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம சங்கர் முன்னிலையில் நேற்றுக் காலை அவர் உறுதி உரை எடுத் தார்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப் பாண சட்டத்தரணிகள் நீதவான் அந்தோனி சாமி பீற்றர் போலை வரவேற்றனர்.

கடமைகளைப் பொறுப்பேற்ற அவர், வழக்கு விசாரணைகளை முன்னெடுத்தார். (ம-3)

## வாள், கத்தி...

ருந்து வாள், கத்தி என்பன மீட் கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்று முன் தினம் இரவு 10.30 மணியளவில் கோயில் குளம் பகுதியில் இருந்து வவுனியா நகர்பகுதிக்கு சென்று கொண்டிருந்த முச்சக்கர வண் டியை மறித்து சோதனை செய்த போது முச்சக்கரவண்டிக்குள்ளி ருந்து வாள், கத்திகளை கொண்டு சென்ற குற்றச்சாட்டில் ஆச்சிபுரம், எல்லப்பர்மருதங்குளத்தை சேர்ந்த 23, 23, 24 வயதுடைய மூவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக வும் அவர்களிடமிருந்து விசா ரணைகள் இடம்பெற்று வருவதாக வும் பொலிஸார் தெரிவித்தனர்

மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்றைய தினம் நீதி மன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக வும் பொலிஸார் மேலும் தெரி வித்தனர். (ம-281)

## நிதிமற்றும் ஊடகத்துறை ஒரே...

நெருக்கடிகள் காணப்படுகின்ற போதிலும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஊடகங்களை கறுப்பு ஊட கம் என விமர்சித்துக் கொண்டி ருக்கின்றார். அமைச்சர் மங்கள சமரவீரவிடம் ஊடகத்துறை காணப் படுவது ஊடகங்களுக்கு அச்சுறுத்த லாக அமையும். எனவே ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன இவ் விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செவ்வாய் கிழமை இடம்பெற்ற ஊடகசந்திப் பின் போதே அவர் இதனைத் தெரி வித்தார்.

அங்கு தொடர்ந்தும் அவர் குறிப் பிடுகையில், கூட்டு எதிர்க்கட்சியின் சார்பில் நிதி அமைச்சர் மங்கள சமவீரவுக்கு எதிராக நான் வழக்கு தொடரவுள் ளேன்.

காரணம் ஜனநாயக நாட் டில் நிதி மற்றும் ஊடகத்துறை ஒரு அமைச்சின் கீழ் செயற்பட முடியாது. எனவே ஊடகங்களை கறுப்பு ஊடகம் என விமர்சிப்பதையும், அவற்றை கட்டுப்படுத்துவதையும் இந்த வருடத்தில் மங்கள சமரவீர கைவிட வேண்டும்.

அமைச்சரவை மற்றும் அது தொடர்பான வர்த்தமானி வெளி யிடும் அதிகாரம் ஜனாதிபதியிடம் காணப்படுகின்றது. எனவே ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதே எமது கோரிக் கையாகும் என்றார். (ம-3)

## 2019ஆம் ஆண்டு...

நேற்றுக் காலை தலதா மாளி கைக்கு சென்றிருந்த ஜனாதிபதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போது இதனை குறிப்பிட்டுள்ளார்.

மனச்சாட்சிக்கு ஏற்ப நேர்மை யாக சேவையாற்றுவதனூடாக நாட்டை கட்டியெழுப்பும் சவாலை வெற்றிகொள்ள அனைவரையும் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி இதன்போது மேலும் தெரிவித் துள்ளார்.

புதிய வருடப்பிறப்புக்காக ஆசி பெற்றுக்கொண்டதாக இதன்பின் னர் மல்வத்து பீடத்திற்கு சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப் பட்டுவாவே ரீ சுமங்கல தேரரிடம் ஆசிர்வாதம் பெற்றுள்ளார். (ம-3)

## 470 சாரதிகள்...

வாகனம் செலுத்திய 470 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடக பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர இதனை தெரிவித்தார்.

அதேபோல் கடந்த வருடம் டிசம் பர் மாதம் 15ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் 6 ஆயிரத்து 21 பேர் கைது செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## புதுவருட பிற...

வரும் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். 45 வயதுடைய துருக்கி நாட்டுப் பிரஜை ஒருவரே இவ் வாறு காய மடைந்துள்ளார். (ம-3)

## 26 வயது இளை...

கனகரட்ணம் கிசோந் (வயது - 26) என்ற இளைஞனே சடலமாக மீட்கப் பட்டவராவார்.

குறித்த நபர் திருமணமாகி 7 மாதங்களே கடந்த நிலையில் அவரது மனைவி மூன்று மாதக் கர்ப்பிணி எனத் தெரிவிக்கப்படு கின்றது. (ம-10)

## 30 மோட்டார்...

சுமார் 30 மோட்டார் சைக்கிள் களில் 50க்கு மேற்பட்டோர் வாள்களுடன் வருகை தந்ததை அவதானித்த சிலர் ஒன்றிணைந்து அவர்களை மடக்கிப்பிடிக்க முற் பட்டனர்.

சுதாகரித்துக் கொண்ட குழு வினர் அங்கும் இங்கும் சிதறி ஓடியுள்ளனர். அவர்களில் 4 பேர் மடக்கிப்பிடிக்கப்பட்டதுடன் 7 மோட் டார் சைக்கிள்களும் மீட்கப்பட் டன.

மடக்கிப் பிடிக்கப்பட்ட 4 பேரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத் துச் செல்லப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ம-101)

## புதிய வருடத்துக்கான அபிவிரு...

நேற்று முற்பகல் பொலநறுவை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற "எழுச்சிபெறும் பொலநறுவை" மாவட்ட அபிவிருத்தி-செயற்திட்டத் தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

வறுமை, போதைப்பொருள் பாவனை ஆகியவற்றை ஒழிப் பதற்காக மாவட்டத்தில் நடை முறைப்படுத்தப்படும் வேலைத்திட் டங்களின் முன்னேற்றம் மற்றும் அரச நிறுவனங்களில் நிலவும் மனிதவள தட்டுப்பாட்டிற்கு தீர்வு காணல் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

புதிய பஸ்தரிப்பு நிலைய மொன்றை நிர்மாணித்தல், கழிவு முகாமைத்துவ செயற்திட் டம் உள்ளிட்ட பொலநறுவை மாவட் டத்தின் அபிவிருத்தி செயற்பாடு கள் குறித்தும் இதன்போது கலந் துரையாடப்பட்டது.

நிலவும் சாதகமான காலநிலை காரணமாக விவசாய நடவடிக்கை கள் செழிப்படைந்துள்ளமையினால், மாவட்டத்தின் விவசாய அபிவிருத் திக்காக "எழுச்சிபெறும் பொல நறுவை" செயற்திட்டத்தினால் விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

மரநடுகை செயற்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாகவும் கவனம் செலுத்தியதுடன், மாகாண கல்வி காரியாலயம், மாவட்ட செயலகம் ஆகியன ஒன்றிணைந்து பாடசாலை மாணவர்களுக்கு மரக்கன்றுகளை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி இதன்போது ஆலோசனை வழங்கி னார்.

பொலநறுவை பொத்குல்விகாரை வளாகத்தில் வியாபார நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ள எட்டு வியா பாரிகளுக்கான வியாபார கூடங் களையும் ஜனாதிபதி இதன்போது வழங்கிவைத்தார்.

பொலநறுவை மாவட்ட செய லாளர் உள்ளிட்ட அரச அதி காரிகள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ம-3)













A/L-2k21,2k20,2k19

DMI
JAFFNA

ஊடகக்கற்கை
K.V. நவநீதன்

(C-4877)

A/L 2021

கலை|வர்த்தகம்
தொழில் நுட்பம்

NEC

பருத்தித்துறை வீதி, மணிக்கூட்டு வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்

ஆரம்பம்: 06.01.2019 ஞாயிறு காலை 8.00 மணி

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

A/L 2018 உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில்
யாழ் மாவட்டத்தில் முன்னனி பெறுபேறுகளுடன்...

A/L DAY CLASS NEC

ஆரம்பம்: 02.01.2019 புதன் காலை 7.00 மணி

(C-4901)

A/L பரீட்சையில் சித்தியில்லையா...?
பல்கலை அனுமதி கிடைக்கவில்லையா?

ரூ. 57,600 - ரூ. 570,441 சம்பளத்துடன்
டுபாய், குவைத், ஓமான், பாஃரேன், கட்டார்
நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, கனடா

Work Visa & Student Visa
ஏற்பாடுகளுடன்

ஹொட்டேல் முகாமைத்துவம்
Tourism & Hospitality Management (3 மாதம்)

குறுகிய கால தொழிற்துறைப் பயிற்சியுடன்
உடனடி வேலைவாய்ப்பு!

Restaurant Supervisor / Manager, Steward, Kitchen Helper, Waiter, Housekeepers, Barista, Sandwich Maker, Commis I, II, III & Chef

மேலதிக விபரங்களை அறிய
ஹொட்டேல்துறை & வெளிநாட்டு வேலைவாய்ப்பு கண்காட்சி & கருத்தரங்கு
ஜன. 5 10 மணி

0777 324 004, 021 222 00 11

No.1 Award Winning Institute of the North
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
Sri Lanken Entrepreneur of the Year 2017

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.sikaram.lk Sikaram Academy

Techno World

வெலிங்டன் சந்தி, பெருமாள்
கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

A/L தொழில்நுட்பப்
பிரிவு

A/L 2021, 2019
Day Class

புதிய பிரிவு ஆரம்பம்
05.01.2018 சனிக்கிழமை
9.00 am

077 017 5346

(C-4960)

DCM யாழ்.நகர்

வேம்படி மகளிர்
பாடசாலை அருகாமை

A/L 2021

வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்
06.01.2019 (ஞாயிறு)
9.00 am

பொருளியல்
S.ஜெயக்குமார்
கணக்கீடு S.தவா
வணிகக்கல்வி N.S.கபில்

தொ.இல. 077 011 9434

(6878)

Techno World

வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் வீதி, யாழ்.
0770175346

A/L 2018 தொழில்நுட்பபிரிவில் சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்லும் 68 மாணவர்களையும் வாழ்த்துகிறோம்.

அனைத்து மாவட்டங்களிலும் முதலிடம் Techno World மாணவர்களே....!

உயிர்முறை தொழில்நுட்பம்

| பெயர் | மாவட்டநிலை |
|---|---|
| கலக்சிகா | 01 (யாழ்ப்பாணம்) |
| ரஜிதா | 01 (முல்லைத்தீவு) |
| விதுர்சன் | 01 (கிளிநொச்சி) |

உயிர்முறைமை தொழில்நுட்பம்

தனுசியன் - 03
ரிஜூயா - 04
கிரிஜனா - 05
கிசோரகா - 06
அசமா பானு - 07
கம்சிகா - 07
நளாயினி - 07
நிலலன் - 08
கஜானி - 09
சுகன்யா - 11
ஜெனிற்றா - 11
டனுசிகா - 11
நிசாந்தினி - 11
கேசங்கா - 12
சலாகி - 12
யதுர்சன் - 13
வேணுயன் - 15
கிசானிகா - 17
சாருகா - 18
சாரிகா - 18
பரணிகா - 20
ஜிந்துசா - 20
கலக்சன் - 22
ருத்திகா - 21
கிருஸ்திகா - 23
டர்சிகா - 24
சதுர்ஜனா - 29
பவிக்சன் - 25
நிலாஜினி - 28
கைசிகா 30
லவன் - 32
ஜெயசித்ரா - 33
கிரிஸ்ரி திவ்யா - 33
பயிசானினி - 36
நிலவழகன் - 38
தமிழரசி - 39
தரங்கிதா - 42
பிரவீனா - 42
வினோதா - 45
பூர்விகா - 52
ராஜாஜி - 55
தசாரா - 51

பொறியியல் தொழில்நுட்பம்

விசராதன் - 04
டக்சன் - 06
நதர்ஷன் முகமட் சர்வீன் - 06
வேணுயன் - 08
திவாகர் - 09
போல் யேசரட்ணம் - 10
துஜீவன் - 13
தமிழினியன் - 21
ஜிந்துசன் - 25
ஜனிஸ்ரன் - 27
கோகுலன் - 29
கஜந்தன் - 34
துசியந்தன் - 35
டிலக்சன் - 41
விஜித் - 43
கொலின் - 46
ஜோன் கில்டன் - 52
ததுர்சாயினி - 56

தொழில்நுட்ப பிரிவில் இவ்வருடம் அதிகளவு மாணவர்களை
பல்கலைக்கழகம் அனுப்பிய ஒரே ஒரு தனியார் கல்வி நிலையம்

A/L 2021,2019,Day Class
புதியபிரிவு 05.01.2019 9.00a.m

FLC FRENCH LANGUAGE CENTRE

பிரெஞ்சு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, அரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 05.01.19 சனி 10 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி.
0779 789 456 / 0762 669 614
ஆரம்பம் : 07.01.19 3.30pm

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

வர்த்தகப் பிரிவு
DMI
JAFFNA
ஜனவரி-3
கணக்கீடு D.Sam
பொருளியல் S.S. சிறி
வணிகக்கல்வி T.S. ரிஷி
A/L 2k21
காலை - 8
(C-4872)

பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு

எமது EDM நிறுவனம் தனது புதிய பல நிறுவனங்களிற்கு 20 இற்கு மேற்பட்ட பதவி வெற்றிடங்களிற்கு பயிற்சியுடன் வேலை வாய்ப்பினை வழங்கவுள்ளது.

(யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி,
முல்லைத்தீவு, வவுனியா)

| | | |
|---|---|---|
| பதவிகள் | :- | அலுவலகர், மேற்பார்வையாளர், உ.முகாமையாளர், முகாமையாளர் |
| தகைமை | :- | O/L, A/L, மேற்தகைமையுடையோர். |
| குறிப்பு | :- | இவ்வருடம் O/L, A/L பரீட்சைக்குத் தோற்றியவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும் |
| சம்பளம் | :- | 15,000 தொடக்கம் 45,000 வரை |

தொடர்பு :- 0772986763, 0771263805

கலை, வர்த்தகம், தொழில் நுட்பம்
DMI
JAFFNA
ஜனவரி-3 காலை-8
DAY CLASS
(C-4872)

கலை, வர்த்தகம், தொழில் நுட்பம்
DMI
JAFFNA
ஜனவரி-3 காலை-8
A/L 2k21
(C-4872)

A/L 2021

கணித, விஞ்ஞான வகுப்புக்கள்

பிரபல பாடசாலை ஆசிரியர்களினால்
இரு மொழிகளிலும் கற்பிக்கப்படும்

| | | |
|---|---|---|
| ஆரம்பம் | : | 10.01.2019 (வியாழக்கிழமை) 9.00 A.M |
| இடம் | : | 442, K.K.S வீதி, யாழ்ப்பாணம். |

இணைந்த கணிதம்:
திரு.S.இலட்சுமணன் B.Sc

பௌதிகவியல்:
திரு.A.இரவீந்திரன் M.Sc

இரசாயனவியல்:
திரு.T.பிரதீபன்
B.Sc (Hons), M.Ed

அனுமதிக்கு முந்துங்கள்.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

A/L 2021 கணக்கீடு
Mr. BALAKAJEN
(யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர்)

KBK CENTRE

| கொழும்புத்துறை | கந்தர்மடம் |
|---|---|
| Sat & sun 4-5pm | Tue &Fri 5-6pm |
| ஆரம்பம் 05.01.2019 சனி மாலை 4 மணி | ஆரம்பம் 04.01.2019 வெள்ளி மாலை 5 மணி |

075 077 5660

(6872)

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்,
பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413

(C-956)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-4942)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(6879)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.